கல்கி

KALKI 18.6.2000 ரூ. 5.00



"அடிமை ஆட்சி இனி இல்லை!"

கொதிக்கிறார் திரைப்பட விநியோகஸ்தர்கள் சங்கத் தலைவர் ராஜன்



பரதம் இலவசம்!

பவர்ஃபைனான்ஸ்

தமிழ்நாடு அரசு நிதி நிறுவனம்

மதுரையில் நடத்தும்

டெபாசிட் திரட்டும் முகாம்

இடம் : ஒய்.எம்.சி.ஏ., மெயின்கார்டு சதுக்கம்,
மதுரை - 625 001.
தொலைபேசி : 746649 / 740591
நாள் : 15-6-2000 முதல் 17-6-2000 வரை.
(நேரம் : காலை 9.00 மணி முதல்
மாலை 7.00 மணி வரை)

பாதுகாப்பான முதலீடு
நிலையான வருமானம்

12.12%	**16.34%**
36 மாதங்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட காலத்திற்கு - மாதாந்திர வட்டி 12.00%. 12 மாதங்களுக்கு காலாண்டு வட்டி 10.59%. 24 மாதங்களுக்கு காலாண்டு வட்டி 11.10%	60 மாதங்களுக்கு (மாதாந்திர கூட்டுவட்டி ஆண்டிற்கு 12.00%)

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் :

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும்
அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (பவர்ஃபின்)
(தமிழ்நாடு அரசு நிதி நிறுவனம்)

பதிவு அலுவலகம் : எண் 84, டி.டி.கே சாலை,
ஆழ்வார்ப்பேட்டை, சென்னை - 600 018.
தொலைபேசி : 4997689, 4995648. ஃபேக்ஸ் : 044-4982894

28-9-99 தேதியிட்ட எகனாமிக் டைம்ஸ் இதழில் வெளியிடப்பட்ட முந்தைய விளம்பரத்தின் தொடர்ச்சியாக இந்த விளம்பரம் வெளியிடப்படுகிறது.

DIPR/815/DISPLAY/2000

"Also available on the Internet" www.tn.gov.in / www.chennaionline.com / www.aaraamthinai.com / www.southindia.com





● முரசொலி மாறனுக்கு ஒரு தனிப்பட்ட பிரச்னை! தாம் விரும்பிய நபரைத் தமது துறைச் செயலாளராக நியமிக்க மத்திய அரசு இணங்கவில்லை. மாறனின் விருப்பம் விழுந்திருப்பது பி. சங்கர் பேரில். 1966ம் வருட தமிழ்நாடு பிரிவு ஐ.ஏ.எஸ் அதிகாரி. இவர் ரொம்ப ஜூனியர் என்பது பிரதமர் அலுவலகத்தின் கருத்து. 'ஒரு செயலரை தம் விருப்பப்படி இவரால் நியமித்துக் கொள்ள முடியவில்லையே!' என்று இலாகா அதிகாரிகள் சிலர் கமெண்ட் அடிக்கிறார்கள்.

நிறைவேறாத மாறனின் விருப்பம்!



● சுகாதாரத் துறையிலிருந்து நிலக்கரித் துறைக்குத் தூக்கிப் போடப்பட்ட பா.ம.க அமைச்சர் சண்முகம் அப்பொறுப்பை ஏற்காமல் சண்டி செய்தது தெரியும். பின்னர் டாக்டர் ராமதாசும் வாஜ்பாயும் தொலைபேசியில் 'நல்லிணக்க' பேச்சு வார்த்தை நடத்தியதும் சண்முகம் சீட்டில் வந்து உட்கார்ந்ததும் தெரியும். இடைப்பட்ட நேரத்தில் பிரதமர் கோடைக்காக மணாலி போய்விட; சுகாதாரத் துறைக்கு அமைச்சராக நியமனமான ஸி.பி. டாக்கூர் தமது நாற்காலி இன்னமும் காலி செய்யப்படவில்லையே என்று கர்ஜித்து ரகளை செய்திருக்கிறார். தற்போது அவரவருக்குரிய நாற்காலிகளிலிருந்தாலும் சண்முகம் புலம்புவது நின்றபாடில்லை. 'தமது இலாகா மாற்றம் மாறன் - வாழப்பாடி - ரங்கராஜன் குமாரமங்கலம்

கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com ஈ மெயில் : kalkiweekly@vsnl.com

விட்மனா? விடமினா?

ராஜீவ்காந்தி, பிரதமராக இருந்தபோது அவரது முக்கியமான பேச்சுக்களை எல்லாம் எழுதிக் கொடுக்கும் பணியைச் செய்தவர் மணிசங்கர் ஐயர்தான். எழுதிய பேச்சுப் பிரதிகளை மறுபடி படித்து, திருத்தித் திருத்தி, தமக்குத் திருப்தி ஏற்பட்ட பின் ராஜீவ் காந்தியின் பார்வைக்கு அவர் அனுப்பி வைப்பார். பதினேழு தடவை ஒரு பேச்சுப் பிரதியை திருத்தி எழுதியதுகூட உண்டு.

இந்திராகாந்திக்கும், பேச்சினை தயார் செய்து கொடுக்க பிரத்யேக நபர்கள் இருந்தனர். ஒருதடவை பெரு நாட்டுக்குப் போன போது, தாம் அங்கு பேச வேண்டிய பேச்சில் ஒரு குறிப்பிட்ட கவிதை வரிகளைச் சேர்க்க வேண்டும் என்று சொல்லி விட்டார். பிரதமர்



• விட்மன்

அலுவலக அதிகாரிகள் அந்தக் கவிதைப் புத்தகத்தைத் தேடிப் பிடித்து குறிப்பிட்ட வரிகளைச் சொற்பொழிவு ஸ்கிரிப்டில் சேர்க்க அரை நாள் உழைக்க வேண்டியிருந்தது.

சரி! இப்போது, வாஜ்பாய்க்கு, பேச்சுகள் தயார் செய்து கொடுப்பது யார்? பிரதமர் அலுவலக அதிகாரிகள், காஞ்சன் குப்தா, சுசீந்திர குல்கர்னி என்ற இரு பத்திரிகையாளர்கள், பிரபால் கக்லா என்ற ஐ.எஃப்.எஸ். அதிகாரி ஆகியோர்தான். சில சமயங்களில் அருண் ஷோரியும் உதவுவது உண்டு.

வாஜ்பாயே ஒரு கவிஞர் என்றாலும் பிரதமர் ஆனபின் அவரது பேச்சுக்களில் முன்பிருந்த ஆழமும், அழுத்தமும், நகைச்சுவையும் காணாமல் போய் விட்டது என்கிறார்கள். அது மட்டுமா, உச்சரிப்பில் சில சமயம் தவறு ஏற்பட்டு விடுகிறது. கிளின்டன் வருகையின் போது, பாராளுமன்றத்தில் வாஜ்பாய் பேசும் போது, வால்ட் விட்மன் என்ற கவிஞரைக் குறிப்பிட்டபோது, பிரதமர் 'விடமின்' என்று சொன்னதை இதற்கு உதாரணம் காட்டுகிறார்கள்!

— சி.எம்

இணைந்து செய்த சதி' என்று சண்முகம் குற்றம் சாட்டுவதாகச் சொல்கிறது தர்பார் வட்டாரம். "இதற்காக டாக்டர் அரசை எதிர்க்க முடிவு செய்வார். எங்கள் மூன்று எம்.பிக்களும் எதிர்ப்பார்கள்" என்று இங்கே சில 'அரசியல் நோக்கர்கள்' 'ஆசை'யாகச் சொல்கிறார்கள். 'மூன்று எம்.பி, நாலு எம்.பி கட்சிகளெல்லாம் அரசை இப்படி மிரட்டுவதாவது!' என அத்வானி பதில் சொல்லியிருக்கிறாராம்.

● 'மானியங்களைக் குறைக்கக்கூடாது!' என்று முதல்வர் வீட்டுக்குப் பாத யாத்திரை நடத்திய சோனியாகாந்திக்கும் காங்கிரஸின் நவீன பொருளாதார தளபதி மன்மோகன் சிங்கிற்கும் ஏற்பட்ட கருத்து வேற்றுமை எத்தனை தூரம் போனது...? ம.மோ.சிங் கட்சிப் பொருளாதாரக் குழுவின் தலைமைப் பொறுப்பை நிராகரிக்கும் அளவுக்குப் போனது! தாராளமயமாக்கலின் தந்தைக்குப் பதில் ஏழைப் பங்காளி இமேஜ் கொண்ட பிரணாப் முகர்ஜி, சென் குப்தா ஆகிய இருவர் அமர்த்தப்பட... அவர்களது இறுதி அறிக்கையை மேற்பார்வையிடும் பணி யாருக்குத் தெரியுமா...? சாக்ஷாத் ம.மோ.சிங்குக்கேதான்!

● ஜார்ஜ் பெர்னாண்டஸின் கோட்டையை ஜஸ்வந்த்சிங் - அருண்சிங் இரட்டையர் கூட்டணி ஆக்கிரமித்து விட்டதாக தர்பார் வட்டாரங்களில் பேச்சு. விஷ்ணு பகவத் விவகாரத்துக்குப் பிறகு பெர்னாண்டஸினால் ராணுவ அதிகாரிகளின் நல்லாதரவைப் பெற முடியவில்லையாம். அருண்சிங், ராஜீவ் காலத்திலேயே பாதுகாப்பு வட்டாரங்களில் நற்பெயர் வாங்கியவர் - இந்தப் பின்னணி உதவியிருக்கிறது.

● இஸ்ரேல் போகிறார் அத்வானி. அங்கே பயங்கரவாத எதிர்ப்பு அமைப்பான 'மோஸாத்'துடன் ஆலோசனை நடத்தி, இந்தியாவில் பயங்கரவாதத்தை ஏதாவது செய்ய முடியுமா என்று பார்க்கத்தானாம் இந்தப் பயணம்.

— இந்த்ரப்ரஸ்தன்

வி. ஐ. பி. விருப்பம்

கலைஞர் இல்லாத கல்யாணம்!

உட்கட்சித் தேர்தலில் வென்று 1974ல் மாவட்டச் செயலாளராக ஆனேன். அப்போது நான் சட்டமன்ற உறுப்பினரும்கூட. சில மூத்த அமைச்சர்கள் என் தொகுதிக்கான வளர்ச்சிப் பணியை நிறைவேற்றத் தடைக் கற்களாக இருந்தார்கள். போதாதற்கு மாவட்டக் கழகப் பணியில் தலையிட்டு குழப்பம் விளைவித்தார்கள். இதனால் ஏற்பட்ட சலிப்பில் சட்டமன்ற உறுப்பினர் பதவியை நான் ராஜினாமா செய்துவிட்டேன். அதை சபாநாயகர் ஏற்றுக் கொள்ளும்படி செய்துவிட்டார்கள் அந்த மூத்த தலைவர்கள்.

நான் கலைஞரின் தம்பியாகவும், மாவட்டச் செயலாளராகவும் பொறுப்பைத் தொடர்ந்தேன். அந்தச் சமயம் நாட்டில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டது. கழகம் ஆட்சியில் இருந்ததால் உடனடியாக எந்தப் பாதிப்பும் இல்லை. கலைஞர் தலைமையில் என் மூத்த மகள் மகேஸ்வரியின் திருமணம் 1976 பிப்ரவரி ஆறாம் தேதி ஏற்பாடாகியிருந்தது. ஆனால் 1976 ஜனவரி 31ம் தேதியன்று தி.மு.க. ஆட்சியைக் கலைத்தார் இந்திராகாந்தி. தமிழகமெங்கும் தி.மு.கவினர் கைது செய்யப்பட்டு அடக்குமுறைக்கு ஆளானார்கள். எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அ.தி.மு.க.வினரும், காங்கிரஸ்காரர்களும் என்னை மிசாவில் சிறைப்பிடிக்கப் போலீஸைக் குடைந்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் அப்போது கலெக்டராக இருந்த சுவாமிநாதனும், எஸ்.பி.ஆக இருந்த ரமணியும் "ஆறுமுகம், மகள் திருமணத்தை வைத்திருக்கிறார். அது முடிந்ததும் கைது செய்யலாம்; அவர் எங்கும் போய் விடமாட்டார்" என்று மேலிடங்களுக்குப் பதில் சொல்லி விட்டார்கள்.

எனக்கு மற்றொரு கவலை தொற்றிக் கொண்டது. திருமணத்தை நடத்தி வைக்க கலைஞர் சேலம் வருவாரா? ஏனென்றால் கலைஞரை யாரெல்லாம் சந்தித்தார்களோ அவர்கள் கைதாகிக் கொண்டிருந்தார்கள். இந்த நிலையில் என் மகள் கல்யாணத்திற்கு வந்தால் நான் உட்பட சேலம் தோழர்கள் பலர் கைதாவது நிச்சயம் என்று, கலைஞர் நினைத்திருக்கிறார். இதே காரணமாக மூத்த தலைவர்கள் சிலரும் 'போக வேண்டாம்' என்று அட்வைஸ் செய்திருக்கிறார்கள். திருமணத்திற்கு முதல்நாள் எனக்குப் போன் செய்து தாம் வர முடியாத நிலையிலிருப்பதைத் தெரிவித்து, வந்தால் தொடரக்கூடிய விளைவுகளையும் எடுத்துச் சொன்னார் கலைஞர். இந்தச் சூழ்நிலையில் கலைஞர் தலைமையில் என் மகள் திருமணம் நடக்கவில்லை. இதற்குப் பின்னால் என் வீட்டில் நடந்த அனைத்துத் திருமணங்களையும் கலைஞர்தான் நடத்தி வைத்தார். இருந்தும் மூத்த மகள் திருமணத்தைக் கலைஞர் நடத்தி வைக்க வாய்ப்பில்லாமல் போனது இன்னமும் பெரிய குறையாகவே மனத்தில் இருக்கிறது.

— ரமா

படம்: ராஜன்



அமைச்சர்

வீரபாண்டி ஆறுமுகம்

தமிழ்ப் பெண்ணின் சாதனை!

புற்றுநோயைக் குணப்படுத்த

காான்சர் நோய்க்கு பக்க விளைவுகள் அற்ற ஒரு சிகிச்சையைக் கண்டுபிடிக்க உலகமே பணத்தை வாரியிறைத்துக் கொண்டிருக்க, எல்லோரையும் முந்திக் கொண்டு ஒரு புதிய மருந்தை கண்டு பிடித்திருக்கிறார் ஒரு தமிழ்ப் பெண்! சென்னை அபிராமபுரத்தில் உள்ள வீட்டில் அவரைச் சந்தித்தோம்.

“ரோகிணி பிறந்தது வளர்ந்தது படித்தது எல்லாம் டெல்லியில். “பள்ளியானாலும், கல்லூரியானாலும் படிப்பில் ஆராவாரம் காட்டாதவள். இத்தனை அமைதியானவள் இவ்வளவு பெரிய சாதனை செய்திருக்கிறாள் என்று கேள்விப்பட்டதும் ஆச்சரியத்திலும் ஆனந்தத்திலும் ஆழ்ந்து போனேன்” என்கிறார் ரோகிணியின் தந்தையான முத்துசாமி.

“டெல்லி ஹிந்து கல்லூரியில்தான் பி.எஸ்சி கெமிஸ்டரி படித்தேன். அங்கேயே எம்.எஸ்சி பயோடெக்னாலஜி முடித்தேன். இந்தப் படிப்புதான் என்னை ஒரு ஆராய்ச்சி மாணவியா மாத்தினது. அப்புறம் யூனிவர்சிட்டி ஆஃப் கொலராடோவில் போஸ்ட் டாக்டரேட் பெலோ முடிச்சேன். பயோகெமிக்கல் ஆராய்ச்சியில் ஏதாவது சாதிச்சே ஆகணும்கிற வெறி வந்துடுச்சி. பிறகு யூனிவர்சிட்டி ஆஃப் வெர்ஜீனியா, ஸ்கூல் ஆஃப் மெடிசனில் ரிசர்ச் பெலோவாக சேர்ந்துவிட்டேன். இங்கே கடந்த மூணு வருஷமா செய்த ஆராய்ச்சியின் பலனாகத்தான், புற்று நோய்க்கான புதிய கெமிக்கல் காம்பௌண்டைக் கண்டு பிடிக்க முடிஞ்சது” என்றவரிடம், கீமோதெரபிக்கு மாற்றாக இப்போ நீங்க கண்டுபிடிச்சிருக்கிற மருந்தைப் பத்திச் சொல்லுங்களேன் என்றதும் பேசத் தொடங்கினார்.

“மனிதன் மீது தயவு தாட்சண்யம் காட்டாத நோய்களின் டாப்டென் வரிசையில் முதல் இரண்டு இடத்தை நிரந்தரமாகப் பிடித்துக் கொண்டிருக்கும் 'வேம்பயர்' டிசீஸ் என்றால் அவை எச்.ஐ.வியும், புற்றுநோயும்தான். எச்.ஐ.வியால் தாக்கப் பட்டவர்கூட, மன நிலையையும், உடல்நிலையையும் சரிவர பராமரிக்கும் 'டேக்-இட் ஈஸி' மனிதராக இருந்தால் நான்கு முதல் பன்னிரண்டு ஆண்டுகள் உயிர் வாழலாம். ஆனால் புற்றுநோய் ஒரு டெட்லைன் கில்லர். நான் குறித்தால் குறித்ததுதான். புற்றுநோய்க்கான ஒரு சில சிகிச்சைகளில் கீமோதெரபி மீதுதான் இப்போதைக்கு அதிக நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். இதில் கெமிக்கல் டிரக்தான் பயன்படுத்தப்படுகிறது. கூடுதல் சிகிச்சையாக கதிர்வீச்சு மூலம் சிகிச்சை தருகிறார்கள். ஆனால் கீமோதெரபியில், கேன்சர் செல்லுடன் சேர்ந்து நல்ல செல்லும் பாதிக்கப்படுகிறது. இதனால் முடி கொட்டுதல், எடை குறைதல், பசியின்மை, என கொடுமையான பக்க விளைவுகளையும் வலிய ஏற்றுக் கொள்ள வேண்டி இருக்கிறது! இது



• ரோகிணி



• ஆராய்ச்சிக்கூடத்தில் ரோகிணி

புது மருந்து!

தான் எனது ஆராய்ச்சிக்கான உந்துதல்" என்ற ரோகிணிக்குக் கடந்த ஆண்டின் இளம் கண்டு பிடிப்பாளர் விருதை அமெரிக்கா வழங்கி கௌரவித்திருக்கிறது.

"ரத்தத்தில் உள்ள நல்ல செல்கள் பாதிக்கப்படாமல் கெமிக்கல் டிரக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற முயற்சியில்தான் எனக்கு ஐம்பது சதவிகித வெற்றி கிடைத்திருக்கிறது. எஞ்சிய ஐம்பது சதவிகிதத்தையும் வென்று விடலாம் என்று திடமான நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது!'' என்றவரிடம், நீங்கள் கண்டுபிடித்த மருந்தின் பெயர் என்ன? என்றோம் ஆர்வமாக...

"ஆராய்ச்சிகள் முழுமையாக முடிந்து, காப்புரிமை வாங்கும் வரை அது தொடர்பான விரிவான விவரங்களை வெளியிடுவது ஆபத்தானது... இருந்தாலும் அந்த மருந்தின் செயல்பாடுகளைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். 'ஆன்டி பயாடிக் ரெசிஸ்டென்ட் பேக்டீரியா' என்ற அடிப்படையில்தான் நான் ஆராய்ச்சியைத் தொடங்கினேன். அந்த வகையில் நான் கண்டுபிடித்துள்ள பயோகெமிக்கல் பாக்டீரியா கேன்சருக்கு எதிரான எட்டுவித ஆன்டி கேன்சர் ஏஜென்டுகளை உற்பத்தி செய்து, கேன்சர் செல்களை மூக்குப் பிடிக்கச் சாப்பிடுகிறது. அதே நேரத்தில் நல்ல செல்களுக்கு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை."

இதை எவ்வாறு ஆராய்ந்து உறுதி செய்து கொண்டீர்கள் என்றதும் தமது அமெரிக்க ஆராய்ச்சிக் கூடத்திற்கே நம்மையும் அழைத்துப் போனது மாதிரி விளக்கினார்.

''இது போன்ற ஆன்டிபேக்டீரியல்



மருந்துகளை கண்டுபிடிக்கும்போது சுண்டெலி களை மாடலாகக் கொண்டுதான் சோதனை செய்வோம். கேன்சர் செல்களை சுண்டெலி யின் மூளையில் செலுத்தி செயற்கையாகப் புற்றுநோய்க் கட்டிகளை உருவாக்கினோம். பின்னர் அந்தக் கட்டிகளில் நேரடியாகவே நாங்கள் கண்டுபிடித்த மருந்தைச் செலுத்தி னோம்.. சில தினங்களில் கட்டிகள் இருந்த இடம் தெரியாமல் கரைந்து போய்விட்டன. நல்ல செல்கள் எந்த விதத்திலும் பாதிக்க வில்லை''

இதைக் கண்டுபிடித்ததும் உங்கள் மன நிலை எப்படி இருந்தது என்றதும், கண்மணி கள் ஒளிவீச, முகத்தில் ஒருமுறை கம்பீர ரேகைகள் ஓடி மறைந்தன. ''முதல்லே இந்தியா வுக்கு போன் செய்து அப்பா அம்மாவுக்கு விவரத்தைச் சொன்னேன். சந்தோஷத்தில் ஒரு வாரம் சாப்பாடே இறங்கவில்லை.'' என்ற வரை இடைமறித்து ஆராய்ச்சியின் அடுத்தக் கட்டம் என்ன? என்றோம்.

''எலியோட மூளைக்குள் இருந்த கட்டி களுக்கு நேரா செலுத்தினமாதிரி மனிதர்களுக் குச் செலுத்த முடியாது இல்லியா, அதனால் அடுத்து வாய் வழியாக உணவு மூலம் இந்த மருந்தை எலிகளுக்குக் கொடுக்கும் சோதனை தொடங்க இருக்கிறோம். இந்த ஆராய்ச்சி மூலம் இதயம், கிட்னி, நுரையீரல் போன்ற முக்கிய உறுப்புகள் பாதிக்காமல் இருக்கான்னு பார்க்கணும். பாதிப்பு இல்லைன்னு தெரிஞ் சதும், மருந்தின் அளவைக் கூட்டுவோம். இதிலும் வெற்றி கிடைத்து விட்டால், இறுதிக் கட்டமாகக் குரங்குகளைக் கொண்டு, அவற்றிக்கும் கொடுத்து ஆராய்ச்சியை நிறைவு செய்வோம். இதில் பக்க விளைவுகள் மிகக் குறைவாக இருந்தால் மட்டுமே 'கிளினிக்கல் டிரையல்' போக முடியும்''

அது என்ன கிளினிக்கல் டிரையல்?

''கேன்சரால் பாதிக்கப்பட்ட மனிதர் களுக்கு கொடுத்துப் (துணிவுடன் முன் வரு பவர்களுக்கு மட்டும்) பரிசோதனை செய்வது. இது அக்னிப் பரீட்சை மாதிரி. இதிலும் வென்ற பிறகே எஃப்.டி.டி. எனப்படும் ஃபுட் அண்டு டிரக் அட்மினிஸ்ட்ரேஷன் எனப்படும் சர்வதேசக் காப்புரிமை வழங்கும் நிறுவனத் திடம் காப்புரிமைக்காக விண்ணப்பிக்க முடியும்.'' என்றார்.

காப்புரிமையின் மொத்த பலனும் உங்களுக் குத்தானே வந்து சேரும் என்று கேட்டதும், அப்பாவித்தனமாக நம்மைப் பார்த்து ஒரு சின்னப் புன்முறுவல் பூத்தவர் அதிர்ச்சியான விவரங்களை வெளியிட்டார்.

''காப்புரிமை பெறுவது முழுக்க முழுக்க வழக்குகள் மூலம்தான். நம்மைப் போலவே கண்டுபிடித்திருப்பதாகப் பலர் எதிர்த்து வழக் குப் போடுவார்கள். எனவே வழக்கறிஞர்களின் கட்டணமாக, காப்புரிமையில் 40 சதவிகிதம் போய்விடும். பல்கலைக்கழகத்திற்கு இருபது சதவீதம் போய் விடும். இப்போது இந்த ஆராய்ச்சிக்குப் பணத்தைக் கொட்டும் நேசண்ட் பார்மசூட்டிகல் என்ற அமெரிக்க நிறுவனத்திற்கும், இந்த மருந்தை மாத் திரையாக, கேப்சூலாக அல்லது ஊசி மருந்தாக உருவாக்கும் (இந்த ஆராய்ச்சிக்கு மட்டும் பல லட்சம் டாலர் செலவாகுமாம்) மருந்து கம் பெனிக்கும் சேர்த்து இருபது சதவீதம் போய்விடும். எஞ்சிய இருபது சதவீதம்தான் எனக்கும், எனது பல்கலைக் கழக ஆலோ சகருக்கும் கிடைக்கும்'' என்றவரிடம் அதற்கு இன்னும் எத்தனை ஆண்டுகள் பிடிக்கும் என் றோம். கோடை விடுமுறையை சென்னையில் பெற்றோர்களுடன் செலவிட்டு விட்டு அவசர அவசரமாக அமெரிக்கா பறக்கிறார்.

ரோகிணி ஆராய்ச்சியாளராகப் பணி யாற்றி வரும் வெர்ஜினியா ஸ்கூல் ஆஃப் மெடிசனில், எச்.ஐ.விக்கான மருந்து கண்டு பிடிப்பதில்தான் அதிக பணத்தையும் நேரத் தையும் செலவிடுகிறார்களாம். தமது அடுத்த இலக்கு எச்.ஐ.விக்கு மருந்து கண்டுபிடிப்பது தான் என்றவரிடம் இந்த ஆராய்ச்சியை ஏன் நீங்கள் இந்தியாவில் செய்து நாட்டுக்கு அர்ப்பணித்திருக்கக் கூடாது? என்றோம்.

''இந்தியா திறமையாளர்கள் உள்ள நாடு... ஆனால் அந்தத் திறமைக்குத் தீனி போடும்படி இங்கு பணம் செலவிட வழியில்லை. இங்கு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்காக ஒதுக்கப் படும் தொகை என்பது மிகப் பரிதாபமான ஒன்று. இதற்கான நிதி ஒதுக்கீடு முக்கியத்துவம் பெற்று அடிப்படை வசதிகள் பெருகும்போது தான் நிலைமை மாறும். அதுவரை அமெரிக்கா போன்ற நாடுகளை நாடுவதைத் தவிர வேறு வழியில்லை'' என்றவரிடம் மேற்கொண்டு என்ன கேட்க?

— ஆர்.சி. ஜெயந்தன்

படங்கள்: **வெங்கடேஷ்**



விவேகானந்தர் தேசீய இயக்கம்



(ஸ்ரீசாரதா சக்திபீடத்தின் கிளை நிறுவனம்)
எண். 72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்.
சென்னை–63. Ph. No. 2376129

பேரன்புடையீர்!

வணக்கம். கிராமப்புறத்திலுள்ள ஏழை மாணவ மாணவியருக்காக, ஆன்மிக பயிற்சியுடன் கூடிய மாலை நேர கல்வி பயிற்சிக்காக (டியுஷன்) விவேகானந்தர் தேசீய இயக்கம் என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கிராமப்புறத்திலுள்ள படித்த் பட்டதாரிகளை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு ஆன்மிகம் மற்றும் சமுதாய சேவைப்பற்றிய தீவிர பயிற்சி முகாம் 12 நாட்கள் நம் குரு குலத்தில் நடத்தப்பட்டது.

இம் முகாமில் பயிற்சி பெற்றவர்களைக் கொண்டு தருமபுரி மாவட்டத்தில் 51 கிராமங்களில் மாலை நேர டியுஷன் வகுப்பும், ஆன்மீக கூட்டு வழிபாடும் 2700 ஏழை மாணவ மாணவியர்களுக்கு நடத்தப்பட்டு வருகின்றது.

இம் மாணவர்களுக்கு ஒவ்வொரு மாதமும், பௌர்ணமி நாளன்று "ஸ்ரீராமகிருஷ்ணர் மாதந்திர பௌர்ணமி கூட்டு வழிபாடு திட்ட"த்தின் கீழ் ஒரு வேளை நல்ல விருந்து அளிக்கப்படுகிறது.

மேற்படி உணவிற்காக நன்கொடை அளித்த அன்பர்களின் வளமையான வாழ்விற்கு 2700 மாணவர்களும் கூட்டு பிராத்தனை செய்கின்றனர். ஆக்வே பக்தர்களும், நன்கொடையாளர்களும், கீழ்காணும் திட்டங்களுக்கு உதவி செய்து இறைவனுக்காக சேவை செய்யும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

1. ஒரு டியுஷன் சென்டருக்கு மாதந்திர பௌர்ணமி பூஜை செலவு	ரூ	450/-
2. ஒரு டியுஷன் சென்டரின் ஒரு மாதத்திற்கு பராமரிப்பு செலவு (பௌர்ணமி பூஜை உட்பட)	ரூ	1,500/-
3. ஒரு டியுஷன் சென்டரில் படிக்கும் 45 மாணவர்களுக்கு கல்வி உபகாரணங்கள் உட்பட 1 ஆண்டுக்கு ஆகும் செலவு	ரூ	6,000/-
4. ஒரு டியுஷன் சென்டரில் படிக்கும் மாணவர்களுக்கு புத்தாடைகள் வழங்க ஆகும் செலவு (45 மாணவ மாணவியர்கள்)	ரூ	13,500/-
5. 51 சென்டர்களில் பௌர்ணமி பூஜைக்கு ஆகும் செலவு (2700 மாணவர்கள்)	ரூ	27,000/-
6. 51 டியுஷன் சென்டர்களின் ஒரு மாதத்திற்கு பராமரிப்பு செலவு (பௌர்ணமி பூஜை உட்பட)	ரூ	76,500/-

மேற்படி திட்டத்திற்கு நன்கொடை வழங்குவோர் "ஸ்ரீ சாரதா சக்தி பீடம்" என்ற பெயருக்கு DD/Cheque/M.O மூலம் மேற்கண்ட முகவரிக்கு நன்கொடை அனுப்பும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ சர்வாத்மானந்தர்

குறிப்பு : ஸ்ரீ சாரதா சக்தி பீடம் என்ற பெயரில் நன்கொடை அனுப்பினால் மட்டுமே "வருமான வரி விலக்கு" உண்டு.


ஆங்கிலமே அருகில் வா!

1

"வீட்ல என்ன தகராறோ தெரியலை, மானேஜர் ஆபீஸுக்கு வந்ததிலேருந்து கத்திக்கிட்டேயிருக்காரு. இப்போ போய் லோன், கின்னு கேட்டுத் தொலைக்காதே. மனுஷன் செம கோபத்துல இருக்கார்."

இது போல ஒருத்தர் 'கோபமா' இருக்கற நிலைமை இங்கிலீஷ்ல 'angry'னு சொல்லலாம்.





"The manager is angry" மானேஜர் கோபமா இருக்கார்.

நேத்து அந்த ஃபைல putup பண்ணலேன்னு அவர் எம்மேல கோபமா இருக்காரு'ங்கறதை 'He is angry with me' னு சொல்லுங்க.

என்ன எங்கிட்ட சரியாப் பேச மாட்டேங்கற. எம் மேல உனக்குக் கோபமான்னு கேக்கணும்னா 'Are you angry with me?'னு கேளுங்க.

பெரும்பாலும் இந்தக் கோபம் தானாக வருவதில்லை. நமக்குப் பிடிக்காத விஷயங்களை மற்றவர்கள் செய்யும்போது நாம் சொன்ன வேலையை மற்றவர்கள் செய்யாதபோது, இல்லையென்றால் நம்மைப் பற்றி யாராவது தப்பாகப் பேசும்போது நமக்கு 'சுர்ர்' என்று கோபம் பொத்துக் கொண்டு வந்துவிடும்.

'எனக்குக் கோபம் வந்துடுச்சுங்கறதை 'Angry came to me'ன்னு அப்படியே மொழி பெயர்த்துச் சொல்லக்கூடாது.


இது போல என்னோட neighbour (பக்கத்து வீட்டில் வசிப்பவர்) என்கிட்ட சொன்னப்போ, இங்கிலீஷை இப்படிக் கொலை பண்றாரேன்னு எனக்கு ரொம்பக் கோபம் வந்துடுச்சு!

Yes, I got angry!

இது போல கோபம், விரக்தி, களைப்பு போன்ற நிலைகளை நாம் அடைவதைத் தெரிவிக்க 'got' என்ற வார்த்தையை use பண்ணலாம்.

He is angryனா அவர் கோபமா இருக்கிறார். அவருக்கு கோபம் வந்துவிட்டது.

வி. ராஜகோபாலன்



(அவர் கோபமடைந்தார்) என்பதை "He got angry" என்று சொல்ல வேண்டும்.

'Angry' என்பது ஒரு நிலை. அடைதல் என்பதைக் குறிக்க got என்ற வார்த்தை பயன்படுகிறது.

எனக்கு ரொம்ப கோபம் வந்துடுச்சுங்கறதை 'I got terribly angry'னு சொல்லலாம்.

இந்தக் கோபம் உச்ச நிலையை அடையும்போது அதாவது எனக்கு ரொம்ப, ரொம்ப கோபம் (அடக்க முடியாத கோபம்) வந்துவிட்டது என்பதை I got wild என்று சொல்லலாம். அதாவது 'மிருகத் தனமான கோபம்' என்பது இதன் அர்த்தம்.

எனக்குக் களைப்பாக இருக்கிறது என்பதை 'I am tired' என்கிறோம். ஆனால் 'நான் களைப்படைந்தேன்' என்பதை 'I got tired' என்று சொல்லலாம்.

அந்தப் பாவிப் பய இப்படி கடைசி நேரத்துல கழுத்தை அறுப்பான்'னு நான் கொஞ்சம்கூட எதிர்பார்க்கவேயில்லை. எல்லா ஏற்பாடும் செஞ்சு வச்சிருந்தேன். அவன் இப்படி ஏமாத்தினதால ரொம்ப upset ஆயிட்டேன். இது போல ஏமாற்றம் ஏற்பட்டதால் உண்டாகும் மன நிலையை upset என்கிறோம்.

பெருத்த ஏமாற்றமடைந்தேன், நிலை குலைந்து விட்டேன் என்பதை I got upset என்று சொல்லலாம்.

நேத்திக்கி அண்ணாநகர் போயிருந்தேன். செம மழை. ஒதுங்கக்கூட எடமில்லாம மழைல வசமா மாட்டிக்கிட்டு நல்லா நனைஞ்சுட்டேன். இது போல மழையில் நனைந்து விட்டேன் என்பதைத் தெரிவிக்கவும் இந்த 'got'ங்கற வார்த்தையை use பண்ணலாம்.

"I got wet" என்றால் நான் நனைந்து விட்டேன் என்று அர்த்தம்.

மழையில நான் தொப்பலா நனைஞ்சுட்டேன்னு சில பேர் சொல்றதுண்டு.

இதை I got fully wet, I got thoroughly *(தரலி)* wet என்றெல்லாம் சொல்லலாம்.

இதையே I was fully drenched *(ட்ரெஞ்ச்ட்)* in the rain னும் சொல்லலாம்.



பெருங் காயம்

எனக்கு (இலேசாக) அடிபட்டு விட்டது என்பதை 'I got hurt' என்று சொல்லலாம்.

அடி அதாவது காயம் சற்று பலமாக இருந்தால் 'I got injured' என்று சொல்லுங்கள்.

ஏலேசான காயத்தை hurt என்றும் சொல்வது வழக்கம்.

மீண்டும் அடுத்த வாரம் சந்திப்போம்.

ஆந்திராவுக்கு வருமானம்; தமிழகத்துக்கு இழப்பு!

ஒரே மாதிரியான உத்தரவுதான். ஆந்திர மாநிலம் வசூலித்த தொகை முந்நூற்றைம்பது கோடி ரூபாய். தமிழகம் வசூலித்த தொகை வெறும் ஆறு கோடி ரூபாய். இவ்வளவு வித்தியாசமா? என்ன விவகாரம்?

நகரங்களில் அங்கீகரிக்கப்பட்ட ப்ளான்படி, வீடோ, அடுக்குமாடித் தொகுப்போ, ஷாப்பிங் வளாகமோ கட்டாத பட்சத்தில் குறிப்பிட்ட அளவு அபராதம் செலுத்தி அதிகப்படியாகக் கட்டப்பட்டிருக்கும் பகுதிகளை முறைப்படுத்திக் கொள்ள போடப்பட்ட ஆர்டரில்தான் ஆந்திராவுக்கு அத்தனை வருமானம்; தமிழகத்துக்கு அத்தனை இழப்பு!

"பத்து வருடத்துக்கு ஒருமுறை நகரத்தைப் பொறுத்தமட்டில் வளர்ச்சிக்கான நெறிமுறைகளைச் சொல்லும் மாஸ்டர் ப்ளானை சி.எம்.டி.ஏ. அமுலுக்குக் கொண்டுவர வேண்டும். இதுவரை ஒரே ஒரு முறைதான் சென்னைக்கு மாஸ்டர் ப்ளான் போட்டிருக்கிறது சி.எம்.டி.ஏ. இந்த மாஸ்டர் ப்ளான் போடப்பட்டிருந்தால் வீடுகள் கட்டுவதில், சில விதிமுறைகள் தெளிவாக்கப்பட்டிருக்கும். அது நடக்காததால், ஆயிரக்கணக்கான வீடுகளும், தொகுப்பு வீடுகளும், அங்கீகரிக்கப்பட்ட ப்ளானை மீறி கட்டப்பட்டிருக்கின்றன. அவற்றை முறைப்படுத்தப் போடப்பட்ட ஆர்டர்தான் குளறுபடி. எக்ஸ்ட்ராவாக கட்டப்பட்ட பகுதிக்கு ஒரு சதுர அடிக்கு இத்தனை அபராதம் என்று நிர்ணயிப்பதற்குப் பதிலாக ஒரு சதுர மீட்டருக்கு என்று அபராதம் நிர்ணயித்து விட்டார்கள். இதன்படி பார்த்தால் அபராதத் தொகை வீட்டின் மதிப்பைவிட அதிகமாகிறது! மக்கள் எப்படி இந்த ஸ்கீமை ஏற்றுக் கொள்வார்கள்? ஆந்திராவில் எளிய கட்டண விகிதத்தை நிர்ணயித்து கோடிக்கணக்காக வசூல் செய்து விட்டார்கள். அரசாங்கத்தில் உள்ள ஓட்டைகளை அடைத்து வருவாயைப் பெருக்கி வரும் கலைஞர் ஆட்சியில், அதிகாரிகளின் தவறான வழிகாட்டுதலால் வருவாய் இழப்பு" என்கிறார் சென்னை பில்டர்ஸ் அஸோஸியேஷன் செயலாளரான ப்யாரி லால் ஜெயின். "அப்படியிருந்தும் ஆர்டர் போட்ட இந்த ஒரு வருடத்தில் விண்ணப்பம் போட்ட ஐயாயிரம் பேர்களின் மனுவை சி.எம்.டி.ஏ. பரிசீலித்திருக்கிறது. இன்னமும் இரண்டு லட்சம் பேர் இந்த ஸ்கீமைப் பயன்படுத்திக் கொள்ள இருக்கிறார்கள். சி.எம்.டி.ஏவின் வேகத்தைப் பார்த்தால் அதற்கு முப்பது வருடங்களுக்கு மேல் ஆகும் போலிருக்கிறது!" என்கிறார் அவர்.



அரசு ஆணையில் உள்ள குளறுபடியைச் சுட்டிக்காட்டி சமீபத்தில் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசினார்கள். உடனே முதல்வர் 'இந்தத் திட்டம் உடனடியாக நிறுத்தப்படுகிறது. எதிர்க்கட்சிகளைக் கலந்து கொண்டு ஆக்கபூர்வமான முடிவு மேற்கொள்ளப்படும்' என்றார்.

ஆனால் நாட்கள் ஓடியும் நடவடிக்கை இல்லை. "இந்தக் கட்டட முறைகேடுகள் ஒழுங்கு படுத்தப்பட்டால் இப்போது வந்து கொண்டிருக்கும் வருமானம் போய் விடுமே. எனவே சி.எம்.டி.ஏ. இந்த விஷயத்தில் ஆர்வம் காட்டவில்லை" என்கிறார் ஒரு ப்ரமோட்டர்.

— கௌசி

படம்: ராஜன்

ஒரு ஸ்பூன் ஜெர்மனி; அரை ஸ்பூன் ஸ்விட்சர்லாந்து!



• தெளிவான வழிகாட்டல்

"விமானம் புறப்படத் தயாராயிருக்கிறது."

"இன்டிகோ 792 பயணிகள் உடனே கேட் எண் எட்டு நோக்கிச் செல்ல வேண்டுகிறோம்."

"பாஸஞ்சர்ஸ் ஹோல்டிங் போர்டிங் கார்ட்ஸ் ஃபார் ஃப்ளைட் இன்டிகோ 792 மே ப்ளீஸ் ப்ரொசீட்..."

"திஸ் இஸ் த லாஸ்ட் கால் ஃபார் பாஸஞ்சர்ஸ் போர்டிங் ப்ளைட் இன்டிகோ 792!"

அமைதியான அழைப்பு படிப்படியாக முன்னேறி அவசரமான எச்சரிக்கையாக முற்றுப் பெறுகிறது.



• வலது கையில் சிடி; தும்பிக்கையில் உலகம்! த்ரூபா சின்னம்.

தோள் பைகளால் நெம்பித் தள்ளி கூட்டத்தில் வழி செய்து கொண்டு ஓட வேண்டியிருக்கிறது.

சீட் பெல்டை அணிவதற்குள் விமானம் புறப்பட்டு விடுகிறது. சில நிமிடங்களே பயண நேரம். அந்தச் சொற்ப நேரத்தையும் வீணடிக்க மனமின்றி எதிர் இருக்கை பயணிகள் ஓயாமல் பேசுகிறார்கள்.


"நான் ஃப்ராங்ஃபர்ட்டில் இறங்கினதுமே போர்ட் மீட்டிங். எங்க நிர்வாகத்துக்கு என் திட்டத்தை விளக்கியாகணும்..."

"ஓஹோ! பெரிய ப்ரெஸன்டேஷனோ...?"

"ஆமாம். பாம்ஃப்லெட், ப்ரோஷர், சர்க்குலர், ஸ்லைட், ரிப்ளை பெய்ட் கார்டு... எல்லாம் இதுக்குன்னே அச்சடிச்சுக் கொண்டு போறேன். லக்கேஜ்ல பெரிய பெட்டி வருது..."

"மல்டிநேஷனல் கம்பெனியோ உங்களது...?"

"யெஸ், யெஸ்! இந்த பிரஸன்டேஷன் மட்டும் முடிஞ்சா, நிச்சயமா எனக்குப் புரமோ





• மெல்போ அனுவலகம்

ஷன் வரும்..."

''ரீஜனல் மானேஜர் ஆயிடுவீங்க, இல்லியா?''

"ஊஹூ'ம்...! என் திட்டத்தைக் கேட்டா என்னையே சி.ஈ.ஓ.வா ஆக்கினாலும் ஆக்கிடு வாங்க!''

உரையாடல் முடிவதற்குள் விமானம் தரையிறங்கிவிட்டது.

என்ன துரதிர்ஷ்டம்! சி.ஈ.ஓ. கனவுகளுடன் பறந்த பயணியின் 'பெரிய .பெட்டி' மட்டும் வந்து சேரவில்லை. தமது எதிர்காலம் இப்படி ஹைஜாக் ஆகிவிட்டதே என்று அவர் பதறித் தவிக்க...

"டோன்ட் வொரி!"

- அந்த அலட்டல் ராஜாவுக்கு அபயம் அளித்தவர் அவர் அருகே அமர்ந்து வந்த சகிப்புத் திலகமான அவரது சக பயணி.

''நீங்க தயார் பண்ணின மெமரியல்ஸோட சி.டி. மட்டும் இருந்தா, எங்க பிரெஸ்ல உங்களுக்குத் தேவையான அத்தனையையும் நொடியில் பிரின்ட் பண்ணித் தரமுடியும்.''

"சி.டி. இருக்கு- ஆனா இன்னும் ஒரு மணி நேரத்துல மீட்டிங். இங்கேயிருந்து அங்க போகவே அரை மணி நேரம் ஆகுமே...''

''அடேயப்பா! அரை மணி நேரம் அவகாசம் இருக்கே... அஸ்வமேத யாகம் பண்ணிடலாம்!''

1

பண்ணிக்காட்டினார் சகிப்புத் திலகம்! -அஸ்வமேத யாகத்துக்குக் கொஞ்சமும் குறைவில்லாத ஒரு சாதனை. ப்ரோஷர், பாம்ஃப்லட், விசிடிங் கார்ட், ரிப்ளை பெய்ட் போஸ்ட் கார்ட், ப்ரொஜக்டரில் திரையிட ஸ்லைடுகள்... அத்தனையும் தமது அதிநவீன இன்டிகோ இயந்திரங்கள் நிறைந்த அச்சுக் கூடத்தில் அச்சடித்துக் கொடுத்தார்- அரை மணி நேரத்தில்!



• மிட்சுபிஷி இயந்திரம் விற்கும் அழகி



• டுசல்டார்ஃப் நகர மையத்தில் தகவல் அலுவலகம்

அந்த வேகத்தைக் கண்டு மூர்ச்சையாகாத குறையாக அத்தனையையும் வாங்கிக் கொண்டு ஓடிய அலட்டல் ராஜா என்ன ஆனார்? அவருக்குப் புரமோஷன் கிடைத்ததா? இன்டிகோவின் பில்லுக்குப் பணம் கொடுத்தாரா...? என்பதெல்லாம் நாடகத்தில் அவிழ்க்கப்படாத முடிச்சுகள்.

நாடகமேதான்! -'நிஜ நாடகம்'! 'இன்டிகோ' என்ற அச்சு இயந்திர உற்பத்தி நிறுவனம் தனது விற்பனை யுக்தியாக அரங்கேற்றிய பிரமிப்பூட்டும் நாற்பது நிமிட செயல்முறை விளக்கம். கதாபாத்திரங்களும் நிகழ்ச்சிகளும் கற்பனை; ஆனால் அச்சு இயந்திரங்களும் சரி, அவை இருபத்தைந்து நிமிடத்தில் அச்சடித்துக் கொடுத்த அதிசயமும் சரி, ஹரிச்சந்திரன் சத்யமாக உண்மை!

ஜெர்மனியில், டுசல்டார்ஃப் நகரத்தில் நடந்த த்ருபா டு தவுஸன்ட் (Drupa-2000)

சீதா ரவி

என்ற சர்வதேச அச்சு இயந்திரக் கண்காட்சியில் இதுபோன்ற விதவிதமான விற்பனை யுக்திகளைக் காண முடிந்தது.

இண்டிகோவின் 'விமானப் பயணம்' தொடங்கும் வரை கூரையில் துணியைக் கட்டி அதைப் பற்றிக் கொண்டு உடலை முறுக்கி அந்தரத்தில் சர்க்கஸ் செய்த பெண்ணைச் சொல்லுவதா? ஏழடி கம்புகளைக் கால்களில் கட்டிக் கொண்டு உயரத்திலிருந்து 'ஹாய்' சொல்லி அழைத்த கோமாளிகளைச் சொல்வதா? உடம்பில் துணிக்குப் பதிலாக செய்தித்தாளை அச்சிட்டுக் கொண்டு (நாம் தான் கூச்சத்தில் நெளிய வேண்டும்) அலுங்காமல் காட்சி பொருள்போல் அமர்ந்திருந்த பெண்களைச் சொல்வதா?.....

230,000 சதுர மீட்டர் பரப்பில் நாற்பத்திரண்டு நாடுகளிலிருந்து 1800 நிறுவனங்கள் தங்கள் இயந்திரங்களைக் கடை பரத்தியிருந்தால் அவரவரும் தங்கள் தயாரிப்பைக் கூவித் தானே விற்றாக வேண்டும்!

மே 17 தொடங்கி 31 வரை நடந்த த்ருபா 2000ல் இப்படிக் கூவி விற்றதில் பலருக்குச் சுறுசுறுப்பாக வியாபாரமாயிற்று.


'.................நிறுவனத்துக்கு விற்கப்பட்டது' என்று கிரீடம் தாங்கி, பலகோடி பெறுமானமுள்ள இயந்திரங்கள் கர்வத்துடன் உட்கார்ந்திருந்தன!

வழக்கமாக ஜெர்மனியில் நான்காண்டுகளுக்கொருமுறை நடைபெறும் 'த்ருபா'வுடன் இம்முறை மில்லெனியச் சிறப்பும் சேர்ந்திருக்கிறது. தவிர, இது ஜான் குட்டன் பர்கின் 600வது ஆண்டு விழா. நவீன அச்சு இயந்திரங்களின் மிக மூத்த மூதாதையான முதல் movable printing press ஐ உருவாக்கிய இந்த ஜெர்மானிய தாடிக்காரருக்குச் சிறப்புத் தபால்தலை வெளியிட்டு அஞ்சலி செலுத்தியிருந்தார்கள்.

மற்றப்படி, கத்தியின்றி ரத்தமின்றி யுத்தம் போல் ரிப்பனின்றி கத்தரியின்றி, அடிக்குரலில் உருமும் அடுக்குமொழி பிரசங்கங்களின்றி ஒரு பொருட்காட்சி ஆரம்பமாயிற்று.

நுழைவு அரங்கில் போட்டோவுடனான அடையாள அட்டையைக் காட்டிப் பதிவு செய்து கொள்ள பத்திரிகையாளர்கள் அழகாக கியூவில் நின்றார்கள். மற்றவர்கள் காசு கொடுத்து நுழைவுச் சீட்டு பெற்று, தானியங்கி கதவுகளுக்குள் நுழைந்து வரைபடத்தை விரித்து வைத்துக் கொண்டு தங்களுக்கு வேண்டிய ஸ்டால்களைத் தேட ஆரம்பித்தார்கள்.

'வரைபடமா...?' என்று புருவம் உயர்த்தும் வாசகர்களே கொஞ்சம் கற்பனை செய்து



• இனி 'சொல்யூஷன்கள்' விற்போம்... - ஹைடல்பர்க்

பாருங்கள்... பதினெட்டு அரங்குகள்! ஒவ்வொன்றும் நான்கு வீதிகள் உள்ளிட்ட ஒரு சராசரி தமிழகத் திருக்கோயிலின் பரப்பளவு. செய்தித்தாள் அச்சடிக்கும் வெப் ஆஃப்செட் ப்ரெஸ் முதல் டாய்லெட் பேப்பரை உருட்டித் தரும் இயந்திரம் வரையில் கணக்கில்லாத ரகங்கள். எங்கே என்று போய் எதைத் தேடுவது? வாடிக்கையாளர்கள் சௌகரியத்துக்கென்று அமைப்பாளர்கள் அச்சிட்டு விற்கும் கையேடு வழிகாட்டுகிறது. அகர வரிசையில் நிறுவனப் பெயர்கள். எந்த ஹாலில் எந்த வகை இயந்திரங்கள் என்று விவரப் பட்டியல்கள். இதன் உதவியுடன் வளாகத்தில் தெளிவாக வழிகாட்டும் அம்புக்குறிகளைப் பின்தொடர்ந்தால் தேவையானதை மட்டும் பார்த்துவிட்டுத் திரும்பிவிடலாம். இல்லாவிட்டால் எங்களைப் போல் 'இண்டிகோ'வின் கற்பனை ஃபினைட்டில் ஏமாந்து ஏறிக் கொண்டு நாடு கடத்தப்பட வேண்டியது தான்!

ஒரு கண்காட்சிக்காக எத்தனை பிரமிப்பூட்டும் ஏற்பாடுகள்!

'மெஸ்ஸே' என்ற கண்காட்சி மைதானத்தில் அதன் பலமாடி அலுவலகம் நிரந்தரமாக இயங்குகின்றது. (அச்சு இயந்திரக் கண்காட்சி போல வேறு பலவும் நடக்குமாம்)

அஞ்சலகம், வங்கி, மருத்துவமனை என்று 'மெஸ்ஸே'வுக்குள்ளேயே வசதிகள். அனைத்திலும் ஆங்கிலம் அறிந்த பணியாளர்கள்– அளவாகப் பேசி, அழகாக வேலை செய்பவர்கள்.

தினமும் அறுபதாயிரம் கார்களும் அறுபதாயிரம் × குறைந்தபட்சம் இரண்டு பார்வையாளர்களும் வரும் ஓர் இடத்தில் எந்த கவுண்டரிலும் வசவசவென்று கியூ சேர

வில்லை என்பது ஜெர்மானிய சுறுசுறுப்புக்குச் சான்று.

வண்டி கட்டிக் கொண்டு வந்து அங்கேயே குடித்தனம் போடும் 'ஆர்வக் கோளாறு'க்காரர்களுக்கென்று தனி 'பார்க்கிங் லாட்' ஒதுக்கப்படுகிறது. பதினைந்து நாளும் காரவன் எனப்படும் சின்ன மொபைல் வீடுகளில் தங்கி சமைத்துச் சாப்பிட்டுச் சுற்றிப் பார்க்கிறார்கள். த்ருபா காலத்தில் நகர ஹோட்டல்களும் 'பேயிங் கெஸ்ட்' குடியிருப்புகளும் நிரம்பி வழிகின்றன என்பதால் கிட்டத்தட்ட முந்நூறு காரவன்கள் பார்க்க முடிந்தது. எங்களைப் போல் ஹெர்டெக், கலோன் என்று அண்டை-அசல் நகரங்களில் தங்கி, பஸ் அமர்த்திக் கொண்டு தினம் வந்து போகும் கும்பல் தனி!



• வண்ணமயமான கோடாக் ஸ்டால்

லட்சம் பேர் புழங்கும் இடத்தில், புதிதாகக் கட்டியதுபோல் எந்நேரமும் மின்னிய டாய்லெட்டுகள், பார்க்கிங் திடலிலிருந்து கண்காட்சி நுழைவாசல்வரை போக (சுமார் 1 கி.மீ.) இலவச ஷட்டில் பஸ் வசதி, கண்காட்சிக்குள்ளேயே அரங்குக்கு அரங்கு இடம் பெயர எஸ்கலேட்டர், மினி பஸ் வசதிகள். உணவு விடுதிகள். அசைவம் சாப்பிடாதவர்களுக்கென்று காய்கறி, பழச்சாறு விற்கும் சாஃப்ட் பார்; (விலை மட்டும் கொஞ்சம் ஹார்ட்!) சுத்தியல், ஆணி, கயிறு, ஸ்பானர் விற்கும் ஹார்ட்வேர் ஸ்டோர்; மிளகு, உப்பு, ரொட்டி, பிஸ்கட்டுக்கு மளிகைக் கடை என்று வசதிகளாலேயே வசீகரித்து வியாபாரத்துக்கு அஸ்திவாரம் போட்டு விடுகிறார்கள்.

அச்சு இயந்திரங்களைப் பொருத்தமட்டில், அவற்றை விற்பதற்குக் கையாளும் வித்தைகள் தவிர, மூன்று விஷயங்கள் முக்கியமாகத் தென்பட்டன.

முதலாவது: சுற்றுச் சூழல் மாசைத் தவிர்க்க வேண்டும் என்ற பிரக்ஞை. அதற்கேற்ப உற்பத்தியை மாற்ற முயற்சி நடக்கிறது. 'எங்கள் தயாரிப்பை உபயோகித்தால் ரசாயனக் கழிவுகளால் மாசு ஏற்படாது' என்று பிரகடனங்கள்.

இரண்டாவது: நீக்கமற நிறைந்துவிட்ட டிஜிடல் தொழில்நுட்பம். இயந்திரங்கள் தயாரித்துவந்த ஹைடல்பர்க் போன்ற ஜெர்மன் நிறுவனங்கள் ஸாஃப்ட்வேர் உற்பத்தி, ஆராய்ச்சியில் இறங்கி, இப்போது வெறும் மிஷின்களுக்குப் பதில் 'சொல்யூஷன்களை' விற்கின்றன! (அதாவது அச்சுக் கோத்தல் முதல் பேக்கிங் வரை டிஜிடல் முறையில் செய்யக் கூடிய பூரண பிரெஸ்கள்!)

மூன்றாவது: டிஜிடல் மயமாதல் காரணமாக நேர்ந்துள்ள தொழில்முறை 'கூட்டணிகள்'. உதாரணம்- க்ரியோ, ஸ்கைடக்ஸ் என்ற இரு டிஜிடல் நிறுவனங்கள் 'க்ரியோஸ்கைடக்ஸ்' என ஒன்றாகி, மான் ரோலண்ட் என்ற ஜெர்மானிய அச்சு இயந்திர உற்பத்தி நிறுவனத்துடன் தொழில் நுட்ப உடன்பாடு கொண்டுள்ளன.




• குட்டன்பர்க்

சமீபத்தில் ஜெர்மன் அமைச்சரவை இரண்டாயிரம் வெளிநாட்டு சாஃப்ட்வேர் வித்தகர்களுக்கு 'வொர்க் பெர்மிட்' கொடுக்கலாம் என்று கொள்கை முடிவு எடுத்தது இங்கே குறிப்பிடத்தக்கது. இத்தனைக்கும் ஜெர்மனியில் கடுமையான அன்எம்ப்ளாய்மெண்ட் பிரச்னையாம்... டூரிஸ்டுகள் பார்வைக்கு அந்தக் கஷ்டமெல்லாம் எங்கே தெரிகிறது!

(தொடரும்)

‘அம்மார்ட்மெண்ட்!’



‘‘தலைவருக்கு ‘சிறைக்கஞ்சா செம்மல்’னு பட்டம் தந்தது தப்பா போச்சா... ஏன்?’’

‘‘ஜெயில்லே இருக்கிறப்ப கஞ்சா விக்கிறாரு...’’



‘‘உங்க சீரியல்லே ரொம்ப பேரு விபத்துலே செத்துட்டதா காட்டுறீங்களே... ஏன்?’’

‘‘என்ன பண்றது... சம்பள பாக்கியைத் தந்தா தான் நடிப்பாங்களாம்!’’



‘‘Zooவுக்குப் பக்கத்திலே நிதி நிறுவனம் திறக்கிறீங்களே... ஏன்?’’

‘‘இங்கே பணம் கட்டினவங்க அங்கேயாவது முதலை பார்க்கட்டுமே!’’

— தஞ்சை தாமு



‘‘நம்ம தலைவருக்கு அம்மா மேல அளவுகடந்த பக்தி!’’

‘‘எதை வெச்சு சொல்றீங்க?’’

‘‘அவரு வாங்கியிருக்குற அப்பார்ட்மெண்ட்டைக்கூட ‘அம்மார்ட்மெண்ட்’னு சொல்றாரே!’’

— தஞ்சை ராகவ். மகேஷ்.


‘‘டாக்டர் பலே பேர்வழி!’’

‘‘என்ன செஞ்சாரு?’’

‘‘வியாதி குணமாகவில்லை எனில் என்னிடம் கூறுங்கள்; குணமானால் எல்லோரிடமும் கூறுங்கள்’னு பிரிஸ்கிரிப்சன்ல ப்ரிண்ட் பண்ணியிருக்கார்!’’

— அம்பை தேவா







2000 ஜூன் 18
விக்ரம ஆனி 4
மலர் : 58
இதழ் : 47

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



செக்கோஸ்லோவாக்யா திட்டம் செல்லுபடியாகாது!


"எனது யோசனைதான் நோய்க்குச் சரியான மருந்து!" என்கிறார் தமிழக முதல்வர். ஈழப் பிரச்னைக்கு அவர் கூறியிருக்கும் செக்கோஸ்லோவாக்ய பாணி தீர்வு, நோயைக் காட்டிலும் கொடிய மருந்து. நோயைத் தீர்ப்பதற்குப் பதில் புதிய ஆபத்தான விளைவுகளுக்கு அது காரணமாக அமையும்.

சில நாட்களுக்கு முன்பு, "போர் மூலமானாலும் சரி, பேச்சுவார்த்தை மூலமாயினும் சரி, தனித்தமிழ் ஈழம் உருவானால் மகிழ்வேன்" என்று பேசி, தமது ஆழ்மன எண்ணத்தை வெளியிட்டு விட்டார் முதல்வர். அதன் பிறகு, மத்திய அரசின் கொள்கையிலிருந்து தமது நிலை முரண்படுவதையுணர்ந்து, அவர் அவசரமாக சமாதானம் கூறவேண்டியதாகி விட்டது.

ஆனால், இப்போது கலைஞர் வெளியிட்டிருக்கும் பிரிவினைக் கருத்து, பூசி மெழுக முடியாதபடி பட்டவர்த்தனமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

தனித் தமிழீழ ஆதரவு கட்சிகளான ம.தி.மு.க., பா.ம.க. நீங்கலாக, இந்தியாவின் அத்தனை கட்சிகளும் கலைஞரின் இந்தக் கருத்தை எதிர்த்துள்ளன.

செக்-ஸ்லோவாக்கிய பிரிவினையை இலங்கைப் பிரிவினைக்கு முன்மாதிரியாகக் கொள்வதே தவறு என்பதை ஜனா கிருஷ்ணமூர்த்தி தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.




ஏற்கெனவே தனித்தனியாக இருந்த இந்த நாடுகள், உலகப் போரின் விளைவால் நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகி இணைந்தன. அப்படி செயற்கையாக இணைந்த செக்-ஸ்லோவாக் பகுதிகள் தான் பிற்காலத்தில் மிக இயல்பாகவும் வலி வருத்தமின்றியும் பிரிந்தன.

ஈழப் பிரிவினை என்பது அத்தனை சுலபமாகவும் வலியின்றியும் சாத்தியமாகாது. யாழ்ப்பாணம் மட்டுமின்றி இலங்கையின் பிற பகுதிகளிலும் தமிழர்கள் வாழ்கிறார்கள். தமிழ் ஈழம் என்று பிரிக்கும்பட்சத்தில், இதர பகுதிகளில் உள்ள தமிழர்களின் நிலை என்னாகும் என்பது யோசனைக்குரியது.

'தங்கள் இனத்தவரையே கொல்லத் தயங்காத ஓர் அமைப்பினர் தமிழர்களின் நலன் காப்பார்கள் என்று எவ்வாறு நம்புவது?' என்றும் 'அண்ணா கூட தனித் திராவிட நாடு கொள்கையைக் கைவிட்டவர்தான்' என்றும் இலங்கைப் பிரச்னை குறித்து முதல்வர் கருத்து தெரிவித்து வெகு நாட்களாகி விடவில்லை. ஆனால் இப்போது அவர் வெளியிட்டிருக்கும் கருத்தின் தொனி முற்றிலும் வேறாக இருக்கிறது.

நமது தலைவர்கள் தனித் தமிழீழம் கோருவதோ ஆதரிப்பதோ அந்நிய நாட்டின் விவகாரத்தில் தலையிடும் அநாவசிய காரியமாகத்தான் கொள்ளப்படும். உலகின் பார்வையிலும் இந்தக் கோரிக்கையும் தலையீடும் ஆதரவு பெறாது.

'அமைதியான முறையில் சம உரிமைகளுக்காகப் போராடி அவை கிடைக்காமல் போனதால்தான் ஈழத் தமிழர்கள் வன்முறையை மேற்கொண்டனர். எனவே அவர்களுக்குச் சம உரிமை தரப்பட வேண்டும்...' என்று விளக்குகிறார் முதல்வர். இது நியாயம்தான். இந்த விஷயத்தில்தான் இந்திய அரசு ஸ்ரீலங்கா அரசை வற்புறுத்தி நியாயம் கிடைக்கச் செய்ய வேண்டும். ஆனால், பிரிவினையை நியாயப்படுத்தும் அணுகுமுறை, புலிகளின் நிலையைப் பலப்படுத்தவும் அவர்களது பிடிவாதத்தை அதிகரிக்கவும்தான் உதவும்.



சம உரிமைகள் மறுக்கப்பட்ட ஒரு சூழலில் வாழ்வது கொடுமை என்பதை யாரும் மறுக்கவில்லை. அவற்றைப் பெற வன்முறையும் பயங்கரவாதமும் கொலை வெறியும் பிரிவினையும்தான் வழிகள் என்பதை எக்காரணம் கொண்டும் ஏற்க முடியாது.

ஆயுதங்களைத் துறக்கும் விடுதலைப் புலிகளுடன் பேச இலங்கை அரசு தயாராக இருக்கிறது. ஆனால், ஆழமான பகையுணர்வு காரணமாகப் புலிகள் அதற்கு முன்வர மறுக்கிறார்கள்; இதனால் யுத்தம் தொடர்கிறது; தமிழர்களின் துன்பம் பெருகுகிறது.

யுத்தம் நின்றாலன்றி இலங்கை அரசு சம உரிமைகள் வழங்குதல் பற்றிப் பேசாது.

எனவே தமிழ்நாட்டிலிருக்கும் தலைவர்களின் ஒருமித்த ஆதரவோடு மத்திய அரசு யுத்த நிறுத்தத்துக்கு முயற்சி செய்ய வேண்டும். வன்முறையைக் கைவிட்டு, யுத்தத்தை நிறுத்தும்படி புலிகளை வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளவேண்டும். அப்புறம் பேச்சு வார்த்தைகளுக்கு வழிவகுக்க வேண்டும். இருதரப்பிலிருந்தும் அழைப்பு வரட்டும் என்று காத்திருப்பது புத்திசாலித்தனமோ ராஜதந்திரமோ அல்ல.

"இலங்கைத் தமிழர்களுக்கு என்னென்ன உரிமைகள் வழங்க சந்திரிகா அரசு முன்வருகிறது என்பதைத் தெளிவுபடுத்தட்டும்..." என்று தட்டிக் கேட்கும் தமிழக முதல்வர், அதே தொனியில் புலிகளின் வன்முறையையும் தட்டிக் கேட்கட்டும்! அவர்களை அமைதிப் பாதைக்குத் திரும்பும்படி அறிக்கை விடட்டும்.

மாறாக, புலிகளின் வன்முறையையும் பிரிவினைவாதத்தையும் ஒரு இயற்கையான விளைவு என்பதுபோல் நியாயப்படுத்துவது மிக அபாயகரமானது.

ஈழப் பிரச்னையில் ம.தி.மு.க., பா.ம.கவின் நிலைகளுடன் அனுசரித்துப் போவது, தேர்தல் நெருங்கும் சூழலில் அரசியல்ரீதியாக புத்திசாலித்தனம் என முதல்வர் கருதியிருக்கலாம்.

ஆனால், அந்த முடிவு இலங்கைப் பிரச்னைக்குத் தீர்வுகாண உதவாது.

தாக்குப் பிடிப்பாரா

அப்பவே சொன்னாரு!

சில மாதங்களுக்கு முன்னர் தேனாம்பேட்டை காமராஜர் அரங்கத்தில் ஒரு கூட்டம். மூப்பனார், சி. சுப்பிரமணியம், திண்டிவனம் ராமமூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டார்கள். 'தமிழக காங்கிரஸ் தலைமை மாற்றப்பட இருக்கிறது' என்று அப்போதே பலமான செய்திகள் வந்துகொண்டிருந்தன.


ஈ.வி.கே.எஸ். இளங்கோவன்

"தலைவரை நியமன முறையில் போடுபவர்களுக்கு, எடுக்கவும் உரிமை உண்டு' என்று சொன்னார் மூப்பனார்.

"நாங்களும் அதைத்தான் சொல்கிறோம்; திண்டிவனம் ராமமூர்த்தியே ஒரு நியமனத் தலைவர்; இன்னொருவர் நியமனத்தை எதிர்க்க இவர் யார்?" என்று இப்போது கேட்கிறார் அன்பரசு.

ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் நியமனத்தை எதிர்த்து முதல்முறையாக அறிக்கை கொடுக்கும்போது உஷ்ணமாகப் பேசிய திண்டிவனம் மேலிடம் ஷோ-காஸ் நோட்டீஸ் விட்டவுடன், தடாலென்று பல்டியடித்து, நான் 'காங்கிரஸிலேயே தொடர்ந்து இருப்பேன்' என்றிருக்கிறார்.

பல்டி அடிச்சாரு!

இளங்கோவன் நியமனத்தை எதிர்த்து குரல் கொடுக்கும்போது, தம்மோடு தங்கபாலுவும், குமரி அனந்தனும் சேர்ந்து கொள்வார்கள் என்று எதிர்பார்த்தார் திண்டிவனம். ஆனால் அவர்கள் புத்திசாலித்தனமாக விலகி விட்டார்கள். எப்போதும் கூடவே இருக்கும் தண்டாயுதபாணியும் கைவிட்டு விட, தனி மரமாக நின்றார் அவர்.

சட்டமன்றத் தேர்தல், உள்ளாட்சித் தேர்தல், உட்கட்சித் தேர்தல் ஆகியவை வரும் பட்சத்தில் தலைமையை எதிர்த்துக்கொண்டு வீண் சச்சரவுகளை செய்து கொண்டிருப்பதற்குப் பதில் கொஞ்சம் அனுசரித்துப் போய், தங்களுக்கும் தங்கள் ஆட்களுக்கும் பயன் தரத்தக்க வகையில் செயல்படுவதுதான் சரியான யுத்தி என்று மற்ற கோஷ்டித் தலைவர்கள் நினைத்ததுதான் திண்டிவனத்தின் திடீர் புரட்சி தோற்றதற்குக் காரணம்.

"ஆற்றின் மேல் கோபம் கொண்டு, ஒருத்தன் குளிக்காமல் போனால் நஷ்டம் ஆற்றுக்கல்ல; அவன்தான் அழுக்கோடு சுற்றிக் கொண்டிருக்க வேண்டும். கட்சியும் ஆற்றைப் போன்றதுதான். அனுசரித்துப் போவது எல்லா கட்டத்திலும் நல்லது. மேலிடம் எடுத்திருக்கும் இந்த முடிவைக் கட்சிக்காரர்கள் எல்லோரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதேசமயம் இளங்கோவன் எல்லா தரப்பினரது ஆதரவையும் பெற்று கட்சியை நடத்த வேண்டும்" என்கிறார் இளைஞர் காங்கிரஸ் துணைத் தலைவரான கராத்தே தியாகராஜன்.

போட்டோ காட்டினார்!

'தந்தை சம்பத்துக்கு தமிழக காங்கிரஸ் தலைவராக வர வேண்டும்' என்ற ஆசை இருந்தது. அப்பாவால் முடியாததை மகன்

புதிய தலைவர்?

செய்து முடித்திருக்கிறார். தாத்தா ஈ.வெ.ரா. பெரியார் தான் காங்கிரஸின் முதல் தலைவர். இப்போது ஈரோட்டில் இளங்கோவன் குடியிருக்கும் வீடுதான் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முதல் அலுவலகமாக இருந்தது. 1984ல் சிவாஜி ரசிகர் மன்ற கோட்டாவில் சட்டமன்ற உறுப்பினர் பதவி பெற்று வந்தவர் இளங்கோவன். 1990ல் தமிழக முன்னேற்ற முன்னணி என்று சிவாஜி துவங்கியபோது அதில் இணைந்தவர். பின்னர் அர்ஜுன்சிங், வாழப்பாடியார் ஆகியோருடன் திவாரி காங்கிரஸுக்குச் சில மாதங்கள் சென்று வந்தவர். திண்டிவனத்தின் கீழ் தமிழக காங்கிரஸ் பொதுச் செயலாளராக இருந்தவர். ஆனால் "இவரது குடும்பம்தான் பாரம்பரியமான குடும்பமே தவிர, இவரைப் பற்றிச் சொல்வதற்கு ஒன்றுமில்லை" என்கிறார் திண்டிவனம். இளங்கோவன் பல கட்சிகளுக்குச் சென்று வந்தவர் என்பதையும் 1988ல் கட்சிக் கட்டளையை மீறி ஜானகி எம்.ஜி.ஆருக்கு ஆதரவு அளித்தவர் என்பதையும் மறக்காமல் குறிப்பிடுகிறார்.



• திண்டிவனம் ராமமூர்த்தி



• பீட்டர் அல்போன்ஸ்



• அன்பரசு

முன்னாள் அமைச்சர் பிரபு, அர்ஜுன் சிங் மூலம் சோனியாவிடம் பலமாக சிபாரிசு செய்ததால்தான் இளங்கோவனுக்குத் தலைமைப் பொறுப்பு கிடைத்தது என்பது திண்டிவனத்தின் வாதம். தம் தந்தைக்கு நேரு எழுதிய கடிதங்கள், இந்திராகாந்தியோடு சம்பத் எடுத்துக் கொண்ட படங்கள் ஆகியவற்றை தலைவர் இன்டர்வியூவின்போது சோனியாவிடம் காட்டினாராம் இளங்கோவன். 'அம்மா கலோசனா சம்பத், ஜெயலலிதா மூலம் சோனியாவிடம், மகனுக்காக சிபாரிசு செய்தார்' என்பது காங்கிரஸ் வட்டாரத்தில் உலவும் தகவல்.

இளங்கோவனைத் தலைவராகப் போடுவதன் மூலம் காங்கிரஸ் – அ.தி.மு.க. உறவு சுமுகமாக இருக்கும் என்பது காங்கிரஸ் தலைமையின் எதிர்பார்ப்பு.

எச்சரிக்கப்பட்டார்!

தமிழக காங்கிரஸில் ஏற்படும் மாறுதல்களுக்கும் த.மா.கா.விற்கும் முடிச்சுப் போட்டுப் பார்ப்பது என்பது தவிர்க்க முடியாததாகி விட்டது.

சமீபகாலங்களாக மூப்பனாருடன் சேர்ந்து அரசியல் நடவடிக்கைகளில் இறங்கிய திண்டிவனம் தூக்கியெறியப்பட்டது. "ரொம்பவே நெருங்கிப் போக வேண்டாம்" என்பதை உணர்த்தும் மேலிட எச்சரிக்கை என்கிறார்கள்.

மூப்பனாருடன் சேர்ந்து திண்டிவனம் சத்தியமூர்த்தி பவனில் பேட்டியளித்தது, தேனியில் போராட்டத்தில் கலந்து கொண்டது ஆகிய செயல்கள் மேலிடத் தலைவர்களான அனில் சாஸ்திரி, குலாம்நபி ஆசாத் போன்றோர்களுக்கு ஆச்சர்யமான விஷயமாக இருந்ததாகச் சொல்கிறார் அன்பரசு.



"வெளிநடப்பு செய்யற எம்.எல்.ஏ., சீட்ல கர்ச்சீப்பைப் போட்டுட்டுப் போறாரே, ஏன்?"

"அதான் சொன்னேனே... அவர் ரிசர்வ்டு டைப்புன்னு..."

— தஞ்சை தாமு

அழைப்பு விடுத்தார்!

மூப்பனாருக்கும், பிரபுவுக்கும் அரசியல் ரீதியாகக் கசப்புணர்வு இருப்பதால் பிரபுவின் செலக்ஷனான இளங்கோவன், மூப்பனார் எதிர்ப்பு என்ற நிலையைத் தேர்ந்தெடுப்பாரா...? என்று காங்கிரஸ் வட்டாரம் யோசிக்கிறது.

"நாங்க அப்படி நினைக்கலை. சில மாதங்களுக்கு முன்னர் ஈரோட்டில் தலைவரைக் கூப்பிட்டு பெரியார் விழா கொண்டாடினார் இளங்கோவன். அந்த விழாவில் தமிழக அரசியலில் இருக்கும் திராவிட மாயையை மூப்பனார் ஒழிக்க வேண்டும் என்றும் பேசினார்" என்கிறார் பீட்டர் அல்போன்ஸ்.

'மூப்பனார் காங்கிரஸில் இணைய வேண்டும்' என்று இளங்கோவன் அழைப்பு விடுத்திருக்கிறாரே என்றபோது "நேரு குடும்பத்தின் மீது நாங்கள் கொண்டிருக்கும் பாசம்தான் எங்களை இணைக்கும் பாலம். எனவே தமிழக காங்கிரஸ் தலைவர்கள் இந்த அடிப்படையில் எங்களை காங்கிரஸில் மீண்டும் இணையச் சொல்வது என்பது இயல்பான ஒன்றுதான். தலைவர்தான் முடிவு செய்வார்" என்கிறார் பீட்டர்.

அடங்கிப் போனார்!

'த.மா.காவில் எங்கே திண்டிவனம் இணைந்து விடுவாரோ' என்று மூப்பனார் தளபதிகள் சிலர் கவலைப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். ஆனால் "தலைவர் திண்டிவனத்தாரைச் சேர்க்க மாட்டார். அது தவறான சிக்னலை சோனியாவிற்கு அனுப்பும். காங்கிரஸ் தலைமையை எதிர்த்தவருக்கு த.மா.கா.வில் வரவேற்பா? என்ற கேள்வி எழுப்பப்படும். இரு கட்சிகளும் இணைந்து செயல்படும் பட்சத்தில் இது போன்ற சந்தேகங்கள், ஊசலாட்டங்கள், சுமுக உறவைக் கெடுக்கும்" என்கிறார் த.மா.கா.வின் மேல் மட்டத் தலைவர் ஒருவர். "திண்டிவனம், சரத்பவாரின் தேசியவாத காங்கிரஸில் இணைவதற்கான வாய்ப்புகூட இருக்கிறது" என்கிறார் அவரது நெருங்கிய தொண்டர் ஒருவர். எனவே அவர் எதிர்ப்புக் குரலை அடக்கிக்கொண்டு காங்கிரஸிலேயே இப்போதைக்கு தொடர்வதற்கான வாய்ப்புதான் அதிகம் என்கிறார்கள்.

சூளுரைத்தார்!

ஜூன் ஒன்பதாம் தேதி தில்லியிலிருந்து சென்னை வந்து பொறுப்பேற்றுக் கொள்வதாக இருந்தார் இளங்கோவன். ஆனால் அன்று அஷ்டமியாக இருந்ததால் ஒத்திப் போட்டு விட்டார்கள். 'அப்படியல்ல... திண்டிவனம் காங்கிரஸ் அலுவலகத்தைப் பூட்டி சாவியை உரிமையாளரிடம் ஒப்படைத்து விட்டார். எனவே புதிய அலுவலகம் பார்ப்பதற்கு அவகாசம் தேவைப்பட்டது. அதனால்தான் பதவியேற்பைத் தள்ளிப் போட்டிருக்கிறோம்' என்கிறார்கள் காங்கிரஸ் பிரமுகர்கள்.

"எல்லோரையும் அணைத்துக்கொண்டு செல்ல விரும்புகிறேன். மேலிடம் என்ன வழி காட்டுகிறதோ அதன்படி நடப்பேன். என்னுடைய முதல் பணியே தமிழ்நாட்டில் கட்சியை வளர்ப்பதுதான். கட்சியிலிருந்து விலகியவர்கள், மீண்டும் இணைந்து தமிழக காங்கிரஸைப் பலப்படுத்த வேண்டும் என்பது என் விருப்பம்" என்று சூளுரைத்தார் இளங்கோவன்.

எதிர்ப்பாளர்களை மேலிடம் அடக்கி வைத்ததைச் சிலாகிக்கிறார்கள் காங்கிரஸ் தொண்டர்கள்: "நானும் கூடத்தான் தலைமைப் பதவிக்கு முயன்றேன். கிடைக்கவில்லை என்பதற்காக, மேலிடத்தை எதிர்ப்பது முட்டாள்தனம். சட்டமன்றத் தேர்தல் வருவதால், எல்லோரும் ஒருங்கிணைந்து செயல்பட்டால்தான், இடங்கள் பகிர்ந்தளிக்கப்படும்போது, பேரம் பேசும் வலிமை கூடுதலாக இருக்கும்; இதைக் காங்கிரஸ் தோழர்கள் மனத்தில் கொள்ள வேண்டும்" என்கிறார் அன்பரசு.

இந்தச் செய்தி இப்போது மெள்ள எடுபடுவதால் இளங்கோவனின் பாதையில் தடைகள் இருக்க வாய்ப்பில்லை.

— ப்ரியன்

Indian Institute of Management & Technology

in association with

ALL INDIA COUNCIL FOR MANAGEMENT STUDIES

25, Mada Church Road, Mandaveli,
Chennai - 600 028.INDIA Ph : 4956036
Fax : 495 2692. e.mail:icolam@hotmail.com

No. 29, Lazarus Church Road, R.A. Puram,
Chennai - 600 028. INDIA Phone: 4956833
Fax: 493 3259. e-mail:aiicas@hotmail.com

IIMAT andAICOMAS jointly offers the following **One Year** and **Six Months** Diploma Courses by correspondence

ONE YEAR DIPLOMA COURSES

* BUSINESS MANAGEMENT
* BUSINESS ADMINISTRATION
* MARKETING MANAGEMENT
* TOTAL QUALITY MGMT. & ISO 9000 / QS 9000
* MATERIALS MANAGEMENT
* EXPORT & IMPORT MGMT.
* HOTEL MANAGEMENT
* CATERING MANAGEMENT
* BANKING & INSURANCE MANAGEMENT
* TRAVEL & TOURISM MGMT.

Eligibility: No formal qualification (Open Education System). **For Application and Prospectus send Rs. 10/- Postal stamp** to any one of the above Institute.

SIX MONTHS DIPLOMA COURSES

* BUSINESS MANAGEMENT
* BUSINESS ADMINISTRATION
* OFFICE ADMINISTRATION
* SALES & MARKETING
* FINANCIAL MANAGEMENT
* INDUSTRIAL RELATIONS & PERSONNEL MGMT.
* HUMAN RESOURCES DEVELOPMENT
* LABOUR LAWS
* EXPORT AND IMPORT MGMT.
* FOREIGN TRADE MGMT.
* MATERIALS MANAGEMENT
* PRODUCTION MANAGEMENT
* FOOD & BEVERAGE MGMT.
* FOOD PRODUCTION MGMT.
* COMPUTERS IN OFFICE MGMT.
* COMPUTER APPLICATION
* HOTEL MANAGEMENT
* BANKING MANAGEMENT
* QUALITY CONTROL & ISO 9000
* ENVIRONMENTAL MANAGEMENT SYSTEM & ISO 14000/14001
* ADVERTISING & PUBLIC RELATIONS
* INTERNATIONAL BUSINESS MGMT.
* BUSINESS INFORMATION SYSTEM
* MANAGEMENT INFORMATION SYSTEM
* HEALTH & HOSPITAL MANAGEMENT
* TEACHER TRAINING EDUCATION
* EDUCATIONAL MANAGEMENT
* RESEARCH & DEVELOPMENT
* TOTAL QUALITY MGMT. & ISO 9000
* NETWORKING & INTERNET APPLICATION
* QUALITY ASSURANCE & QS 9000/ISO 9000
* SOFTWARE CAPABILITY MATURITY MODEL (guidelines for improving software process)
* INTERNATIONAL AIRLINES MANAGEMENT (Affiliated/Recognised by Westwind Aviation Academy, Arizona, USA)

பரதம்

"உங்களுக்குப் பிடித்த ஹீரோ யார்?" என்று கேள்வி கேட்டு முடிக்கும் முன்பாகவே, 'ஹர்த்திக் ரோஷன், சல்மான்கான், ஷாருக் கான், கமல்ஹாசன் என்று பதில் சொல்லும் கல்லூரி மாணவிகளின் மத்தியில், 'எனது ஹீரோ மகாகவி பாரதிதான்' என்று நெஞ்சை நிமிர்த்திக் கம்பீரமாகச் சொல்கிறார் இந்த மாணவி. இவர் சென்னை வள்ளியம்மாள் கல்லூரியில் பி.எஸ்ஸி., கம்ப்யூட்டர் சயன்ஸ் படிக்கும் ஜெ. சாருமதி.

மாணவிக்கு மாணவி, டீச்சருக்கு டீச்சர் என் பதுதான் சாருமதியை





வித்தியாசமாகக் காட்டுகிறது. இந்தக் கம்ப்யூட்டர் மாணவிக்கு அயனாவரத்தில் நாற்பது மாணவிகள் இருக்கிறார்கள். சாருமதி ஒரு பரதநாட்டிய டீச்சர்!

சாருவின் மாணவிகள் யார்? யார்? ஆட்டோ ரிக்ஷா ஓட்டுபவரின் மகள், பிளாட்பாரத்தில் பூ விற்கும் பெண்ணின் மகள், பழம் விற்கும் குடும்பத்துப் பெண், வீட்டு வேலை செய்பவரின் மகள், கல்யாண வீடுகளில் நாதஸ்வரம் வாசிப்பவரின் மகள் என்று சமூகத்தின், பொருளாதாரத்தின் அடிமட்டத்தில் இருக்கும் பெண்கள் மீதுதான் சாருமதியின் அக்கறை! இவர் வீட்டில் சனி, ஞாயிறுகளில் இவர்கள் பரதம் கற்றுக் கொள்வதே கண்கொள்ளாக் காட்சி.

"இவள் சின்னக் குழந்தையாக இருந்தபோதே டி.வி.யில் ஏதாவது பாட்டு என்றால் அவள் பாட்டுக்கு எழுந்து நின்று தைய்யா தக்கா என்று ஆடிக் கொண்டிருப்பாள். இதைப் பார்த்துத்தான் இவளது கலையார்வம் எங்களுக்குப் புரிந்தது. முறைப்படி கற்றுக் கொடுத்தோம்" என்கிறார் சாருவின் தந்தை ஜெயனந்தன். இவர் ஒரு எழுத்தாளர். கணையாழி உள்ளிட்ட பல பத்திரிகைகளில் இவரது படைப்புகள் வெளியாகி வருகின்றன. சாருமதியின் தாய் ராணி ரெயில்வேயில் பணிபுரிகிறார். தம் மகளின் கலையார்வத்துக்குத் துணைபோய் அவளை ஊக்குவிப்பதே இவர்களது லட்சியமாக இருக்கிறது.

"என் கலைத் துறை முன்னேற்றத்தில் என் பெற்றோர்களின் பங்களிப்பு மிகப் பெரிது. நான் பரதம் கற்றுக் கொண்ட போதுதான் எத்தனை பரிகாசங்கள்! 'இவள்

டான்ஸ் கத்துக்கிட்டு என்ன ஆகப் போவுதாம்? கல்யாணம் பண்ணி குழந்தைப் பெத்துகிட்டு சமைக்கப் போறவளுக்குச் சலங்கை தேவையா?" என்றெல்லாம் கேலிப் பேச்சுக்கள். என் குடும்பத்தினரே இப்படியெல்லாம் பேசினார்கள். அவ்வளவையும் வாங்கி துடைத்துப் போட்டு விட்டு 'நீ டான்ஸ் கிளாஸ் போய்ட்டு

இலவசம்!

வாம்மா' என்று அவர்கள் அளித்த ஊக்கம்தான் இன்று நான்."

சாருமதியின் கண்கள் இலேசாகப் பனிக்கின்றன. நிர்மலா ராமசாமி, சிக்கல் வசந்த குமாரி ஆகியோரிடம் பயின்று 1993ல் மியூஸிக் அகாடமியில் கே.ஜே. சரசாவின் முன்னிலையில் அரங்கேற்றம். பின்னர் அவ்வப்போது சில நிகழ்ச்சிகள் செய்தாலும், சாருமதியின் மனம் என்னவோ 'சொல்லிக் கொடுக்க வேண்டும்' என்றே சிந்தித்தது.

"பரத டீச்சர் என்றால் அதற்கென ஒரு முதிர்ச்சி, வயது, கட்டளையிடும் தன்மை இவை தேவை. இந்தச் சூத்திரத்திற்குள் அடங்குவோம் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறதா, சாரு?"

"இது யார் போட்ட சூத்திரம்? தேவையில்லாத ஒன்று. 'நாம் சொல்லிக் கொடுப்பது போய்ச் சேர வேண்டியவர்களிடம் சேருகிறதா? அது ஒன்றுதான் இப்போதைய சூத்திரம். நான் சொல்லிக் கொடுப்பது போய்ச் சேருகிறது."

சாருவின் இன்னொரு பரிமாணம் மேடைப் பேச்சு. ஸ்ரீராம் நிறுவனம் நடத்திய பாரதியார் பேச்சுப் போட்டியில் இவர் எட்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தபோதே மாநில அளவில் இரண்டாம் பரிசு. கல்லூரிக்கு வந்தபின் முன்னேற்றம் காட்ட வேண்டாமா? அதே ஸ்ரீராம் போட்டியில் மாநில அளவில் முதல் பரிசு. பேச்சுப் போட்டிக்கென மேடையேறிவிட்டால் கையில் பரிசுக் கோப்பையின்றி அயனாவரம் திரும்புவதில்லை இவர்.

பட்டம் வாங்கியதும் அமெரிக்கா போய் எம்.எஸ். முடிக்க வேண்டும் - இது சிறிய லட்சியம்.

பெரிய லட்சியம் - என் அமெரிக்கா கல்வி என் தாய்நாட்டுக்குப் பயன்பட இங்கே திரும்பி வந்து விட வேண்டும்.

"அங்கே போனதும் மனது மாறி விட்டால்?"

"மாறாது. இரண்டு லட்சியங்களையும் நான் நிச்சயம் நிறைவேற்றிக் காட்டுவேன். ஏனெனில் பாரதியின் பிடிவாதம் எனக்கும் உண்டு" என்கிறார்.



சாருமதியிடம் கட்டணமின்றி நடனம் கற்றுக் கொள்ளும் பாக்கியலட்சுமிக்கு டீ.வி.யில் சினிமா பாட்டுகளைப் பார்த்து நடனத்தில் ஆர்வம் வந்துவிட்டதாம்! 'என் வகுப்புத் தோழி சொல்லக் கேட்டு இங்கு வந்து சேர்ந்தேன். சனி ஞாயிறு என்பதால் பள்ளிக்கூடம் போவதற்கு எந்தப் பாதிப்பும் இல்லை. எனக்கு அப்பா கிடையாது. அம்மாவுக்கு எஸ்.டி.டி. பூத்தில் வேலை' என்கிறார். ஜிஜிபாய், புஷ்பலதா, ஜனனி மூன்று பேரும் இரண்டு வருடமாகக் கற்றுக் கொண்டு சலங்கை பூஜையே முடித்து விட்டார்கள். 'அரங்கேற்றம் முடிந்ததும், நாங்களும் சாருமதி அக்கா போல நிறைய பேருக்கு இலவசமாகச் சொல்லிக் கொடுப்போம்' என்கிறார்கள்.

— ராணிமைந்தன்

அட்டை வண்ணப்படம், படங்கள்
வெங்கடேஷ்

பிறமொழி கற்போம்!

ஒரு தாய் எலி தன் குழந்தைகளை அழைத்துக் கொண்டு வெளியே கிளம்பிய போது எதிரே ஒரு பூனை வந்தது. குஞ்சுகள் பயந்து தாயின் காலில் போய்ப் பதுங்கிக் கொண்டன. தாய் மிகவும் அமைதியாக, கவலைப்படாதீர்கள்; நான் பார்த்துக் கொள்கிறேன் என்ற அர்த்தத்தில் தட்டிக் கொடுத்துவிட்டு, தன் குரலை மாற்றி 'லொள் லொள்' என்று குரைத்தது. சத்தத்தைக் கேட்டுப் பூனை பயந்து ஓடியது. குஞ்சுகள் தாயைப் பெருமையாகப் பார்த்தன. இன்னொரு மொழி தெரிந்து வைத்திருப்பதன் பயன் புரிந்ததா என்று கேட்டதும் குஞ்சுகள் ஆமோதித்தன.

"ஐந்து அறிவு கொண்ட விலங்குகளுக்கு மாற்று மொழி அவசியம் என்றால் ஆறறிவு கொண்ட மனிதனுக்கு?" என்கிறார் பாரத ஸ்டேட் பாங்க் அதிகாரிகள் சங்க பயிற்சி மையத்தின் பாடத்திட்ட இயக்குநர் டாக்டர் S. விஜயா.

"இன்று தாய் மொழி தவிர்த்து மாற்று மொழி ஒன்று அவசியம் தெரிய வேண்டும். குறிப்பாக ஹிந்தி தெரிந்து கொள்வது மிகவும் அவசியமாக உள்ளது. வேலை வாய்ப்பு தேடியும், சுற்றுலா செல்லவும் இன்னும் பல காரணங்களுக்காக நாம் நம் மாநிலத்தைக் கடந்து மற்ற இடங்களுக்குச் செல்கிறோம். இங்கு பேருந்து நிலையம், ரயில் நிலையம், சிற்றுண்டி சாலை என எங்கு பார்த்தாலும் நம்மைச் சுற்றி இருப்பவர்கள் ஹிந்தி பேசுகிறார்கள். அது மட்டுமல்லாமல் வட மாநிலங்களுக்கு நாம் தொலைபேசியில் தொடர்பு கொண்டால் 'கௌன், க்யா சாஹியே' என்று பேசுகிறார்கள். 'ஆகா ஹிந்தி கற்காமல் இருந்து விட்டோமே' என்று அந்த நேரத்தில் நாம் வருந்துகிறோம். இதைத் தவிர்ப்பதற்காக 1994ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் 15ம் தேதி திரு. மு. பால கிருஷ்ணன் அவர்கள் நிர்வாக இயக்குனராக இருக்கும்பொழுது பாரத ஸ்டேட் பாங்க் அதிகாரிகள் சங்கம் அஞ்சல் மூலம் ஹிந்தி பயிற்சியை துவக்கியது. முதலில் இப்பயிற்சி வங்கி ஊழியர்களுக்கு மட்டும் அளிக்கப்பட்டது. இதனால் மற்றவர்களும் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் 1995ஆம் ஆண்டு பொதுமக்களும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாடு செய்யப்பட்டது. ஹிந்தியில் அகர வரிசை தெரியாதவர்களைக் கூட ஆறே மாதங்களில் சரளமாக ஹிந்தியில் பேச வைக்கிறோம்.

பேச்சு மொழி ஹிந்தி டிப்ளோமா கோர்ஸ் ஆங்கிலம் மூலமாகவும், தமிழ் மூலமாகவும் நடத்தப்படுகின்றன. பயிற்சிக்கான



காலம் ஆறு மாதம். கட்டணம் ரூ.425/- மட்டுமே.

இப்பயிற்சிக்கான பாடத் திட்டங்கள் ஒவ்வொரு மாதமும் அஞ்சல் மூலம் முதல் வாரத்தில் அனுப்பப்படும். பாடத்துடன் உள்ள ரெஸ்பான்ஸ் ஷீட்டுகளைப் பூர்த்தி செய்து அனுப்பினால் அவற்றைத் திருத்தி மாணவர்களுக்கு அனுப்புகிறோம். இந்தப் பாடத் திட்டத்தில் பேச்சு மொழிக்குத் தேவையான உச்சரிப்பு முறைகள், சொற்கள், இலக்கண முறைகள் அடங்கும்.

வெறும் அஞ்சல் பயிற்சி மட்டுமல்லாமல் நேர்முகப் பயிற்சியும் நடத்துகிறோம். ஒவ்வொரு மாத இறுதியில் வரும் ஞாயிற்றுக் கிழமையில் நேர்முகப் பயிற்சி நடத்தப்படும். இப்பயிற்சியின்போது ஹிந்தி பேசுவதற்கான பயிற்சி அளிக்கப்படும். அது மட்டுமல்லாமல் செவிக்குணவு இல்லாதபோது

எங்கும் ஜெயிப்போம்!



வயிற்றுக்கும் காலை, மாலை தேனீர் மட்டுமன்றி மதிய உணவும் ஈயப்படும். பயிற்சியின் முடிவில் தேர்வுகள் ஞாயிற்றுக்கிழமைகளில் நடத்தப்படுகின்றன. இத்தேர்வுகள் சென்னை, மதுரை, கோவை, திருச்சி, ஹைதராபாத், புதுடில்லி மட்டுமல்லாமல் தேவைக்கேற்ப பல இடங்களில் நடத்துகிறோம்.

இந்தப் பயிற்சியின் பட்டமளிப்பு விழாவை ஒவ்வொரு வருடமும் செப்டெம்பர் மாதத்தில் பாரத ஸ்டேட் வங்கியின் வட்டாரத் தலைமை அலுவலகத்தில் உள்ள வளாகத்தில் மிகச் சிறப்பாக நடத்துகிறோம். இந்தப் பட்டமளிப்பு விழாவில் ஆற்காடு இளவரசர், முன்னாள் பிரதமர் சந்திரசேகர், பாரத ரத்னா சி. சுப்பரமணியம், எங்கள் வங்கியின் வட்டாரத் தலைமைப் பொது மேலாளர் திரு. B. ராமசந்திரராவ் போன்றவர்கள் கலந்து கொண்டு உரை நிகழ்த்தியுள்ளார்கள். இந்நிகழ்ச்சியில் முதல் மதிப்பெண் வாங்கிய மாணவர்களுக்குப் பதக்கங்கள் வழங்குவதோடு மட்டுமல்லாமல் மொழிக்காக சேவை செய்தவர்களும் கௌரவிக்கப்படுகிறார்கள்.

இது தவிர உச்சரிப்புகளும் விளக்கங்களும் புத்தகத்தோடு மட்டுமல்லாமல் ஒலி நாடாவிலும் வெளியிடுகிறோம். இந்த Twin cassetes with companion booklet விலை ரூ.100/- மட்டுமே. இதை வாங்க விரும்பவர்கள் டிடி. (அ) உள்ளூர் காசோலை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். இவ்வொலி



• தர்மராஜன் (நிர்வாக இயக்குநர்)

நாடாக்கள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் உள்ளன.

இது மட்டுமன்றி Post Graduate Diploma in Translation (Hindi & English), Post Graduate Diploma in Journalism (Eligibility : Graduate).வகுப்புகளும் அஞ்சல் வழியில் நடத்தப்படுகின்றன. இவற்றின் பயிற்சி காலம் ஒரு வருடமாகும். இந்தப் பயிற்சிகளுக்கு இப்போது வேலை வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன. மத்திய அரசு அலுவலகங்கள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்கள் தனியார் நிறுவனங்களில் English - Hindi Translator பதவிகளுக்காக அடிக்கடி விளம்பரங்கள் செய்யப்படுகின்றன. இந்தப் பயிற்சியை முடித்தால் வேலை நிச்சயம் என்பது மட்டுமல்லாமல் ரூ.4000/- முதல் சம்பளம் எதிர்பார்க்கலாம்.

ஜூலை 2000ல் துவங்கவிருக்கும் பயிற்சிக்கான விண்ணப்பபடிவங்களை ரூ.75/-க்கான DD அல்லது உள்ளூர் காசோலை SBIOA Institute, Chennai என்ற பெயரில் அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு :

பாரத ஸ்டேட் பாங்கு அதிகாரிகள் சங்க ஆய்வு மற்றும் பயிற்சி மையம்

அஞ்சல் வழி ஹிந்தி பிரிவு.

இரண்டாம் தளம்,

மெர்கண்டைல் ப்ளாசா,

229, என்.எஸ்.ஸி. போஸ் சாலை,

சென்னை - 600 001.

தொலைபேசி : 5340226

"**நீ** கொப்புறான் சத்தியமா நானில்லை" என்றான் கோவிந்து.

அங்காளம்மன், முண்டககண்ணியம்மன், காளியாத்தா, மாரியாத்தா, நீலியாத்தா, சூலியாத்தா இன்னபிற ராமநாராயண ஆத்தாக்களை சாட்சிக்குக் கூப்பிட்டு மங்களாவும் மூக்கைச் சிந்தி மூன்று கர்சீஃப்களை நனைத்து விட்டுச் சொன்னாள் : "நானில்லை."

"வேற எவண்டா? எந்த நாயி இந்த வேலையைச் செய்தது?" என்று கஜேந்திரன் குரலில் அசோக் உரக்க அலறியது 'பீர்'க் கடலில் பள்ளிகொண்டிருந்த வேறொரு ஜென்மத்தின் செவியில் விழுந்து, இதயம் நுழைந்து, கண்கள் திறந்தன.

இலேசாகச் சிரித்தது அந்த உருவம். ஒரு கரித்துண்டு. கொஞ்சம் மொழிப் புலமை. மேலான துணிச்சல். போதும். கோப்பையில் புயலல்ல; பூகம்பமே உண்டாக்கி விட முடிகிறது.

'அடேய் அசோக்! உனக்கு அன்புச் செல்வி என்கிற அல்வாத்துண்டு வேண்டியிருக்கிறதா! உன் உடம்புக்கு நீரிழிவு நோய் வந்து, அளவு முன்னூறைத் தாண்ட! உன் கரிக் கட்டிக் கையைப் பிடித்துக் கொண்டு ஜிங்கு ஜிங்கென்று நடைபயில ஒரு முல்லைக் கொடி வேணுமா? என்ன பேராசை உனக்கு? மகனே, இனிமேலும் நீ அன்பைக் காதல் பண்ணுவாயா? அந்த அளவுக்கு உன் மனத்தை சலனமில்லாமலா விட்டு வைப்பேன். இரு, இரு, நீ மேலும் நிலைகுலைய, உன் வண்டவாளங்களை கேபிள் டீவியில் ஸ்க்ரோல் பண்ணி விடுகிறேன் பார்!'

இவ்வாறு அடிவயிற்றிலிருந்து நெருப்பெடுத்துக் குமுறிய வில்லன் யாரென்று நேயர்கள் இதற்குள்ளாக யூகித் திருக்கக்கூடும். யூகிக்க இயலாதவர்கள் நம்மோடு இணைந்து அந்த கேபிள் டீ.வி. நிறுவனத்துக்குப் பயணஞ் செய்வதைத் தவிர வேறு வழியில்லை.

சனிக்கிழமை நள்ளிரவு ஒளிபரப்பப்படும் பக்திப் படங்கள் மூலம் புகழ்பெற்றது அக் கேபிள் மூவி நிறுவனம். கல்லூரி மாணவர்கள் தனியே ஒரு ஆயுள் சந்தா செலுத்தத் தயாராக இருந்தும் தமது பெருந்தன்மையான குணவிசேஷங்களினால் அதை அன்புடன் மறுத்து, நம் வாராந்தர சேவையைத் தொடர்ந்து கொண்டிருந்ததன் மூலம் கேபிள் ஆபரேட்டர் கண்ணபிரான் மாணவர்களின் உயிர் சிநேகிதராகி யிருந்தார்.

அத்தகைய உத்தமோத்தமர் நமது வில்லன் கூறியதைக் கேட்டு மனம் பதைத்தார். புருவம் நெரித்தார். மீசையும் துடித்ததெனச் சொல்லவும் வேண்டுமோ?

"என்னது, 'அன்பு வைக் காதலிக்கும்

இந்த 'உலக மகா காவியத்தைப்' பத்து வாரங்களாகப் படித்து வந்த வாசக அகிம்சாவாதிகளே, இனி போட்டி.

முதல் அத்தியாயம் தொடங்கி முறையே பட்டுக்கோட்டை பிரபாகர், அனுராதா ரமணன், எஸ். சங்கர நாராயணன், சுபா, சீதா ரவி, ஆர். வெங்கடேஷ், பா. ராகவன், இந்திரா சௌந்தர்ராஜன், பத்மா ரவிசங்கர், ரிஷபன் ஆகிய எழுத்தாளர்களின் பெயர்களில் இடம்பெற்றாலும் அந்தந்த அத்தியாயத்தை எழுதியவர்கள் அவரவரே அல்லர்! பெயர்களை மாற்றிப் போட்டிருக்கிறோம்.

எந்த அத்தியாயத்தை யார் எழுதினார்கள் என்பதைச் சரியாகக் கண்டுபிடித்து, வரிசைப்படுத்தி, 31ம் பக்கத்தில் உள்ள கூப்பனில் (மட்டும்) எழுதி உங்கள் பெயர், முகவரியுடன் அனுப்ப வேண்டியது தான் போட்டி. கூப்பனில்லாமல் வரும் பதில்கள் ஏற்கப்படமாட்டா.

- ஒருவரே எத்தனை கூப்பன் வேண்டுமானாலும் அனுப்பலாம்; ஆனால் ஜெராக்ஸ் செல்லாது.
- கூப்பன்கள் வந்து சேரக் கடைசி தேதி : 24.6.2000
- சரியான விடை அனுப்பும் ஒருவருக்குப் பரிசு – தங்கச் சங்கிலி! பலர் சரியாக எழுதியிருந்தால், குலுக்கலில் ஒருவர்.
- பரிசு முடிவு விஷயத்தில் ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

10



அசோக் ஒழிக'ன்னு ஸ்க்ரோலிங் ஓட்டணுமா?"

"ஆமா சாமி! இந்த பாப்பாரப் பாண்டி கோழித் தீவன விளம்பரத்தை உடறீங்களே, ரிப்பன் மாதிரி. அதே பேட்டன். சனிக்கிழமை நைட் படம் ஓடச் சொல்ல இதைக் கீழே லைன் கட்டி உட்றணும். நம்ம பசங்க ஒருத்தன் விடாம அப்பத்தான் பாப்பானுவ. இந்த கிறுக்கன் நாண்டுகிட்டு சாவணும்."

"வேணாம் தம்பி. நா இதெல்லாம் போடறதில்ல. வம்புல மாட்டி உட்ருவ போல."

"அட, புரிஞ்சிக்குங்க சாமி. கோழித் தீவனக்காரன் தந்ததை விட ஒரு மடங்கு கூடுதலா பணம் குடுத்துடறேன்."

ரிஷபன்

"ஆளை உட்ருப்பா. கேபிள் டீவி என்ன, உங்க காலேஜ் ஹாஸ்டலுக்கு மட்டுமா வருது- ஊரு முழுக்கு நாறிடும்."

"அதான் வேணுங்கறேன்."

"நான் வரலை. ஆளை உடு. வேணா, ட்ரை கலர் போஸ்டர் அடிச்சி ஒட்டு. நம்ம சகலை ஒருத்தன் லித்தோ பிரஸ் வெச்சிருக்கான். சகாயமா சொல்லி விடறேன். இல்ல, சைன் போர்டு செய்து வை. மறக்காம கீழ ஆர்ட் டைன்னு உன் பேரை போட்டுரு. பின்னால காப்பிரைட் பிரச்னை வராது பாரு."

"இந்தக் குசும்புதானே வேணான்றது?" என்று செல்லமாக அவர் கன்னத்தில் இடித்தான்.

"யாரு அசோக்கு? யாரு அன்புச்செல்வி? அவளை இவன் காதலிச்சா ஏன் ஒழியணும்னு நீ நினைக்கறே? நீ டாவடிக்கிறியா அந்தக் கழுதைய?" என்றார் கண்ணபிரான்.

"சாமி, அசிங்கமா பேசாதீங்க."

"சரி, லவ் பண்றியா?"

"இல்லை."

"நெருங்கிய தோழியா? புது வசந்தம்

ரேஞ்ச் நட்பா?"

"இல்லை."

"பின்ன? சொந்தக்காரப் பொண்ணா? முறைப் பொண்ணா?"

"நெசமாவா?" என்றான் அசோக்.

"ஆமாடா! சாமி என்கிட்டேயே சொல்லிடிச்சி."

"எப்படி நம்பறது? அன்பு என்கிட்டே இதைப் பத்தி ஒரு வார்த்தைக் கூட மூச்சு விடலை."

"தெய்வீகக் காதல்ல இதெல்லாம் சகஜமப்பா!"

"கிண்டலா பண்றே! இரு உன்னை அப்புறம் வந்து கவனிச்சிக்கறேன்."

"இப்ப யாரை கவனிக்கப் போறே? சோமனைத்தானே?"

"அவன் கிடக்கறான். வெளங்காத பய. இந்த அன்பில்லாத செல்வியை ஒரு வழி பண்ணிட்டுத்தான் அடுத்த சோலி."

"டேய். கொன்னுடுவியா?"

"யெஸ்."

"ஐயோ."

"அவளை இல்லே. பாரு சொல்றேன்."

அபவுட் டர்ன் என்று கோவிந்து உரக்கக் கத்த மிலிட்டெரி நடையில் விறு கொண்டு திரும்பி, ரைட் ராயலாக லேடீஸ் ஹாஸ்டல் கவருகே சென்று, "அன்பு! வா, வெளியே!" என்று கத்தினான் அசோக்.

"எதிர் அணியில் இருக்கிற கட்சி சொல்றதை எதிர்த்தே ஆகணும்கிற நோக்கத்துல நம்ம தலைவர் கொஞ்சம் சொதப்பிட்டார்..."

"அப்படி என்ன செய்துட்டார்?"

" 'அயோத்தி விவகாரத்துக்காக முரளிமனோகர் ஜோஷி ராஜினாமா செய்யணும்னு மாற்றுக்கட்சித் தலைவர் சொல்றாரு; ஆனா நாங்க ஒருபடி கீழே இறங்கி வந்து, முரளியோ, மனோகரோ, ஜோஷியோ யாராவது ஒருவர் ராஜினாமா செய்தால் போதும்னு சொல்றோம்'னு பேசிட்டார்!"

— ஆர். ரகோத்தமன்



என்னவோ ஏதோவென்று அவனைத் தவிர அத்தனை பேரும் ஜன்னலுக்குத் தலைகொடுக்க, "தங்கச்சிங்களே, கூப்பிடுங்க அந்தக் காதல் துரோகியை!" என்றான் அசோக்.

"பாவம், மென்டல் போலிருக்கு" என்றாள் யாரோ ஒருத்தி.

"ஆமா சகோதரி. என்னைய மாதிரி எத்தனையோ பேரை மென்டலாக்கிய புண்ணியவதிங்களே, உங்க அன்புத் தோழி அன்புச் செல்வியைக் கொஞ்சம் கூப்பிடறீங்களா?"

"எதுக்கு? எதுக்கு? வாட்ச்மேன்..."

"அட, வாட்ச்மேன் எதுக்குங்க? அவர் பாவம், பாதி பீடியை வீணாக்கிட்டு ஓடி வந்து சாபம் குடுக்கவா? அந்த அன்புக் கழுதையைக் கூப்பிடுங்க."

"ஏய்!" என்றொரு குரல் பின்புறமிருந்து கேட்டது.

"கழுதை, குதிரைங்கற பேச்செல்லாம் வேணாம்" என்றாள் அன்புச் செல்வி.

"வாங்கம்மா மகராசி. ஒரு மாமனை மறைச்சி வெச்சிருக்கற மாதரசி!"

"என்ன உளர்றே?" என்றாள் அன்புச் செல்வி, இலேசாக உதறியபடி.

"உளரலே; உண்மையைத்தான் சொல்றேன்னு தமிழ் சினிமா டயலாக் விடணுமா நான்? யாருடீ அந்த சோமன். உன் முறை மாமனாமே? ஏன் இத்தனை நாள் என் கிட்டே மறைச்சே? அந்தக் கசுமாலம்தான் செவுத்துல எழுதினது. மொட்டை லெட்டர் போட்டது எல்லாம். இப்ப கேபிள் டீவில விளம்பரம் கொடுக்கற லெவலுக்குப் போயிருக்கான். கண்ணபிரான்சாமி கோவிந்தோட பிரெண்டுங்கறதால விஷயத்தைச் சொல்லிட்டாரு. சீ, என்ன குடும்பம் உங்களுது? கார்ப்பரேஷன் லாரி கணக்கா ஒரே குப்பை."

"அசோக், ஸ்டாப் திஸ் நான்சென்ஸ்" என்று சடன் பிரேக் போட்ட மாருதி குரலில் கிறீச்சிட்டாள்.

"ஃபேமிலி பத்தியெல்லாம் பேசாதே. அவன் என் முறை மாமன்தான். ஆனா, காலேஜுக்குள்ள உறவு வெச்சு பேசிக்கறதில்லைன்னு ஒரு இது."

"இதுன்னா?"

"இதுன்னா அதுதான். அவனா இதையெல்லாம் பண்ணான்?"

"பின்ன அவங்கப்பனா? சே! இந்த நாய் அடிச்ச கூத்துல நான் ஒரு நல்ல நண்பனை இழந்துட்டேன்."

"உன் நண்பன்தான் முறைப் பையன் முறைச்சிக்கிட்ட பையனாகிற மாதிரி போட்

டுக் குடுத்தது."

"ஆமா. இந்த அரை லூசுதான் முறைப் பையன்னு எவனுக்குத் தெரியும்? நீ ஒழி. போய் அந்த ஒட்டடைக் குச்சியையே கட்டிக்க."

சட்டென்று அவனை நிமிர்ந்து பார்த்தாள் அன்புச் செல்வி.

"நிஜமாத்தான் சொல்றியா?"

"பின்ன? நமக்கு வேணாம்பா இப்படியொரு லவ்வு. சே, லவ்வா இது? எத்தனை கஷ்டம்!"

"எனக்கும் நிம்மதிதான்."

"தெரியுமே! காஜா பீடி ப்ரியன்னாலும் சிங்காரம் ஒரு சக்தி உபாசகன். அவன் குடுத்த சாபம் எப்படி பலிக்காம போகும்?"

"கரெக்ட். சாமி சாட்சியா பொய் சொன்ன காதல் வாழாது!"

"வாங்கிக் குடிச்ச இளநீர்களே, நக்கி ருசித்த ஐஸ்க்ரீம்களே எங்களை மன்னியுங்கள்!" என்று வானம் பார்த்துக் கை உயர்த்திச் சொன்னான் அசோக்.

"என்னடீ இது கூத்து?" என்று பதறி ஓடி வந்தாள் மங்களா.

"என்ன கூத்து?"

"பின்ன இது என்ன? உங்க காதல்... அதுவும் தெய்வீகக் காதல்..."

"நாசமாப் போச்சு!" என்றான் அசோக்.

"அன்புச் சகோதரி, இது காதலில்லை. அது வெறும்..."

அவனை முடிக்க விடவில்லை அன்புச் செல்வி.

"வெறும் ஜிகினா!" அழுத்தம் திருத்தமாகச் சொன்னாள்.

"அடப்பாவிங்களா!" என்றாள் மங்களா.

"மகா பாவிகளா!" என்றான் கோவிந்து.

"ஸாரி அசோக். நமக்குக் காதலெல்லாம் சரிப்படும்னு தோணலை. வி வில் பீ குட் ஃப்ரெண்ட்ஸ் ஃபார் எவர்" என்றாள் அன்புச்செல்வி.

"ஹை ஜாலி!" என்று கூவியபடி ஓடி வந்தான் சோமன்.

"இந்த நாய்க்கு என்ன தண்டனை குடுக்கறது?" என்று அசோக்கைக் கேட்டான் கோவிந்து.

"அந்தப் பொறுப்பை என்கிட்டே விட்ருங்க. இன்னிலேருந்து இவனை என் மூத்த சகோதரனா மானசீக சுவீகாரம் எடுத்துக்கறேன்" என்றாள் அன்புச் செல்வி.

"இதைவிட ஒரு தண்டனை இருக்க முடியாதுதான்!" என்றான் அசோக்.

(முற்றும்)

தங்கச் சங்கிலிப் பரிசுப் போட்டி

ஜிகினா தொடரின் 10 அத்தியாயங்களை எழுதியோர், முறையே இவர்கள் தான்:

அத்தியாய எண்	எழுதியவர்
1	....
2	....
3	....
4	....
5	....
6	....
7	....
8	....
9	....
10	....

பெயர்: ....

முகவரி: ....

....

....

....

....



உன்னைக் கொடு என்னைத் தருவேன்

கதையின் டர்னிங் பாயிண்ட்ஸும் சரி முடிவும் சரி, ஷார்ப்பாகவும் தெளிவாகவும் இருப்பது சூப்பர் குட் ஆர்.பி. செளத்ரி தயாரிப்புகளின் ஸ்பெஷாலிடி. உ.கொ.எ.த - நோ எக்ஸெம்ஷன்!

ஜெயிலில் உள்ள கைதிகளுக்குப் போதனை செய்வதற்காகப் போகிறார் கன்னியாஸ்த்ரீ சுகன்யா. சங்கிலியால் கட்டப்படும் அளவிற்கு அபாயகரமான(!) கைதி பார்த்திபனை அங்கு சந்திக்கிறார்; எல்லோரும் ஆச்சரியப்படும் வகையில் அவரைத் திருத்தவும் செய்கிறார். தூக்குத் தண்டனை கைதியான பார்த்திபன் தன் தவறுகளுக்குப் பிராயசித்தம் தேட தனக்கு ஒரு வாரிசு இல்லையே என்று நெகிழ்ந்து போய்ச் சொல்ல, அது சுகன்யாவை உலுக்கி விடுகிறது! கன்னியாஸ்த்ரீ வாழ்க்கையைத் துறந்து பார்த்திபனுக்கு ஒரு குழந்தையைப் பெற்றுக் கொடுக்கும் முடிவை எடுக்க வைக்கிறது. குழந்தையின் பிறப்பை நியாயப்படுத்த அதை தேசத்தைக் காக்கும் பணியில் ஈடுபடுத்துவதே 'ஐடியல்'ஆன வழி என்று அதனை பிரிகேடியர் நாஸரிடம் ஒப்படைத்து விட்டு இறந்து விடுகிறார்.

அஜித்திற்கு தன் பிறப்பின் ரகசியம் அவருடைய காதல் வாழ்க்கையின் ஒரு முக்கியமான தருணத்தில் தெரிய வர, அது அவருடைய வாழ்க்கைப் பாதையை எப்படி மாற்றுகிறது என்பது கதையின் முடிவு.

சிம்ரனின் பெற்றோர்கள் உடனிருக்க, எதிரொலிக்கும் பாறையில் நின்று கொண்டு அஜித், 'ஐ லவ் இந்து' என்று சிம்ரனின் பெயரை எடக்கு மடக்காகக் கத்திவிட்டு 'ஐ லவ் கிறிஸ்டியன்ஸ்' 'ஐ லவ் முஸ்லிம்ஸ்' என்று திரும்ப கத்தி சமாளிப்பது ஆகட்டும்; அஜித்தை அணைத்துக் கொண்ட காட்சியை ரீகால் செய்து 'எக்ஸ்ட்ரா லார்ஜ்' என்று சிம்ரன் தன் அம்மாவிற்குப் பதில் சொல்வதாகட்டும் ரொம்ப க்யூட்.


ரமேஷ்கண்ணா காமெடி - ஜஸ்ட் தி ரைட் குவான்டிடி அட் தி ரைட் டைம்!

சில விரசமான காட்சிகளையும் மணிவண்ணனின் டயலாக்குகளையும் தவிர்த்திருக்கலாமோ?

மற்றபடி எ வெரி நீட் ஃபிலிம்!

— கிருஷ்ணா சிதம்பரம்

வட்டமேஜை



✉ 'கலைஞர் 77' என்ற தலையங்கம் 'கல்கி'யின் நடுநிலையையும் கண்ணியத்தையும் காட்டுகிறது. இலங்கைப் பிரச்னையில் இயல்பான, நேர்மையான, எதிர்கால நலனுக்கு உறுதியான முடிவை அவர் மேற்கொண்டால் நிச்சயம் அவரது சரித்திரம் புகழ் வாய்ந்ததாக அமையும். இலங்கை அமைதிக்கு அவர் வழி கண்டு விட்டால் அமைதிக்கான நோபல் பரிசைத் தட்டிச் செல்லும் வாய்ப்பிருக்கிறது என்று தலையங்கம் சுட்டிக்காட்டியிருப்பது வெறும் புகழ்ச்சி சொற்களல்ல.
தஞ்சாவூர், ஜி. ராமதாஸ்.

✉ திருவாசகம் ஓத முயன்ற ஒரு சைவ பக்தரை (ஆறுமுக சாமி) தீக்ஷிதர்கள் அடித்து உதைத்து வெளியே அனுப்பியதைப் படித்து நெஞ்சம் கனத்தது. ஒரு கோவிலின் ஆகமவிதிக்கு எல்லோரும் உடன்படுவதே நாகரிகம். இது தீக்ஷிதர்களுக்கும் பொருந்தும். ஒரு பக்தன் (தீக்ஷிதரல்லாதவன்) இறைவன் அகத்தில் திருவாசகம் ஓதக் கூடாது என்று எந்த சாஸ்திரத்தில், எந்த ஆகமவிதியில் எழுதப்பட்டுள்ளது? ஆறுமுக சாமிக்கு வேதநாயகனின் அருளும், சிதம்பரத்தின் வேரான திருமூலரின் அருட்பார்வையும் நிச்சயமாக உண்டு.
சென்னை, முரளி அய்யர்.

✉ "தீக்ஷிதர்கள்" இன்று வரை மரபுகள் தவறாது பெருமானை பூஜித்து வருகிறார்கள். இவர்கள் பூஜை முறையில் யாரும் குறுக்கிட்டதாகக் கிடையாது. அம்பலத்தில் நின்று பூஜை நேரத்தில் பாடியே தீருவேன் என அடம்பிடிப்பதும் இதற்கு அரசு உதவிகள் செய்வதும், சாதுவின் நோக்கத்தைச் சந்தேகிக்கவே வைக்கிறது. இவர் பின்னாலிருந்து இயக்கப்படுகிறார் என்ற எண்ணம் வலுப்படுகிறது.
சென்னை – 4, கே.பி. சந்திரசேகரன்.

✉ சனிக்கிழமை மத்திய மந்திரிசபை விஸ்தரிக்கப்பட்டது. அதில் சுஷ்மா சுவராஜுக்குப் பதவி வழங்கப்படவில்லை. ஆனால் புதனன்று வெளியான 'கல்கி'யில் சுஷ்மா மந்திரியாவது உறுதி என்று கூறப்படுவதாகச் செய்தி வெளியிட்டுள்ளீர்களே!
காஞ்சிபுரம்; எம்.டி. ரவிகாந்த்.

எதிலுள்ள விதி இது?

✉ 'நடிகை என்ற முறையில் ஒருவரின் திரையுலக வாழ்க்கை வெகுகாலம் நீடித்திருக்காது; ஆனால் பாடகி என்றால் வெகுகாலம் நீடித்து இருக்கலாம்' என்று வசுந்தரா சொல்வது நூற்றுக்கு நூறு உண்மை.
கிளியனூர், ஹ. ஷா'குல் ஹமீது.



✉ 'தேவதைகளின் பூப்பந்தாட்டம்' சிறுகதையின் எடுப்பும், தொடுப்பும் முடிவும் ரசனைக்குகந்ததாய்க் குதூகலிக்கச் செய்தது. சுவையான கற்பனை!
போடிநாயக்கனூர், எம். பாலசுப்ரமணியன்.

நான் நாத்திகனில்லை!

✉ "நான் நாத்திகனுமல்ல, ஆத்திகனுமல்ல. மனிதாபிமானமிக்க மனிதன்" என்பதைத் தெளிவாக எடுத்துரைத்துள்ளார் பெரியார்தாசன். நால்வர் பாதை என்றாலும் நல்ல பாதையைத் தானே கடைபிடிக்கிறார்!
இராஜபாளையம், வே. ஈஸ்வரன்.

✉ சுயபுராணமாக இல்லாமல் ஒரு தன் முனைப்புப் பயிற்சியைத் தந்த பேராசிரியர் பெரியார்தாசன் ஆத்திகரோ, நாத்திகரோ – ஒரு மனிதாபிமானி!
விருதுநகர், இரா. சந்திரசேகரன்.

மகாராஷ்டிராவில் இந்த வருட ப்ளஸ் டூ தேர்வு முடிவுகள் வெளியான கையோடு, 'சாட்டே கோச்சிங் கிளாஸ்'ஸின் அதிபர் மச்சீந்த்ர சாட்டேவுக்கும், கல்வி அமைச்சர் அனில் தேஷ்முக்கிற்கும் இடையே ஏற்பட்ட கைகலப்பிருக்கிறதே... ஏக கலகலப்பை உண்டுபண்ணியிருக்கிறது!

கோலாப்பூரைச் சேர்ந்த மதன் நாகர் கோஜே என்ற மாணவன் ப்ளஸ் டூவில் 98.17% எடுத்து, மாநிலத்திலேயே முதலாவதாகத் தேறி, தினசரிகளில் தன் வெற்றிக்குக் காரணமான பெற்றோர், சாட்டே கோச்சிங் கிளாஸஸ் ஆசிரியர்கள் ஆகியோருடன் சிரித்துக் கொண்டு 'போஸ்' கொடுத்திருந்தான்.

பாவம்... அன்று சிரிக்க ஆரம்பித்தவன்தான்... இன்று வரை சிரிப்பாய்ச் சிரித்துக் கொண்டிருக்கிறான். அந்தத் "தமாஷா" இதுதான் :-

ப்ளஸ் டூவில் சிறப்பாகத் தேறியவர்களை கௌரவிக்க, சாட்டே கிளாஸஸ், விழா ஏற்பாடு செய்திருந்தது. அதற்குப் பால்தாக்கரே தலைமைதாங்கி சிறப்பித்திருக்கிறார்.

அன்றே கல்வி அமைச்சர் அனில் தேஷ்முக், சில தினசரிகளில், "மதன் நாகர் கோஜேவுக்கும், சாட்டே கிளாஸுக்கும எந்த சம்பந்தமுமில்லை; மதன் படித்த விவேகானந்தா கல்லூரியின் முதல்வர் பாடீல் என்னிடம், "என் வெற்றிக்குக் காரணம் என் கல்லூரி ஆசிரியர்களே; நான் சாட்டே கிளாஸில் படிக்கவேயில்லை" என்று மதன் எழுதி கையெழுத்திட்ட கடிதத்தைச் சமர்ப்பித்திருக்கிறார். வென்றவர்களை எல்லாம் பணம் கொடுத்து விலைக்கு வாங்கி, தன் மாணாக்கர்

"தேஷ்முக் என் காலரைப் பிடித்திழுத்து அவமானப்படுத்தி, மொபைலைப் பறித்து, போலீசைக் கூட்டி ரகளை செய்தார்" என்று சாட்டேவும்...

"என் அனுமதியின்றி உள்ளே நுழைந்த சாட்டே, என்னை அதட்டி மிரட்டி பயமுறுத்தியதால் காவல்துறையின் உதவியை நாட வேண்டியிருந்தது" என்று அனில் தேஷ்முக்கும்... நடந்த சம்பவத்தை வெவ்வேறு கோணங்களில் விவரிக்கிறார்கள்.



• சாட்டே கிளாஸஸின் விளம்பரம்

பாக்ஸிங் மேடையான

களைப் போல் விளம்பரப்படுத்திக் கொள்வது சாட்டேகாரர்களுக்கு வழக்கமாகி விட்டது. இவர்களுக்குக் கிளைகளே இல்லாத இடத்தில் கூட, தன்னிடம் பயின்றவர்கள் வாகை சூடியதாகத் தண்டோரா அடிப்பது பழக்கமாகி விட்டது. இந்த அற்பத்தனம் கல்வித் துறைக்கே களங்கத்தை ஏற்படுத்தி விட்டது" என்ற ரீதியில் அறிக்கை விட்டிருந்தார்.

மறுநாள், மதனையும் அவரது பெற்றோரையும் அழைத்துக் கொண்டு, மச்சீந்த்ர சாட்டே, 'மந்த்ராலயா'வில் பல அமைச்சர்களை சம்பிரதாயமாகப் பார்த்து, கைகுலுக்கியிருக்கிறார். அனில் தேஷ்முக்கின் பகுதியில் நுழைந்ததும்...

சாட்டே, காவல் நிலையத்தில் இருக்கும் செய்தி கேட்டதும், எதிர்க்கட்சியைச் சேர்ந்த நாராயண் ராணே, நிதின் கட்கிரி (சிவசேனா), கோபிநாத் முண்டே (பி.ஜே.பி.) எல்லோரும் விழுந்தடித்துக் கொண்டு அங்கே சென்று, அவரை விடுவித்தனர். "அனில் தேஷ்முக்கிற்கு, நேற்றைய விழாவுக்குத் தன்னை அழைக்கவில்லை என்ற கோபம்; அதன் பிரதிபலிப்புதான் இது" என்று விளக்கமும் கொடுத்தனர்.

இடையே தேஷ்முக், "பி.ஜே.பி. தலைவர் முண்டேவும் இந்த சாட்டே கோச்சிங் கிளாஸில் பங்குதாரர். அவருக்கும் சாட்டேவுக்கும்



• காவல் நிலையத்தில் சாட்டேவுடன் (இடமிருந்து இரண்டாவது) முண்டே, ராணே.

கல்வி மேடை!

நெருங்கிய உறவு. பழைய சிவசேனா – பி.ஜே.பி. அரசில் நான் அமைச்சராயிருந்த போது, சாட்டே கிளாஸஸ் மீது எக்கச்சக்கப் புகார்கள் வரும்; ஆனால் 'ஆக்ஷன்' எடுக்காமல்விட்டு விடுவார். இப்போது தடை ஏதும் இல்லாததால், சாட்டே ஊழலை வெளிக் கொணராமல் விட மாட்டேன். இவர்கள் வருமான விவரங்களைச் சரிபார்த்து, சிஐடியோ, சிபிஐயோ விசாரணை நடத்த வேண்டும்'' என்று குதிக்கிறார்.

முண்டேவும் விட்டேனா பார் என்று, ''விசாரணையில் எனக்கு பாதகமாகத் தீர்ப்பு வந்தால், பொது வாழ்க்கையிலிருந்தே விலகத் தயார். சாதகமாக அமைந்தால், தேஷ்முக் பதவி விலகுவாரா?'' என்று சவால் விட்டிருக்கிறார்.

மாற்றி மாற்றி இருதரப்பினரும், 'பிரஸ் கான்ஃப்ரன்ஸ்' என்று மீடியாக்காரர்களை அலைக்கழிப்பது பொறுக்காமல், ஒரு நிருபர், 'ஊரில் ஆயிரம் கிளாஸ்‌கள் இருக்க, சாட்டே கிளாஸஸ் மட்டும் அடிக்கடி சிக்கலில் மாட்டுவது ஏன்?'' என்று கேட்க, அதற்குச் சாட்டே, ''பொறாமைதான் காரணம்; எங்களுக்கு மட்டும்தானே மாநிலமெங்கிலும் 80 கிளைகள் உள்ளன. மற்றவை மும்பைக்குள் ஒன்றிரண்டோடு நிறுத்திக் கொள்பவைதானே? மந்திரியின் தூண்டுதலின் பேரில்தான், கல்லூரி முதல்வர், மதனை வற்புறுத்தி கடிதத்தை வாங்கியிருக்கிறார். அவர் எங்கள் மாணவர் என்பதற்கு எங்களிடம் 'ப்ரூஃப்' உண்டு'' என்று அடித்துப் பேசுகிறார்.

கல்வி மேடை பாக்ஸிங் மேடையாவதைக் கண்டுக் கவலைப்பட்ட அரசும், சிஐடி விசாரணையை அறிவித்து விட்டது. கோச்சிங் கிளாஸ்களையே ஒழித்து, கல்வி நிலையங்கள் தரமான போதனையைத் தர வேண்டும் என சமூக சேவை நிறுவனங்கள் குரல் கொடுத் துள்ளன.

இத்தனை அல்லோலங்களுக்கும் காரணமான மதன் நாகர் கோஜே நிலை எப்படியிருக்கிறது?

''என் மகன் ஏன்தான் முதலாவதாகத் தேறினானோ என்று வேதனைப்பட வைத்து விட்டன நிகழ்ந்த சம்பவங்கள். அவன் மன நிலை மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அவன் கல்லூரி முதல்வருக்குக் கடிதம் எழுதித் தந்தது உண்மைதான்; ஆனால் மதன், சாட்டே கிளாஸஸ் மாணவன் என்பதும் உண்மைதான்; ப்ளீஸ்... இதற்கு மேல் கேட்காதீர்கள்?'' என்கிறார் மதனின் தந்தை. இதற்கு மேல் கேட்க என்ன இருக்கிறது?

– ஜெயஸ்ரீ ராஜ்



மியூசியம்

"ஓ காட்! ஒண்டர்ஃபுல்" என்று அந்தக் காட்சியைப் பார்த்து ரசித்தாள் மீரா வின்சென்ட். 'இப்படிக் கூட நடந்திருக்குமா?' என்று கேட்பது மாதிரி கணவரை ஏறிட்டுப் பார்த்தாள்.

இடம்-மகாபலிபுரத்தை ஒட்டிய ஆளரவமற்ற பிரதேசம். "கால யாத்ரா"... நாற்பது ஐம்பது வருடத்துக்கு முன் இருந்த ஓர் இடம் அப்படியே பெயர்த்தெடுத்து வைக்கப்பட்டிருந்தது. ஒரு பெரிய கூடம். பத்துப் பதினொன்று சிறு சிறு அறைகள். இருபது முதியவர்கள். (எத்தனை தத்ரூபமான சிலை.) பொக்கை வாயைத் திறந்தபடி ஒரு கிழவர்... தொலைக் காட்சியில் ஏதோ பழைய படத்தைக் கண்டு பொய்ப் பல் தெரிய சிரிக்கும் வயோதிகர். அந்தச் சிறு "இல்லத்தில்" கூட நடை பயிலும் முதியவர்-

நரைமுடி... ஒட்டிய தேகம்... தளர்ந்த நடை-

"கடவுளே? இது மாதிரி முதியோர் இல்லம் கூட இருந்ததா!"

--இதற்காகவே காத்துக் கொண்டிருந்தாற் போலிருந்த வழிகாட்டி "யெஸ் மேடம். இது தாம்பரத்தில் இருந்த 'ஓல்ட் ஏஜ்' ஹோம். ஏதோ ஹெல்பேஜ், விஷ்ராந்த் போன்ற நிறுவனங்கள் டொனேஷன் கொடுத்து உதவினார்களாம். யூ நோ... தேவகோட்டையைச் சேர்ந்த... பத்து லட்சம் கொடுத்தாராம். ஏன் தெரியுமோ!"

"ஒய்?" என்று வின்சென்ட் கேட்டான்.

கைட் பதில் சொல்லுவதற்குள், கையிலுள்ள சிறு கருவி கீய்கீயென்று அலறியது. எடுத்தான். "ஹாய் ஜார்ஜ்" என்றான்.

மற்றவன் முகம் கருவியில் தெளிவாய்த் தெரிந்தது.

"ஏய் நான் பரத்டா... அடையாளம் தெரியலை?"

"ஏதோ ஞாபகம்! சொல்லு."

"மீராவின் பல் வலிக்கு டாக்டர் ஃபிக்ஸ் பண்ணச் சொன்னாயே?"

வாதூலன்



அப்போதுதான் ஞாபகம் வர, "யெஸ்... எத்தனை மணிக்கு" என்றான் வின்சென்ட்.

"அதைத்தான் சொல்ல வந்தேன். அந்த டாக்டர் சொத்தைப் பல்லை பிடுங்க மட்டும்தானாம். வலியைப் போக்க வேறு டாக்டர். சொல்லட்டுமா? நீ என்னிக்கு புறப்படறே?"

வின்சென்டுக்கு லேசான நிம்மதி ஏற்பட்டது. 'கால யாத்ரா'வில் முற்றும் புதிய சூழ்நிலையைப் பார்த்ததனாலோ என்னவோ மீரா சற்று நேரம் வலியை மறந்திருந்தாள்.

மீண்டும் சப்தம். கருவியை மூடினான்.

"ஆ... யெஸ் சார்... கூட்டம் கம்மி சார். பிலிம் பார்க்க வாருங்கள்" என்று சிப்பந்தி அவர்களை விளித்தான்.

மீராவின் கையைப் பற்றிக் கொண்டு, மெல்லிய வெளிச்சம் தெரிந்த ஹாலில் நடந்தான் வின்சென்ட். அந்த இருவருடன் வேறு சிலர் சேர்ந்தவுடன், மறுபடியும் திரை இயங்கியது.

கூடவே யந்திரத்தனமான குரல்– இல்லை யந்திரமான குரல்!

"நீங்கள் பார்த்துக் கொண்டிருப்பது அறுபது வருடத்திற்கு முன்பிருந்த ஓர் இல்லத்தின் காட்சி. தாத்தா அளவற்றப் பிரியத்துடன் பேரக் குழந்தைக்குப் புராணக் கதை சொல்லிக் கொண்டிருக்கிறார். மனைவி, கணவன் இருவருமே வேலைக்குப் போய் வருவதால்– அந்த எண்பது வயதுப் பெரியவர் பொறுமை

ஒன்றே ஒன்று மட்டுமே

யூடிஐ
மந்த்லி இன்கம் பிளான் 2000 (செகண்ட்)

நீங்கள் விரும்பும் வகையில்

வரியற்ற கவர்ச்சிமிகு வருமானம் ஆ.ஒ. 9.65% வருடாந்திரமாக வழங்கப்படும் ஆ.ஒ. 9.25% மாதாந்திரமாக வழங்கப்படும்	முதிர்வின்போது மூலதன பாதுகாப்பு	54ஈஈ முதலீட்டாளர்களுக்கு நல்லவாய்ப்பு

- 3 தேர்வுகள் உள்ள ஒரு 4 வருட 9 மாத காலவரம்புள்ள திட்டம்.
- 2000 ஜுலை 1 முதல் 2001 ஜுன் 30 வரை உள்ள ஆண்டில் 3 தேர்வுகளின் கீழும் வருமானம் பின்வருமாறு உறுதிப் படுத்தப்படுகிறது.
  - வருடாந்திரம்:வருடத்திற்கு 9.65%* வழங்கப்படும்.
  - மாதாந்திரம்;வருடாந்திரம் 9.25%* விழுக்காட்டில் மாதாந்திரம் வழங்கப்படும்.
  - க்யூமுலேடிவ்:9.65% கியூமுலேட்ட வடிவில்

  *இந்த விகிதங்கள் வருமான விநியோக வரியான 22%-ஐ கணக்கில்எடுத் துக்கொள்ளப்பட்டு தீர்வானவை. தற்போது இந்த வருமானம் எல்லா வகையான வாடிக் கையாளர்களுக்கும் முற்றிலும் வரி-விலக்குடன் கிடைக் கிறது.
- மீதியுள்ள காலம்/வருடங்களுக்கு உரிய விகிதங்கள் ஒவ்வொரு மார்ச் மாதமும் முன்னதாக அறிவிக்கப்படும்.
- குறைந்தபட்ச முதலீடு :ரூ. 10,000/.
- முதிர்வின்போது மூலதன பாதுகாப்பு: என்ஏவி அடிப்படையில் அல்லது முதலீட்டின் முகமதிப்பில் முதிர்வு இதில் எது அதிகமோ அது வழங்கப்படும். இந்த உத்தரவாதம் மறுகொள்முதல்களுக்கு நீட்டிக்கப்படுவதில்லை.
- லிக்விடிட்டி: 3 ஆண்டுகளுக்குப்பின்பு என்ஏவி அடிப்படையிலான விலையில் மறுகொள்முதல் வசதி. மேலும் முதலீடுகள் NSE ன் ஹோல்சேல் டெப்ட் செக்மெண்டில் அட்டவணை இடப்படும்.
- •54 ஈஈ முதலீட்டாளர்களுக்கு இரட்டை லாபம் 2000 ஏப்ரல் 1ம் தேதிக்கு முன்பு விற்கப்பட்ட/ மாற்றம் செய்யப்பட்ட நீண்டகால அடிப்படையிலான சொத்துக் களுக்கு பொருந்தும்.
- ECS மூலம் வருமானம் வரவு வைக்கப்படுகிறது 11 புதிய மையங்கள் உட்பட தேர்ந்தெடுத்த 22 மையங்களில் முதலீட்டாளர்களின் கணக்கில் நேரடியாக வருமானம் சேர்க்கப்படுகிறது.

கூடுதல் விபரங்களுக்கு உங்கள் அருகிலுள்ள யூடிஐ அலுவலகம் அல்லது முக்கிய பிரதிநிதி/முகவரை தயவுசெய்து அணுகவும்.

யூனிட் ட்ரஸ்ட் ஆஃப் இந்தியா

இந்தியாவின் மிகப்பெரிய மியூச்சுவல் ஃபண்ட்

13, சர் வித்தல்தாஸ் தக்கர்ஸி மார்க், நியூ மெரீன் லைன்ஸ், மும்பை-400 020.
டெலிபோன்: 2031818. வெப்சைட்: www.unittrustofindia.com

CWPL-UTI-TAM

விற்பனை 2000 ஜுன் 24ம் தேதிவரை நடப்பில்

இடர்ப்பு நிலைமைகள்: மயூச்சுவல் ஃபண்ட் மற்றும் செக்யூரிட்டிகளில் செய்யப்படும் முதலீடுகள் மார்க்கெட் ஏறுதாழ்விற்கு உட்பட்டவை. திட்டத்தின் என்ஏவி திட்டத்தின் போர்ட்ஃபோலியோவை பாதிக்கும் காரணங்களால் ஏறவோ இறங்கவோ செய்யலாம். கடந்தகால செயல்பாடுகள் எதிர்கால பலன்களை சுட்டிக்காட்டுவதாகாது. காலவரைக்கு முன்பான மறு கொள்முதல்களுக்காக மூலதன பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்க முடியாது. மற்றும் இத்தகைய நிலைகளில் மறுகொள்முதல் விலை என்ஏவியைப் பொறுத்தது. மந்த்லி இன்கம் பிளான் 2000 (செகண்ட்) என்பது திட்டத்தின் பெயரே தவிர திட்டத்தின் தரம் எதிர்கால வருமானம் அல்லது ஆதாயங்களை ஒரு வகையிலும் குறிப்பிடுவதாகாது. முதலீடு செய்யும் முன் வழங்கு பத்திரத்தை தயவு செய்து பார்க்கவும்.

தெற்கு பிராந்திய அலுவலகம் : சென்னை : (044) 5210347 கிளை அலுவலகங்கள் : சென்னை, 5210356/5230985 ●திருச்சி : 760060. ●மதுரை : 738186 ●கோயம்புத்தூர் : 214973. சப்ராஞ்சைஸ் அலுவலகம்: சேலம் 416414. சிஆர் கலெக்ஷன் மையங்கள் : ●குன்னூர் : 31037 ●கடலூர் : 21712 ●தர்மபுரி : 61012 ●திண்டுக்கல் : 432244 ●ஈரோடு : 252494. ●காஞ்சீபுரம் : 20076 ●காரைக்குடி : 22277 ●நாகர்கோவில் : 40274 ●மைலாடுதுறை : 26739 ●பாண்டிச்சேரி : 339080/346209 ●ராஜபாளையம் : 21360 ●தஞ்சாவூர் : 31374. ●திருநெல்வேலி : 339567 ●தூத்துக்குடி : 325621.

யாக, நிதானமாகக் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லி இந்திய பாரம்பரியத்தை..."

கதை சொல்லும் காட்சி... வேறு சில குரல்கள்...

"கைகேயி ஏன் தாத்தா அப்படி வரம் கேட்டாள்?"

"ஆசை... பேராசை... தன் மகன் பரதன் ஆள வேண்டுமென்ற ஆசை!"

"அதுக்கு ராமனை ஏன் காட்டுக்குப் போகச் சொல்லணும்?"

"பயம்தான்..."

"எனக்குப் பிடிக்கவே இல்லை தாத்தா... ஏதோ எரிஞ்சதே அதைச் சொல்லு..."

"ஓ... அனுமார் லங்கையை எரிச்சதா?"

மறுபடி குரல் ஒலித்தது. "இந்த வீட்டைப் பாருங்கள்! பாட்டி, பெண், மருமகன், பேரன் எல்லாரும் ஒன்று சேர்ந்து இருக்கும் காட்சி. வயோதிகத் தன்மை காரணமாகப் பாட்டி அந்த பேரன் போலவே தவழ்ந்து, தவழ்ந்து தன் இருப்பிடத்தை அடைந்து செல்லுகிறார்..."

சட்டென்று காட்சி மாறி, இப்போது கிராமத்து வீடு தெரிகிறது. "இந்தப் பெரியவருக்குக் கண் பார்வை மந்தம். காது கேட்காது. என்றாலும், பழைய கால வீட்டின் அமைப்பைப் புரிந்து கொண்டு நடமாடுகிறார்..."

கண் தெரியாத 'பெரிசு' சட்சட்டென்று ஓர் இலக்கில் கூடம், முற்றம், திண்ணை என்று மடமடவென நடக்கிறார். ஏதோ ஓசை ஒலிக்க "யார் அது? சின்னானா?"

"வணக்கமுங்கோ."

திரைக் காட்சி முடிகிறது. விளக்குகள் எரிய, இரு கைகளாலும் கண்களைத் தேய்த்து விட்டுக் கொண்டாள் மீரா. "டைம் ஆச்சு" என்றான் வின்சென்ட். "கிளம்பு" விறுவிறுவென்று வெளியே வந்தார்கள்.

'கால யாத்ரா'வின் முன் அறை... அங்கு ஒரு தத்ரூபமான சிலை.

முதியவர் ஒருத்தரை, நடுத்தர வயசுப் பெண்மணி காலில் விழுந்து ஆசி வாங்கிக் கொள்வது போல–

"அந்த நாளில், விசேட தினங்களில் வயசானவர்கள் காலில் விழுந்து ஆசிகள் பெற்றுக் கொள்வது சம்பிரதாயம்..." என்று யாரோ விளக்கினார்கள்.

"நான் காரிலே போய் 'இன்டர்நெட்' பார்க்கிறேன். நீ ஏதோ எழுதணுமென்றாயே.. எழுதிட்டு வா மீரா... யூ நோ பாஸ்டன் அட்ரசே இருக்கட்டும்..."


"நிச்சயமா."

வராந்தாவில் உள்ள புஸ்தகத்தைப் பார்த்தாள். முன் பக்கங்களைப் புரட்டிப் பார்த்தாள். பலரது பாராட்டு... கம்பெனி நிர்வாகிகள்... பட இயக்குனர்கள்... அரசியல்வாதிகள்.

"இந்த கால யாத்ரா உள்ளபடிக்கே பிரமாதம். இத்தகைய முதியோர் இல்லம் ஒன்றிருந்ததா... எழுபது வயதுக்கு மேற்பட்ட வயசானவர்களை வீட்டில் பராமரித்தார்களா என்பதையெல்லாம் பார்க்கும்போது ஆச்சரியமாகவே இருக்கிறது. இந்தியப் பண்பாட்டை நினைக்கும் போது சந்தோஷமாகவும் உள்ளது" என்று எழுதிவிட்டு வெளியே வந்தாள் மீரா.

காத்திருந்தான் வின்சென்ட். "யெஸ்"–

கார் ஓசையின்றி வேகமாய்ச் சீறிக் கொண்டு புறப்பட்டது. சற்று தூரம் போனவுடன் மீரா மெதுவாகக் கேட்டாள். "அப்போதெல்லாம் இப்படி முடமானவர்களுக்குக் 'கருணை மரணம்' கிடையாதா?"



"திடீர்னு பைத்தியம் பிடிச்சிடுச்சா... எதுக்கு நாற்காலியைத் தூக்கி அந்தப் பக்கம் வீசி எறிஞ்சீங்க?"

"நாளைக்கு நகர்மன்றக் கூட்டம் இருக்கு கமலா... ஒத்திகைப் பார்த்துக்கறேன்!"

– உ. ராஜாஜி

"சட்டமாக வந்திருக்காது."

வண்டி முட்டுக்காடு ஃப்ளாட்களைத் தாண்டி, திருவான்மியூர் நெருங்கினவுடன் வின்சென்ட் நிறுத்தினான். "சொல்ல மறந்து விட்டேனே! பழைய காலம் மீண்டும் திரும்புகிறது. இங்கே காளிதாஸ் அவென்யூ, ரெண்டாவது கிராஸ்"– வின்சென்ட், மீரா பக்கம் திரும்பி, தெரு, இடம் எல்லாவற்றையும் சொன்னான். "இங்கே நிஜமாகவே ரொம்பப் பிடிவாதமாக ஓர் எண்பது வயசுப் பெரியவரைப் பிள்ளையும், மருமகளும் பார்த்து வருகிறார்கள்... கருணை மரணம் விண்ணப்பிக்க மறுக்கிறார்கள்.. துணைக்கு ஒரு நர்ஸ்! படுத்த படுக்கைதான்... போய்ப் பார்க்கலாமா?"

"வேண்டாங்க" என்றாள் மீரா.

வின்சென்ட் தோளைக் குலுக்கினான். வண்டி காளிதாசைப் புறக்கணித்து, மயிலை நோக்கி விரைந்தது.



ஏழாம் அத்தியாயம்

மக்கள் குதூகலம்

ஓடக்கார முருகய்யன் தன் மனைவி போட்ட கூக்குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திகைத்தான். மறுபடியும் அவளைப் பார்த்துக் கையினால் சமிக்ஞைகள் செய்துகொண்டே, "பெண்ணே! என்ன உளறுகிறாய்? உனக்குப் பைத்தியமா?" என்றான்.

"எனக்கு ஒன்றும் பைத்தியமில்லை. உனக்குப் பைத்தியம்; உன் அப்பனுக்குப் பைத்தியம்; உன் பாட்டனுக்குப் பைத்தியம். உனக்கு இவரை அடையாளம் தெரியவில்லையா? ஈழத்தை வெற்றி கொண்டு மன்னன் மகிந்தனை மலை நாட்டுக்குத் துரத்திய வீராதி வீரரை உனக்கு இன்னாரென்று தெரியவில்லையா? சக்கரவர்த்தியின் திருக்குமாரரை, சோழ நாட்டு மக்களின் கண்ணின் மணியானவரை, காவேரித் தாய் காப்பாற்றிக் கொடுத்த தவப்புதல்வரை உன்னால் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லையா? அப்படியானால், இவரோடு எதற்காக நீ புறப்பட்டாய்? எங்கே போகப் புறப்பட்டாய்?" என்றாள் ராக்கம்மாள்.

இளவரசர் இப்போது குறுக்கிட்டு, "பெண்ணே! நீ என்னை யார் என்றோ தவறாக நினைத்துக்கொண்டாய்! நான் ஈழ நாட்டிலிருந்து வந்த வியாபாரி. நான்தான் இவனை என்னுடன் வழி

அமரர் கல்கி

காட்டுவதற்காக அழைத்துக்கொண்டு புறப்பட்டேன்! இவன் யார்? உன் கணவனா? வேணுமானால் இவனை உன்னோடு அழைத்துக்கொண்டு போ! வீண் கூச்சல் போடாதே!'' என்றார்.

இந்தப் பேச்சு நடந்து கொண்டிருந்த போதே அவர்களைச் சுற்றிலும் ஜனங்கள் கூடிவிட்டார்கள். கூட்டம் நிமிஷத்துக்கு நிமிஷம் அதிகமாகிக் கொண்டிருந்தது. வந்தவர்கள் எல்லாரும் இளவரசரை உற்றுப் பார்க்கலானார்கள்.

அப்போது ராக்கம்மாள் இன்னும் உரத்த குரலில், "ஆ! தெய்வமே! இது என்ன? பொன்னியின் செல்வருக்குச் சித்தப்பிரமையா? கடலில் முழுகிய போது நினைவை இழந்துவிட்டீர்களா? அல்லது அந்தப் பாவி புத்த பிக்ஷுக்கள் இப்படித் தங்களை மந்திரம் போட்டு மயக்கி வேறொருவர் என்று எண்ணச் செய்து விட்டார்களா? அல்லது, - ஐயையோ! - அப்படியும் இருக்குமா? தாங்கள் இறந்து போய், தங்கள் திருமேனியில் வேறு எவனேனும், கூடு விட்டுக் கூடு பாயும் வித்தை தெரிந்தவன், வந்து புகுந்திருக்கிறானா? அப்படியெல்லாம் இருக்கமுடியாது! கோமகனே! நன்றாக யோசித்துப் பாருங்கள். தாங்கள் வியாபாரி அல்ல. சுந்தர சோழ சக்கரவர்த்தியின் திருப்புதல்வர். உலகத்தை ஒரு குடை நிழலில் ஆளப் பிறந்தவர். சந்தேகமிருந்தால் தங்கள் உள்ளங்கைகளைக் கவனமாகப் பாருங்கள். சங்கு சக்கர ரேகைகள் இருக்கும்!'' என்று கத்தினாள்.


உடனே இளவரசர் அருள்மொழி வர்மர் தம் இரு கைகளையும் இறுக மூடிக்கொண்டார்.

''பெண்ணே! நீ வாயை மூடிக் கொண்டு சும்மா இருக்க மாட்டாயா!'' என்று சொல்லிவிட்டு, முருகய்யனைப் பார்த்து, "இது என்ன தொல்லை? இவளுடைய கூச்சலை நிறுத்த உன்னால் முடியாதா?'' என்று கேட்டார்.

முருகய்யன் தன் மனைவியின் அருகில் வந்து காதோடு, "ராக்கம்மா! உனக்குப் புண்ணியமாய்ப் போகட்டும்! பேசாமலிரு! இளவரசர் யாருக்கும் தெரியாமல் வியாபாரி வேஷத்தில் தஞ்சாவூர் போக விரும்புகிறார்!'' என்றான்.

''அடபாவி மகனே! இதை முன்னாடியே சொல்லியிருக்கக் கூடாதா? புத்தமடத்தில் இளவரசர் இருக்கவே மாட்டார் என்று சொன்னாயே? அந்தப் புத்தியோடுதான் இப்போதும் இருந்திருக்கிறாய். ஐயையோ! என்ன குற்றம் செய்துவிட்டேன்! ஆசை மிகுதியால் உளறி விட்டேனே? பாவிப் பழுவேட்டரையர்கள் தங்களைச் சிறைப்படுத்திப் பழி வாங்கச் சமயம் பார்த்துக்கொண்டிருக்கிறார்களே! அது தெரிந்திருந்தும் இப்படித் தங்களைப் பகிரங்கப்படுத்தி விட்டேனே? இளவரசே! ஆனாலும் நீங்கள் அஞ்ச வேண்டாம். பழுவேட்டரையர்கள் தங்கள் திருமேனியில் ஓர் அணுவுக்கும் தீங்கு செய்யமுடியாது. என்னைப் போலும் என் கணவனைப் போலும் லட்ச லட்சம் பேர்கள் தங்கள் கட்சியில் நின்று தங்களைப் பாதுகாக்க ஆயத்தமாயிருக்கிறார்கள்!'' என்றாள். உடனே தன்னைச் சுற்றிலும் நின்ற பெருங்கூட்டத்தைப் பார்த்து, "நான் சொன்னதை நீங்கள் எல்லாரும் ஆமோதிக்கிறீர்கள் அல்லவா? உங்களில் யாரேனும் பழுவேட்டரையர் கட்சியைச் சேர்ந்தவர்கள் உண்டா? அப்படியானால், அவர்கள் இப்படி முன்னால் வாருங்கள்! என்னை முதலில் கொன்று விட்டுப் பிறகு இளவரசருக்குத் தீங்கு செய்ய எண்ணுங்கள்!'' என்று அலறினாள்.

அதுவரையில் அடங்காத வியப்புடன் பார்த்துக் கேட்டுக் கொண்டிருந்த மக்கள், உடனே, ''பொன்னியின் செல்வர் வாழ்க! ஈழங் கொண்ட வீராதி வீரர் வாழ்க!'' என்று பெரிய கோஷத்தைக் கிளப்பினார்கள். அதைக் கேட்டு விட்டு மேலும் பல மக்கள் திரண்டு வந்து அங்கே கூடினார்கள். அப்படி வந்தவர்களிலே நாகைப்பட்டினம் நகரத்தின் எண்பேராயத் தலைவர் ஒருவரும் இருந்தார். அவர் கூட்டத்தை



விலக்கிக்கொண்டு முன்னால் வந்து, "கோமகனே! தாங்கள் இந்த நகரின் சூடாமணி விஹாரத்தில் இருந்து வருவதாகக் கேள்விப்பட்டோம். அந்த வதந்தியை நாங்கள் நம்பவில்லை. இப்போது உண்மை அறிந்தோம். நேற்று அடித்த பெரும்புயல் இந்த நகரத்தில் எத்தனையோ நாசங்களை விளைத்திருக்கிறது. ஆனாலும், தங்களைப் புத்த விஹாரத்திலிருந்து பத்திரமாய் வெளிக்கொணர்ந்ததே, அதை முன்னிட்டுப் புயலின் கொடுமைகளையெல்லாம் மறந்து விடுகிறோம். இந்த நகரில் தங்களுடைய பாதம் பட்டது இந்நகரின் பாக்கியம்!" என்று கூறினார்.

இளவரசர் இனிமேல் தன்னை மறைத்துக் கொள்ளப் பார்ப்பதில் பயனில்லை என்று கண்டுகொண்டார்.

"ஐயா! தங்களுடைய அன்புக்கு மிக்க நன்றி. இந்த நகர மாந்தரின் அன்பு என்னைப் பரவசப்படுத்துகிறது. ஆனால் வெகு முக்கியமான காரியமாக நான் தஞ்சாவூருக்கு அவசரமாகப் போக வேண்டியிருக்கிறது. பிரயாணம் தடைப்படக்கூடாது என்பதற்காகத்தான் இப்படி வியாபாரியின் வேடம் பூண்டு புறப்பட்டேன். எனக்கு விடை கொடுங்கள்!" என்றார்.

அப்போது கூட்டத்திலிருந்து ஒரு குரல் கிளம்பியது. "கூடாது கூடாது! இளவரசர் இங்கே ஒரு நாளாவது தங்கி ஏழைகளாகிய எங்களின் உபசாரத்தைப் பெற்றுக்கொண்டுதான் புறப்பட வேண்டும்" என்று உரக்கச் சத்தமிட்டுக் கூறியது அக்குரல்.

அதைப் பின்பற்றி இன்னும் ஆயிரமாயிரம் குரல்கள் "கூடவே கூடாது! இளவரசர் ஒரு நாளாவது இங்கே தங்கி இளைப்பாறி விட்டுத்தான் போக வேண்டும்!" என்று கூச்சலிட்டனர்.

எண்பேராயத்தின் தலைவர் அப்போது "கோமகனே! என் நகர மக்களின் அன்பையும் உற்சாகத்தையும் பார்த்தீர்களா? எங்கள் உபசாரத்தைத் தாங்கள் ஏற்றுக்கொண்டு ஒருவேளையாவது எங்கள் விருந்தாளியாக இருந்து விட்டுத்தான் போக வேண்டும். புத்த பிக்ஷுக்கள் செய்த பாக்கியம் நாங்கள் செய்யவில்லையா? நேற்று இந் நகர மாந்தர் தங்களைப் புத்த பிக்ஷுக்கள் மறைத்து வைத்திருக்கிறார்கள் என்று சந்தேகப்பட்டுச் சூடாமணி விஹாரத்தையே தகர்த்து மண்ணோடு மண்ணாக்கி விடப் பார்த்தார்கள். அந்தச் சமயத்தில் புயல் வந்து விட்டது! நாங்கள் செய்யத் தவறியதைப் புயல் செய்துவிட்டது. விஹாரம் இடிந்து மண்ணோடு மண்ணாகி விட்டது!" என்று சொன்னார்.

அதைக் கேட்ட இளவரசர் "ஐயா! தாங்கள் புத்த பிக்ஷுக்கள் மீது குற்றம் சுமத்தியது சரியல்ல. என்னுடைய வேண்டுகோளுக்காகவே பிக்ஷுக்கள் புத்த விஹாரத்தில் என்னை வைத்திருந்தார்கள். நோய்வாய்ப்பட்டு உயிருக்கு மன்றாடிய என்னை யமனுடைய பாசக் கயிற்றிலிருந்து காப்பாற்றினார்கள். சூடாமணி விஹாரம் விழுந்துவிட்டது என்று கேட்டு என் மனம் வேதனைப்படுகிறது. அதைத் திருப்பிக் கட்டிக் கொடுப்பது என்னுடைய கடமை!" என்றார்.

"ஆகா! இதெல்லாம் முன்னரே எங்களுக்குத் தெரியாமல் போயிற்றே! இப்போது தெரிவித்து விட்டபடியால் சூடாமணி விஹாரத்தை நாங்களே புதுப்பித்துக் கட்டிக் கொடுத்து விடுவோம். இளவரசே! தாங்கள் ஒருவேளை எங்கள் விருந்தாளியாக மட்டும் இருந்து விட்டுப் போக வேண்டும்!" என்றார் எண்பேராயத்தின் தலைவர்.


"ஆமாம், ஆமாம்!" என்று பதினாயிரக்கணக்கான மக்களின் குரல்கள் எதிரொலி செய்தன.

"இளவரசே! இங்கே தங்குவதினால் ஏற்படும் தாமதத்தைச் சரிப்படுத்திக் கொள்ளலாம். தாங்களோ கால்நடையாகப் புறப்பட்டிருக்கிறீர்கள். புயல் மழை காரணமாகச் சோழ நாட்டுச் சாலைகள் எல்லாம் தடைப்பட்டுக் கிடக்கின்றன. நதிகளிலெல்லாம் பூரண வெள்ளம் போகிறது. கால்நடையாகச் சென்று எப்போது போய்ச் சேர்வீர்கள்?

தங்களை யானை மீது வைத்து ஊர்வலமாக அனுப்புகிறோம். தங்களுடன் நாங்கள் அனைவரும் வந்து தஞ்சாவூருக்கே கொண்டு விட்டு வருகிறோம்" என்றார் எண்பேராயத்தின் தலைவர்.

அவர் பேசிக்கொண்டிருக்கையில், ஜனங்களின் கூட்டம் மேலும் அதிகமாகிக்கொண்டிருந்தது.

இளவரசர் யோசித்தார். காரியம் என்னவோ கெட்டுப் போய் விட்டது. இரகசியம் வெளியாகிவிட்டது. ராக்கம்மாள் மூடத்தனமாகக் கூச்சலிட்டு வெளிப்படுத்தி விட்டாள். மூடத்தனத்தினால் தான் வெளிப்படுத்தினாளா...? அல்லது வேறு ஏதேனும் நோக்கம் இருக்குமா...? எப்படியிருந்தாலும் இந்த நகர மக்களின் அன்பை மீறிக்கொண்டு உடனே புறப்படுவது இயலாத காரியம். அதனால் இவர்கள் மனக்கஷ்டம் அடைவார்கள். அதோடு, உத்தேசத்திலுள்ள நோக்கம் மேலும் தவறினாலும் தவறிவிடும். மத்தியானம் வரையிலேனும் இருந்து இவர்களைச் சமாதானப்படுத்தி விட்டுத்தான் போக வேண்டும். புயலினால் கஷ்ட நஷ்டங்களை அடைந்தவர்களுக்குச் சிறிது ஆறுதல் கூறிவிட்டுப் போக வசதியாகவும் இருக்கும். ஆகா! நான் இச்சமயம் என்னை வெளிப்படுத்திக் கொள்வதால் நாட்டில் குழப்பம் விளையும் என்று இளைய பிராட்டி குந்தவை கூறினாரே? அது எவ்வளவு உண்மையான வார்த்தை? – என் தமக்கையைப் போன்ற அறிவாளி இந்த உலகிலேயே யாரும் இல்லை



தான்! - தஞ்சைச் சிங்காதன உரிமையைப் பற்றிப் பேசுகிறார்களே? உண்மையில், குந்தவை தேவியை அல்லவா சிம்மாதனத்தில் அமர்த்த வேண்டும்...?

இவ்வாறு பொன்னியின் செல்வர் சிந்தித்துக்கொண்டிருந்தபோது ஜனக் கூட்டம் மேலும் அதிகமாகி வருவதைக் கண்டார். அவர்களுடைய குதூகலமும் வளர்ந்து வருவதை அறிந்தார். புயலின் கொடுமைகளையும் மக்கள் அடியோடு மறந்து விட்டதாகத் தோன்றியது. எங்கிருந்தோ, யானைகள், குதிரைகள், சிவிகைகள், திருச்சின்னங்கள், கொடிகள், பேரிகை, எக்காளம் முதலிய வாத்தியங்கள் - எல்லாம் வந்து சேர்ந்து விட்டன.

அரைப் பகல் நேரமாவது இங்கே தங்கி விட்டுத்தான் புறப்பட வேண்டும் என்று இளவரசர் முடிவு செய்தார்.

எண்பேராயத்தின் தலைவரைப் பார்த்து, "ஐயா! இவ்வளவு மக்களின் அன்பையும் புறக்கணித்து விட்டு நான் போக விரும்பவில்லை. பிற்பகல் வரையில் இங்கே இருந்துவிட்டு மாலையில் புறப்படுகிறேன். அதற்காவது அனுமதி கொடுப்பீர்கள் அல்லவா?" என்றார்.

இளவரசர் தங்கிச் செல்லச் சம்மதித்து விட்டார் என்ற செய்தி பரவியதும் ஜனக்கூட்டத்தின் உற்சாகம் எல்லை கடந்துவிட்டது. குதூகலத்தை வெளிப்படுத்தும் வழிகளைக் கடைப்பிடிக்கத் தொடங்கினார்கள். வாத்தியங்கள் முழங்கத் தொடங்கின. ஆங்காங்கே வீதிகளில் கத்தி விளையாட்டு, கழி விளையாட்டு, குரவைக் கூத்து முதலியவை ஆரம்பமாயின. ஜனங்களையும் அவர்களுடைய குதூகல விளையாட்டுகளையும் கடந்து கொண்டு நாகைப்பட்டினத்துச் சோழ மாளிகைக்குச் செல்வது பெரிதும் கஷ்டமாயிற்று. எப்படியோ கடைசியில் போய்ச் சேர்ந்தார்கள்.

மாளிகைக்குள் இளவரசர் சிறிது நேரம் கூடத் தங்கி இளைப்பாற முடியவில்லை. ஏனெனில், அவர் வெளிப்பட்ட செய்தி அக்கம் பக்கத்துக் கிராமங்களுக்கெல்லாம் பரவிவிட்டது. ஜனங்கள் திரள் திரளாக வந்து குவிந்து கொண்டிருந்தார்கள். இளவரசரைப் பார்க்க வேண்டும் என்ற தங்கள் ஆவலைத் தெரியப்படுத்திக்கொண்டார்கள்.

இளவரசரும் அடிக்கடி வெளியில் வந்து ஜனக் கூட்டத்தினிடையே சென்று அவர்களுடைய க்ஷேம லாபங்களைப் பற்றிக் கேட்டார். புயலினால் விளைந்த கஷ்ட நஷ்டங்களைப் பற்றி அநுதாபத்துடன் விசாரித்தார். தாம் தஞ்சாவூருக்குப் போனவுடனே ஜனங்கள் அடைந்த கஷ்டங்களுக்குப் பரிகாரம் கிடைக்க ஏற்பாடு செய்வதாகக் கூறினார். அதைப் பற்றி ஜனங்கள் அவ்வளவு உற்சாகமடையவில்லை என்பதையும் கண்டு கொண்டார். ஜனங்கள் ஒருவரோடொருவர் "பழுவேட்டரையர்களின் அதிகாரத்துக்கு முடிவு ஏற்படுமா?" என்று பேசிக்கொண்டதும் அவர் காதில் விழுந்தது. சக்கரவர்த்தியின் உடல் நிலையைப் பற்றியும் அடுத்தபடி சிம்மாதனத்துக்கு வரக்கூடியவரைப் பற்றியும் அடக்கமான குரலில், ஆனால் இளவரசர் காதில் விழும்படியாகப் பலரும் பேசினார்கள்!

இதற்கிடையில் நாகைப்பட்டினம் நகரின் ஐம்பெருங் குழுவின் அதிகாரிகளும், எண்பேராயத்தின் தலைவர்கள் அனைவரும் வந்து சேர்ந்துவிட்டார்கள். இளவரசருக்கு விருந்து அளிக்கப் பெருந்தர ஏற்பாடுகள் நடந்தன. இளவரசரைப் பார்க்க வந்த ஜனத்திரளுக்கு உணவளிக்கும் ஏற்பாடுகளும் நடந்தன. புயலினால் நஷ்டமானது போக நகரில் எஞ்சியிருந்த தானியங்கள் எல்லாம் வந்து குவிந்தன. கறிகாய்களைப் பற்றியோ கவலையே இல்லை. விழுந்த வாழை மரங்களின் வாழைக் காய்க் குலைகளையும், விழுந்த தென்னை மரங்களின் தென்னங் குலைகளையும் கொண்டு ஒரு லட்சம் பேருக்கு விருந்து தயாரித்து விடலாமே!

விருந்துகள் முடிந்து, புறப்பட வேண்டிய சமயம் நெருங்கிற்று. இளவரசர் சோழ மாளிகையின் மேன்மாடத்து முகப்பில் வந்து கைகூப்பிக்கொண்டு நின்றார். வீதியில் ஒரு பெரிய கோலாகலமான ஊர்வலம் புறப்படுவதற்கு எல்லாம் ஆயத்தமாயிருந்தன. இளவரசர் ஏறிச் செல்வதற்கு அலங்கரிக்கப்பட்ட யானை ஒன்று வந்து நின்றது. முன்னாலும் பின்னாலும் குதிரைகள், ரிஷபங்கள் முதலியவை நின்றன. திருச்சின்னங்களும் கொடிகளும் ஏந்தியவர்களும் பலவித வாத்தியக்காரர்களும் அணிவகுத்து நின்றார்கள். மக்களோ நேற்று மாலை பொங்கி எழுந்த கடலைப் போல ஆரவாரித்துக் கொண்டு கண்ணுக்கெட்டிய தூரம் நின்றார்கள்.

இளவரசர் வெளித்தோற்றத்துக்குப் புன்னகை பூத்த முகத்துடன் பொலிந்தார். அவர் உள்ளத்திலோ பெருங்கவலை குடிகொண்டிருந்தது; பெற்ற தாயைக் காட்டிலும் பதின்மடங்கு அவருடைய அன்பைக் கவர்ந்திருந்த ஈழத்து ராணியின் கதியைப் பற்றி அறிந்து கொள்ள அவர் உள்ளம் துடிதுடித்தது. முருகய்யன் மனைவியிடம் இன்னும் சிறிது விவரம் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம் என்று எண்ணியிருந்தார். அவளோ ஜனக் கூட்டத்தில் மறைந்துவிட்டாள். முருகய்யன் மட்டும் முண்டியடித்துக் கொண்டு இளவரசரைத் தொடர்ந்து சோழ மாளிகைக்கு வந்து சேர்ந்தான். அவன் மனைவி ராக்கம்மாள் என்ன ஆனாள் என்பது அவனுக்கும் தெரியவில்லை

மற்றொரு பக்கத்தில் இளவரசரை வேறொரு கவலை பற்றிக்கொண்டிருந்தது. சக்கரவர்த்தியின் விருப்பத்துக்கு விரோதமாக, தான் இராஜ்யத்தைக் கைப்பற்ற விரும்புவதாய் முன்னமேயே பழுவேட்டரையர்கள் சொல்லிக்கொண்டிருந்தார்கள். இந்த ஜனங்கள் செய்யும் ஆர்ப்பாட்டங்களின் காரணமாக அவர்கள் கூற்று உண்மை என்று ஏற்பட்டு விடலாம் அல்லவா?

எப்படியாவது இந்த நகர மாந்தர்களின் அன்புச் சுழலிலிருந்து தப்பித்துப் போனால் போதும் என்று இளவரசருக்குத் தோன்றிவிட்டது.

இந்த நிலைமையில் அவர் சற்றும் எதிர்பாராத இன்னொரு சம்பவம் நிகழ்ந்தது.

ஜனங்களிடம் விடை பெற்றுக் கொள்ளும் பாவனையில் இளவரசர் கும்பிட்டுக்கொண்டு நின்றபோது, ஜனக்கூட்டத்தை விலக்கிக்கொண்டு ஐம்பெருங்குழுவின் அதிகாரிகளும் எண்பேராயத்தின் தலைவர்களும் மாளிகையின் வாசலில் வந்து நின்றார்கள்.

முன்னேற்பாட்டின்படி நிகழ்ந்தது போல், சில நிமிட நேரம் பேரிகை, முரசு, எக்காளம் முதலிய நூறு நூறு வாத்தியங்கள் கடலொலியையும் அடக்கிக்கொண்டு ஒலித்தன. சட்டென்று அவ்வளவு வாத்தியங்களும் நின்றபோது அப் பெருங் கூட்டத்தில் நிச்சப்தம் நிலவியது. அச்சமயத்தில் நகரத் தலைவர்களில் முதியவராகக் காணப்பட்ட ஒருவர் மாளிகை முன் வாசலில் இருந்த நிலா மேடை மீது ஏறி நின்றுகொண்டு கம்பீரமான குரலில் கூறினார்:-

''பொன்னியின் செல்வ! ஒரு விண்ணப்பம். நாகை நகரையும் அக்கம் பக்கத்துக் கிராமங்களையும் சேர்ந்த ஜனங்களின் சார்பாக ஒரு கோரிக்கை. சக்கரவர்த்தியின் உடல் நிலையைப் பற்றி நாங்கள் அனைவரும் கவலை கொண்டிருக்கிறோம். அதைப் போலவே நாங்கள் கேள்விப்படும் இன்னொரு செய்தியும் எங்களுக்குக் கவலை தருகிறது. பழுவேட்டரையர்களும் பல சிற்றரசர்களும் சேர்ந்து சக்கரவர்த்திக்குப் பிறகு மதுராந்தகத் தேவருக்கு முடிசூட்டத் தீர்மானித்திருப்பதாக அறிகிறோம். மதுராந்தகத் தேவர் இன்று வரையில் போர்க்களம் சென்று அறியாதவர். அவர் பட்டத்துக்கு வந்தால் உண்மையில் பழுவேட்டரையர்கள்தான் இராஜ்யம் ஆளுவார்கள். சிற்

றரசர்கள் வைத்ததே சட்டமாயிருக்கும். இளவரசர் ஆதித்த கரிகாலர் மூன்று ஆண்டு காலமாகச் சோழ நாட்டுக்கு வரவேயில்லை. அதற்கு ஏதேதோ காரணங்கள் சொல்கிறார்கள். அவருக்கு மகுடம் சூட்டிக்கொள்ள விருப்ப மில்லை என்றும் கூறுகிறார்கள். அப்படியானால் அடுத்தபடி நியாயமாகப் பட்டத்துக்கு வர வேண்டியவர் யார்? சோழ நாடு தவம் செய்து பெற்ற புதல்வரும், காவேரித் தாய் காப்பாற்றிக் கொடுத்த செல்வரும், ஈழம் வென்ற வீராதி வீரருமான தாங்கள்தான்... மக்களே! நான் கூறியது உங்களுக்கெல்லாம் சம்மதமான காரியமா?'' என்று அந்த முதியவர் சுற்றிலும் நின்ற ஜனத்திரளைப் பார்த்துக் கேட்கவும், எட்டுத்திசையும் நடுங்கும்படியான பேரொலி அக் கூட்டத்திலிருந்து எழுந்தது. "ஆம், ஆம்; எங்கள் கருத்தும் அதுவே!'' என்று பதினாயிரம் குரல்கள் கூறின. அதைத் தொடர்ந்து "பொன்னியின் செல்வர் வாழ்க!'' என்று ஒரு லட்சம் குரல்கள் கோஷித்தன. இவ்வளவு கோஷங்களும் சேர்ந்து உருத் தெரியாத ஒரு பெரும் இரைச்சலாகக் கேட்டது.

மறுமொழி சொல்வதற்காக இளவரசரின் உதடுகள் அசையத் தொடங்கியதும், ஏதோ மந்திர சக்தியினால் கட்டுண்டு அடங்கியது போல் அந்தப் பேரிரைச்சல் அடங்கியது.

"ஐயா! நீங்கள் எல்லாரும் என்னிடம் கொண்டிருக்கும் அன்பைக் கண்டு ஆனந்தப்படுகிறேன். ஆனால் அந்த அன்பை நீங்கள் காட்டும் விதம் முறையாக இல்லையே? என் அருமைத் தந்தை - சுந்தர சோழ சக்கரவர்த்தி - இன்னும் ஜீவிய வந்தராக இருக்கிறார் என்பதை நீங்கள் மறந்துவிட்டதாகத் தோன்றுகிறது. சக்கரவர்த்தி நீடூழி வாழ வேண்டும் என்று என்னுடன் சேர்ந்து நீங்களும் பிரார்த்திக்க வேண்டும். சக்கரவர்த்தி ஜீவியவந்தராக இருக்கும்போது அவருக்குப் பிறகு பட்டத்துக்கு யார் என்பதைப் பற்றி யோசிப்பது ஏன்?''

நகரத் தலைவர்களிலே முதல் தலைவரான முதியவர் இளவரசரின் இக் கேள்விக்குச் சரியான விடை வைத்திருந்தார்.

"பொன்னியின் செல்வ! சோழ நாட்டில் ஒரு மன்னர் உயிரோடிருக்கும் போதே அடுத்தபடி பட்டத்துக்குரியவர் யார் என்பதை நிர்ணயித்து விடுவது தொன்று தொட்டு வந்திருக்கும் வழக்கம். மதுரை கொண்ட வீரரும் தில்லையம்பலத்துக் கோயிலுக்குப் பொற்கூரை வேய்ந்தவருமான மகா பராந்தக சக்கரவர்த்தி, தம் காலத்திலேயே தமக்குப் பின் பட்டத்துக்கு வர வேண்டியவர்களை முறைப்படுத்தி விடவில்லையா? அதன்படிதானே தங்கள் தந்தை சிம்மாசனம் ஏறினார்?'' என்றார்.

"ஆம், ஆம்! ஆகையால் இப்போதும் அடுத்த பட்டத்துக்கு உரியவரைப் பற்றிச் சக்கரவர்த்திதானே தீர்மானிக்க வேண்டும்? நீங்களும் நானும் அதைப் பற்றி யோசிப்பதும் பேசுவதும் முறை அல்லவே?'' என்றார் இளவரசர்.

"பொன்னியின் செல்வ! சக்கரவர்த்திக்குத்தான் அந்த உரிமை உண்டு என்பதை ஒப்புக்கொள்கிறோம். சக்கரவர்த்தி சுயேச்சையாக முடிவு செய்யக் கூடியவராயிருந்தால் அது சரியாகும். தற்போது சக்கரவர்த்தியைப் பழுவேட்டரையர்கள் தஞ்சைக் கோட்டைக்குள் சிறைப்படுத்தி அல்லவோ வைத்திருக்கிறார்கள்? இளவரசே! இன்னும் சொல்லப்போனால், சக்கரவர்த்தி உயிரோடு இருக்கிறாரா என்பதைப் பற்றியே எங்களில் பலருக்குச் சந்தேகமாயிருக்கிறது. தங்களுடன் தொடர்ந்து தஞ்சைக்கு வந்து அந்தச் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ள விரும்புகிறோம். அதிர்ஷ்டவசமாகச் சக்கரவர்த்தி நல்லபடியாக இருந்தால், அவரிடம் எங்கள் விருப்பத்தைத் தெரிவித்துக்கொள்வோம். அவருக்குப் பிற்பாடு தாங்கள்தான் சிங்காதனம் ஏற வேண்டுமென்று விண்ணப்பித்துக் கொள்வோம். பிறகு, சக்கரவர்த்தி முடிவு செய்கிறபடி செய்யட்டும்!''

பெரியவர் சக்கரவர்த்தி உயிரோடிருக்கிறாரா என்பதைப் பற்றிச் சந்தேகப்



பட்டுக் கூறிய வார்த்தைகள் இளவரசரின் உள்ளத்தில் ஒரு பெரும் திகிலை உண்டாக்கின. இத்தனை நாளும் அவர் அறிந்திராத வேதனையும் பீதியும் ஏற்பட்டன. சக்கரவர்த்தியின் உயிருக்கு ஏதோ ஆபத்து நெருங்கிவிட்டது போலவும், அதைத் தடுக்க முடியாத தூரத்தில் தாம் இருப்பது போலவும் ஒரு பிரமை உண்டாயிற்று. ஈழத்து ராணியை யாரோ மூர்க்கர்கள் பலவந்தமாகப் பிடித்துக்கொண்டு போன விவரமும் நினைவுக்கு வந்தது. இனி ஒரு கணமும் தாமதியாமல் தஞ்சை போய்ச் சேர வேண்டும் என்ற பரபரப்பு ஏற்பட்டது. ஒரு சில வினாடி நேரத்தில் இளவரசர் தாம் செய்ய வேண்டியது இன்னதென்று தீர்மானித்துக்கொண்டார். இவர்களுடன் வாதமிட்டுக் கொண்டிருப்பதில் பயனில்லை. பிரயாணப்படுவதுதான் தாமதமாகும். இப்போது இவர்கள் பேச்சை ஒப்புக்கொண்டதாகச் சொல்லிப் பிரயாணப்பட்டு விட்டால், வழியில் போகப் போக வேறு உபாயங்களைக் கண்டுபிடித்துக் கொள்ளலாம்.

"ஐயா! உங்களுடைய விருப்பத்துக்கு நான் குறுக்கே நிற்கவில்லை.



சக்கரவர்த்தியைப் பற்றித் தாங்கள் கூறியது அவரைத் தரிசிக்க வேண்டுமென்ற என் கவலையை அதிகரித்துவிட்டது. நான் உடனே புறப்பட வேண்டும். நீங்களும் சக்கரவர்த்தியைத் தரிசிக்க விரும்பினால் தாராளமாக என்னுடன் வாருங்கள். பட்டத்து உரிமையைப் பற்றிச் சக்கரவர்த்தி என்ன சொல்லுகிறாரோ, அதைக் கேட்டு நாம் அனைவரும் நடந்து கொள்வோம்!" என்றார்.

சிறிது நேரத்துக்கெல்லாம் இளவரசர் யானை மீது ஏறிக்கொண்டு பிரயாணப் பட்டார். ஆயிரக்கணக்கான மக்கள் அடங்கிய ஒரு மாபெரும் ஊர்வலம் தஞ்சையை நோக்கிப் புறப்பட்டது. போகப் போக இளவரசருடன் தொடர்ந்த ஊர்வலம் பெரிதாகிக்கொண்டிருந்தது.

எட்டாம் அத்தியாயம்

படகில் பழுவேட்டரையர்

புயல் அடித்த காலையிலேதான் பெரிய பழுவேட்டரையர் கடம்பூரிலிருந்து தஞ்சைக்குப் புறப்பட்டார் என்பது நேயர்களுக்கு நினைவிருக்கும். கொள்ளிட நதி வரையில் அவர் வழக்கமான பாதையிலே சென்று, பின்னர் கொள்ளிடக் கரைச் சாலை வழியாக மேற்கு நோக்கித் திரும்பினார். சோழ நாட்டுக் கிராமங்களின்



வழியாக அவர் நீண்ட பிரயாணம் செய்ய விரும்பவில்லை. மேற்கே சென்று திருவையாறுக்கு நேராகக் கொள்ளிடத்தைக் கடக்க விரும்பிச் சென்றார்.

வழக்கம்போல் நூற்றுக்கணக்கான பரிவாரங்களுடன் இச்சமயம் பெரிய பழுவேட்டரையர் புறப்படவில்லை. தாம் போவதும் வருவதும் கூடிய வரையில் எவருடைய கவனத்தையும் கவராமலிருக்க வேண்டுமென்று நினைத்தார். ஆகையால் பத்துப் பேரைத்தான் தம்முடன் அழைத்துப் போனார்.

திருவையாற்றுக்கு நேரே கொள்ளிடத்துக்கு வடகரையில் பழுவேட்டரையர் வந்தபோது அந்தப் பெரிய நதியில் வெள்ளம் இரு கரையும் தொட்டுக்கொண்டு பிரவாகமாகப் போய்க் கொண்டிருந்தது. அங்கிருந்த சிறிய படகில் குதிரைகளைக் கொண்டு போவது இயலாத காரியம். பெருங்காற்றுக்கு அறிகுறிகள் காணப்பட்டுக் கொண்டிருந்தன. ஆகையால், திரும்பிப் போவதற்குச் சௌகரியமாக இருக்கட்டும் என்று குதிரைகளை வடகரையில் விட்டுவிட்டுப் பழுவேட்டரையர் தம்முடன் வந்த பத்து வீரர்களுடன் படகில் ஏறினார். படகு நடு நதியில் சென்றுகொண்டிருந்தபோது புயல் வலுத்துவிட்டது. படகோட்டிகள் இருவரும் எவ்வளவோ கஷ்டப்பட்டுப் படகைச் செலுத்தினார்கள். நதி வெள்ளத்தின் வேகம் படகைக் கிழக்கு நோக்கி இழுத்தது. புயல் அதை மேற்கு நோக்கித் தள்ளப் பார்த்தது. படகோட்டிகள் படகைத் தெற்கு நோக்கிச் செலுத்த முயன்றார்கள். இந்த மூன்று வித சக்திகளுக்கு இடையில் அகப்பட்டுக்கொண்ட படகு திரும்பித் திரும்பிச் சக்கராகாரமாகச் சுழன்றது.

பழுவேட்டரையரின் உள்ளத்திலும் அப்பொழுது ஒரு பெரும் புயல் அடித்துச் சுழன்றுகொண்டிருந்தது. நந்தினியின் எதிரில் இருக்கும்போது அவருடைய அறிவு மயங்கிப் போவது சாதாரண வழக்கம். அவள் கூறுவதெல்லாம் சரியாகவே அவருக்குத் தோன்றும். வாழ்நாளெல்லாம் தமக்குப் பிடிக்காமலிருந்த ஒரு காரியத்தை நந்தினி சொல்லும்போது அது செய்வதற்குரியதாகவே அவருக்குத் தோன்றி விடும். ஏதேனும் மனத்தில் சிறிது சந்தேகமிருந்தாலும் அவருடைய வாய் ''சரி சரி! அப்படியே செய்வோம்'' என்று கூறி விடும். சொல்லிய பிறகு, வாக்குத் தவறி எதுவும் செய்வதற்கு அவர் விரும்புவதில்லை.

இப்போதும் அவரைத் தஞ்சைக்குப் போய் மதுராந்தகரை அழைத்து வரும்படி நந்தினி சொன்னபோது, சரி என்று ஒத்துக்கொண்டு விட்டார். பிரயாணம் கிளம்பிய பிறகு அது சம்பந்தமாகப் பற்பல ஐயங்கள் எழுந்து அவர் உள்ளத்தை வதைத்தன. நந்தினியின் நடத்தையில் அணுவளவும் களங்கம் ஏற்படக் கூடும் என்று அவர் எண்ணவில்லை. ஆயினும் நந்தினியையொத்த பிராயமுடைய மூன்று வாலிபர்களுக்கு மத்தியில் அவளைத் தனியே விட்டு விட்டு வந்திருக்கிறோம் என்ற எண்ணம் அடிக்கடி அவர் மனத்தில் தோன்றி வேதனை தந்தது.

கந்தமாறன், வந்தியத்தேவன், ஆதித்த கரிகாலன் ஆகிய மூவர் மீதும் அவர் குரோதம் கொள்வதற்குக் காரணங்கள் இருந்தன. பொக்கிஷ நிலவறையில் நள்ளிரவில் தாமும் நந்தினியும் போய்க் கொண்டிருந்தபோது கந்தமாறன் எதிர்ப்பட்டு, நந்தினியை, ''தங்கள் மகள்'' என்று குறிப்பிட்டது அவர் நெஞ்சத்தில் பழுக்கக் காய்ச்சிய இரும்பினால் சூடு போட்டது போல் பதிந்திருந்தது. அப்போது உண்டான குரோதத்தில் அவனைக் கொன்று விடும்படியாகவே காவலனுக்கு இரகசியக் கட்டளையிட்டு விட்டார். பின்னால் அதைப் பற்றி வருந்தினார். எப்படியோ கந்தமாறன் பிழைத்துவிட்டான். அவன் எப்படிப் பிழைத்தான், நிலவறைக் காவலன் எப்படி மாண்டான் என்னும் விவ

ரத்தை இன்னமும் அவரால் அறிய முடியவில்லை. அதற்குப் பிறகு கந்த மாறன் தன் அரண்மனையிலேயே சில நாள் இருந்ததும், நந்தினி அவனுக்குச் சிரத்தையுடன் பணிவிடை செய்ததையும் அவரால் மறக்க முடிய வில்லை.

பிறகு, வந்தியத்தேவனும் கடம்பூரில் இருக்கிறான். முதன்முதலில் அந்த அதிகப் பிரசங்கி வாலிபனைப் பார்த்ததுமே அவருக்கு அவனைப் பிடிக்க வில்லை. பிறகு அவன் தஞ்சாவூரில் சக்கரவர்த்தியிடம் தனியாக ஏதோ எச்சரிக்கை செய்ய விரும்பியதையும், தஞ்சைக்கோட்டையிலிருந்து ஒருவரும் அறியாமல் தப்பி ஓடியதையும் அறிந்த போது அவருடைய வெறுப்பு அதிக மாயிற்று. அச்சமயம் சின்னப் பழு வேட்டரையர் அவன் தப்பிச் சென்றதற்கு நந்தினி உதவி செய்திருக்கலாம் என்று குறிப்பாகச் சொன்னதையும் அவர் மறக்கவில்லை. அது ஒருநாளும் உண்மையாக இருக்க முடியாது. ஏனெனில் அவன் குந்தவைப் பிராட்டிக்கும் இளவரசர் அருள்மொழிக்கும் அந்தரங்கத் தூதன் என்று தெரிய வந்திருக்கின்றன. ஆகையால் அவனுக்கும் நந்தினிக்கும் தொடர்பு எதுவும் இருக்க முடியாது. ஆனாலும், அவனையும் நந்தினியையும் சேர்த்து எண்ணிப் பார்த்தபோதெல்லாம் பெரிய பழுவேட்டரையர் இரும்பு இதயத்தில் அனல் வீசிற்று.

பிறகு, ஆதித்த கரிகாலர் இருக்கவே இருக்கிறார். அவர் முன் ஒரு சமயம் ஒரு கோவில் பட்டரின் மகளைக் கலியாணம் செய்து கொள்ள விரும்பினார் என்பதும், அவள்தான் நந்தினி என்பதும் அவர் காதுக்கு எட்டியிருந்தது. அவர்கள் இப்போது சந்தித்திருக்கிறார்கள். அதற்கு நந்தினி மிக்க முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறாள். எதற்காக? ஒன்று நிச்சயம். ஆதித்த கரிகாலன் பெரிய முரடனாயிருக்கலாம். பெரியோர்களிடம் மரியாதை இல்லாதவனாயிருக்கலாம். ஆனால் அவன் சோழ குலத்தில் உதித்தவன். அந்தக் குலத்திலே யாரும் பிறனில் விழையும் துரோகத்தைச் செய்ததில்லை. கரிகாலனும் அப்படிப்பட்டவன் அல்ல. பெண்கள் விஷயமான நடத்தையில் மாசு மறுவற்றவன். ஆனால் நந்தினி? அவளைத் தாம் இவ்வளவு தூரம் நம்பி அவள் விருப்பப்படியெல்லாம் நடந்து வந்திருப்பது சரிதானா? அவளுடைய நடத்தையில் மாசு ஒன்றும் இல்லையென்பது நிச்சயமா? அவளுடைய பூர்வோத்தரமே இன்னும் அவருக்குச் சரிவரத் தெரியாது. அவருடைய சகோதரன் காலாந்தக கண்டன் அவளைப் பற்றிச் சொல்லாமற் சொல்லிப் பலமுறை எச்சரித்திருக்கிறான். தம்பி கூறியதே சரியாகப் போய் விடுமோ? நந்தினி தம்மை வஞ்சித்து விடுவாளா? – ஆகா! கதைகளிலே சொல்லுகிறார்களே! அது போன்ற வஞ்சக நெஞ்சமுள்ள ஸ்திரீகள் உண்மையிலேயே உலகத்தில் உண்டா? அவர்களில் ஒருத்தி நந்தினியா...? இப்படி எண்ணியபோது பெரிய பழுவேட்டரையரின் உள்ளத்தில் குரோதக் கனல் கொழுந்துவிட்டது என்றால், அதே சமயத்தில் நந்தினியின் மீது அவர் கொண்டிருந்த மோகத் தீயும் ஜுவாலை வீசியது. இவற்றினால் உண்டான வேதனையை மறப்பதற்காகப் பழுவேட்டரையர் தம் தலையை ஆட்டிக் கொண்டு, தொண்டையையும் கனைத்துக்கொண்டார். பத்துப் பேருக்கு மத்தியில் இருக்கிறோம் என்ற நினைவுதான் அவர் தமது பெரிய தடக் கைகளினால் நெற்றியில் அடித்துக் கொள்ளாமல் தடை செய்தது. அவரை அறியாமல் பெரிய நெடுமூச்சுகள் வந்துகொண்டிருந்தன. படகின் விளிம்புகளை இறுக்கிப் பிடித்துக்கொண்டு, பற்களைக் கடித்துக்கொண்டு, "எல்லா உண்மைகளையும் இன்னும் இரண்டு தினங்களில் தெரிந்துகொண்டு விடுகிறேன். இதுவரை செய்த தவறு போல் இனிமேல் ஒரு நாளும் செய்வதில்லை!" என்று சங்கல்பம் செய்துகொண்டார்.

(தொடரும்)

ஏ. நடராஜன் (சென்னைத் தொலைக்காட்சி நிலைய முன்னாள் இயக்குநர்)

கோபமே வராத சுபாவம் என்னுடையது. நான் அதிர்ந்து பேசி யாரும் பார்த்ததில்லை. 1970களில் நான் பெங்களூரில் பணியாற்றிக் கொண்டிருந்த சமயம், ஒருமுறை ஆஸ்திரேலியா போயிருந்த போது ரொம்பவும் ஆசைப்பட்டு ஆறு கப்-சாஸர் செட்டுகள் வாங்கி வந்தேன். அற்புத வேலைப்பாடுகள் அமைந்த கோப்பைகள் அவை. பெங்களூரில் என் வீட்டுக்கு ஒருநாள் பத்திரிகையாளர் சாவி வந்திருந்தார். அவருக்குக் காப்பி கொடுப்பதற்காக அந்தக் கோப்பைகளை என் வீட்டு வேலையான் எடுத்த போது ஒரு கோப்பையை உடைத்து விட்டார். என்னையுமறியாமல் அன்று கோபம் வந்து விட்டது.

திட்டி விட்டேன். என் வீட்டில் ஐந்து வருடங்களாக விசுவாசமாக வேலை பார்த்தவர் அவர். பிறகு என் மனைவியிடம், 'என்னம்மா, ஐயா இப்படிக் கோவிச்சிக்கிட்டாரு?' என்று அவர் சொன்னது தெரியவந்த போது, ' அவர் மனத்தைப் புண்படுத்தி விட்டோமே' என்று வருத்தப்பட்டவன் நான். அப்படி கோபமே வராத எனக்குச் சமீபத்தில் ஏற்பட்ட ஒரு அனுபவம் உள்ளுக்குள் பொங்க வைத்தது.

இந்திரா நகரிலிருந்து அடையாறுக்கு வீடு மாறினேன். கேஸ் இணைப்பை மாற்றி வருமாறு டிரைவரிடம் சொல்லி அனுப்பினேன். 'யார் பேரில் இருக்கிறதோ அவர் நேரில் வர வேண்டும்' என்றார்களாம்.

நேரில் போனேன். "ரெண்டு மணிக்கு வாங்க ஸார்" என்றார்கள். போனேன்.

"ரெகுலேட்டர் இல்ல. வேற கொண்டு வரணும்" என்றார்கள். கொண்டு போனேன். "அப்படி உட்காருங்க" என்று பெஞ்சைக் காட்டினார்கள். உட்கார்ந்தேன். எனக்கு முன்னால் பலர் காத்திருந்தார்கள்.

கவுண்ட்டருக்குள் ஊழியர்கள் ஒருவருக்கொருவர் அரட்டை அடித்துக் கொண்டிருந்தார்களே தவிர, பொதுமக்களை யாரும் கவனிப்பதாகக் காணோம். உள்ளே இருந்து வந்த ஒருவர் என்னை அடையாளம் கண்டுகொண்டு, உள்ளே போய் என்னைப் பற்றித் தெரிவிக்க, அந்தக் கவுண்ட்டர் ஊழியர் ஓடி வந்து, "ஸார்... உள்ளே வாங்க... ஸாரி" என்றார். நான் மறுத்துவிட்டு 'க்யூபடி போகட்டும். நான் இங்கேயே இருக்கிறேன்" என்றேன்.

பொதுமக்களுக்கு மிக முக்கியமான சமையல் எரிவாயு இணைப்பு போன்றவற்றைக் கவனிப்பவர்கள் வேலை நேரத்தில் அரட்டை அடித்துக் கொண்டிருப்பதையும், வீணாக வாடிக்கையாளர்களை அலைகழிப்பதையும் பார்க்கும் போது



எரிச்சலைத் தருகிறது!

கோபம் பொங்குவதைத் தவிர்க்க முடியவில்லை. ஏதோ தங்கள் தலையில் கிரீடம் சூட்டப்பட்டிருப்பதைப் போலவும், வெளியே காத்திருக்கும் பொதுமக்கள் அவர்களின் கருணைக்காகக் காத்திருப்பதைப் போலவும் நினைத்துச் செயல்படுவது எரிச்சலைத் தருகிறது.

— ராணிமைந்தன்

படம் : வெங்கடேஷ்



கலையுலகில் புதுமை விரும்பியாகவும், ஒரு நவீன நடனக் கலைஞராகவும், அறியப்படும் அனிதா ரத்னம் திடீர் திரைப் பிரவேசம் செய்திருக்கிறார். நடனம் அலுப்புத் தட்டிவிட்டதோ என்ற நம் சந்தேகத்துடன் அவரைச் சந்தித்தோம்.

தொலைக்காட்சி இயக்கம், நிகழ்ச்சி தயாரிப்பு இரண்டிலும் முதுகலை பட்டம் பெற்று அமெரிக்காவில் ஒரு சேனலையும் நடத்திய நீங்கள், இந்தியா திரும்பிய பிறகு மீடியாவைவிட்டு ஒதுங்கி இருந்தது ஏன்?

பத்து வருடம் எனது சொந்தச் சேனலை நடத்திவிட்டு இந்தியா வந்தப்போ, இங்கே 'வீடியோ மேகசின்' என்ற அளவில்தான் இருந்தது. இருந்தாலும் வடக்கே இருக்கிற சேனல்களுக்குத் தொடர்கள், டாக்ஷோ தயாரித்துக் கொடுக்கலாம் என்று ஆர்வமாக இறங்கியபோது அனுபவமுள்ள டெக்னீஷியன்கள் எனக்குக் கிடைக்கலே. அனுபவமில்லாத, ஆனா ஆர்வமாக முன்வந்த உதவியாளர்களையும், நண்பர்களையும் வெச்சுகிட்டு, நான் என்ன செய்ய? இருந்தாலும் 'ப்ளஸ் சேனலுக்கான' தென்னக எடிட்டோரியல் பிரிவை நான்தான் அமைச்சுக் கொடுத்தேன். அவங்களும் வீடியோ மேகசின்தான் தயாரிக்க வெளியிட்டாங்க. இப்போ ஒரு பிரபல தனியார் டீவிக்கு விரைவில் ஒரு டாக்ஷோ செய்து கொடுக்கப் போறேன். அதுக்கான பேச்சுவார்த்தை நடந்துட்டு இருக்கு.

உங்களுக்கு இவ்வளவு தாமதமாக சினிமா ஆசை வந்ததன் ரகசியம்?

உண்மையா சொல்லணும்னா சின்ன வயசுலேயே எனக்கு சினிமா அட்ராக்ஷன் கிடையாது. நான் பேவரைட் ஹீரோ, ஹீரோயின்னு யாரையும் நினைச்சதில்லே. இத்தனைக்கும் நடிகை ரேகாவும் நானும் ஒரே கிளாஸ். சிவாஜி சார் பொண்ணு சாந்தி என்னோட கிளாஸ்மேட். ஸ்கூல்லே, ஜெயலலிதா என்னோட சீனியர். அப்பாவுக்கு பெரிய பெரிய நடிகர்கள் எல்லாம் நண்பர்கள். அடிக்கடி வீட்டுக்கு வருவாங்க. ஆனா நடிகர்கள் மாதிரி வர மாட்டாங்க. சின்ன வயசுலேயே நான் நடிக்கணும்னு ராஜ்கபூர், தேவ் ஆனந்த் மகேஷ்பட் இவங்கல்லாம் கேட்டாங்க. ஆனா எனக்குச் சினிமாவில் சுத்தமா ஆர்வம் இல்லே. அதுக்கு முக்கியமான காரணம் பரதம். அது என்னை முழுமையா ஆட்கொண்டுவிட்டதுன்னு சொல்வேன்.

எப்படி 'கண்டுகொண்டேன் கண்டு கொண்டேன்' படத்தை ஒப்புக் கொண்டீர்கள்? அதுவும் அந்தப் படத்தின் கதைப் போக்கில் திடீர் திருப்பத்தை

அனிதா ரத்னம் பேட்டி

ஏற்படுத்தும் ஒரு 'ஆன்டி' மருமகள் கதா பாத்திரத்தில்?

ராஜீவ் மேனன் நல்ல நண்பர். சின்ன வயசுலேர்ந்து அவர் திறமை மீது எனக்கு அபார நம்பிக்கை உண்டு. ஆறு வருஷத்திற்கு முன்பு விளம்பரப் படத்திலே நீங்க நடிக்கணும்னு சொன்னார். க்ரீன் லேபிள் காப்பி விளம்பரம் அது. அந்த விளம்பரம் அத்தனை பர்பெக்டாக வந்தது. பர்பெக்ஷனிஸ்டுகளோடு பணியாற்றுவது எனக்குப் பிடிக்கும். கடந்த ஜனவரியில் ராஜீவ் மேனன் 'கண்டு கொண்டேன்' படம் பத்திச் சொன்னார். முடியாதுன்னேன்.



• க.கொ. க.கொ. படத்தில்



"இதுதான் தமிழ் சினிமாவின் தலையெழுத்து!"

ராஜீவ் விடலே. தமிழ் சினிமால வராத ஒரு முகம், இந்தக் கேரக்டருக்கு இருந்தா நல்லா இருக்கும்னார். நிறைய நாள் நடிக்க முடியாதுன்னு சொன்னேன். ஐந்தே நாள் போதும்னார். ஷூட்டிங் காரைக்குடியிலே நடத்தறோம்னார். அம்மாகிட்டேகூட மறைச்சுட்டேன்.

அப்புறம் ராஜீவ் எனக்குக் கொடுத்த சுதந்தரம். நீங்க எப்போதும் போடுற காஸ்ட்யூம் போட்டுக்கோங்க... மேக்அப் உங்க விருப்பம்னு சொல்லிட்டார். ஆபாசம் இல்லாத ஒரு நல்ல கதை. முக்கியமா ராஜீவ் மேனனுக்காக ஒத்துக் கிட்டேன். ஒரிஜினல் கதையில நான் அஜித்துக்கு அக்கா. என்னோட கேரக்டர் டெவலப் மெண்ட் ஓஹ்ரோக இருந்தது. ஆனா திடீர்னு அஜித், ஐஸ்வர்யா ராய் மார்கெட் ஏறினதும், புதுசா பாட்டும், சீன்களும் சேர்க்க வேண்டியதாப் போச்சு. இதுதான் தமிழ் சினிமாவின் தலையெழுத்து!

அப்போ உங்களை ஒரு வில்லியாக சித்திரிச்சுட்டாங்களா?

(சிரிக்கிறார்...) அப்படியில்லே... அந்த கேரக்டரை நானேதான் எடுத்துக்கிட்டேன்...

கதைப்படி மாமியார் குடும்பத்தை வீட்டை விட்டு விரட்டுறேன். இதன் மூலமா ஒரு பெண்ணேப் பெண்ணுக்கு எப்படி எதிரியாகிறான்ங்கிறதை என் கேரக்டர் மூலம் சொல்ல முடியுதுங்கிற மனநிறைவு. ஆனாலும் என்னோட எல்லா சீன்களும் வந்திருந்தா கேரக்டர் இன்னும் நல்லா இருந்திருக்கும். இருந்தாலும் எடிட்டிங் பற்றி நானும் அறிந்தவள் என்பதால் அவர்களைக் கோபித்துக் கொள்ள முடியாது. கூடாது.

தொடர்ந்து நல்ல பாத்திரங்கள் கிடைத்தால் நடிப்பீர்களா?

நிச்சயமாக நல்ல கேரக்டர்ஸ் கிடைக்காது. ஏன்னா தமிழ் சினிமா இன்னும் அந்த மோல்டட் ஸ்கிரிப்ட்லேர்ந்து வெளியே வரலே. இங்கே அம்மான்னா அழுதுகிட்டே இருக்கணும். கதாநாயகி ஒண்ணு ஏமாறணும், இல்லை ஏமாத்தணும். ஹீரோக்கள் இன்னும் வீரபிரதாபனாத்தான் இருக்காங்க. ஒரு சிலர் வந்து இதை மாத்திட முடியாது. காரணம் தயாரிப்பாளர்கள். மக்கள் இதைத்தான் கேக்கறாங்கன்னு சொல்லிட்டு இவங்கள் ஒன்றை கொடுத்துகிட்டு இருப்பாங்க. இதை மாத்தறது கஷ்டம். அதுக்குத் தயாரிப்பாளர்களும் க்ரியேட்டர்களா இருக்கணும்.

நடனமும், அதர் பெஸ்டிவலும் எந்த நிலையில் இருக்கு?

அதுதான் என்னோட இடம். அரங்கம் தான் என்னோட வீடு. இப்போ மூணாவது வருஷமா, வர்ற டிசம்பர்ல அதர் பெஸ்டிவல் நடத்தப் போறேன். இதுலே, பாப்போ, டிஸ்கோவோ எதுவும் கிடையாது. முழுக்க முழுக்க நம்ம கல்ச்சர். இதை இந்த முறை டி.வி. மீடியாவுக்கும் எடுத்துட்டுப் போவேன். குறிப்பா அதர் பெஸ்டிவல் பாமரனுக்கும் புரியணும்.

- **விஷ்வல்தாசன்**

படம் : **வெங்கடேஷ்**



"எங்கலே போயிட்டு வாரீஹ?"

எண்ணெய் சட்டியிலிருந்து பார்வையை நிமிர்த்தாமலேயே பேச்சியம்மா கேட்ட கேள்விக்கு,

"ஆளுக்கு ரெண்டு வடை குடு ஆத்தா" என்றுதான் பதில் வந்தது வெள்ளையனிடமிருந்து.

"கேட்டம்ல கேள்வி?"

வாழை இலைச் சிம்பியில் இரண்டு வடைகளைச் சூடாக எடுத்து வைத்தாள். வெங்காய வாசனை நாக்கில் ஜலம் ஊறச் செய்தது.

வெள்ளையன் நமுட்டுச் சிரிப்புடன் வடையை விள்ளுவதில் முனைந்தான். குத்துக் காலிட்டுப் பக்கத்தில் அமர்ந்த சகா பனையன் விலாவில் முழங்கையால் இடித்தான், 'சொல்லாதே' என்ற பாவனையில்.

"சொல்ல மாட்டியளோ? வாயிலென்ன கொளுக்கட்டையா?"

"வடை ஆத்தா," சாது போல் பதில் வந்தது.

"அட போக்கத்தப் பயலுவளா! ஒங்களைப் போயிக் கேட்டம் பாரு! சொல்லாட்

தேர்முட்டி

ஸுஜாதா விஜயராகவன்

டிப் போனாத் தெரியாமயா போகும்?"

வேலையில் முனைந்து விட்டாள் பேச்சி. மாலை நேரம் தேர்முட்டியில் கூலியாள் கூட்டம் அம்மும். பேச்சி பலகாரக் கடை வியாபாரம் மும்முரம். சுருக்கம் விழுந்தாலும் உரம் வாய்ந்த கருங்காலி உடற்கட்டு. ரவிக்கை அணியாத முதுகில் வியர்வை வழிந்தோட, பச்சை குத்திய கை, வடையைத் தட்டிப் போட, மறு கை கரண்டியால் வடையை வாரி எடுக்க, நடுவே வந்த வாடிக்கையைக் கவனித்துக் காசு வாங்கி, மீதிச் சில்லறை தந்து... இரண்டு கைகள் எட்டுக் கைகளாகப் பரிணமிக்கும்.

"சித்திரை பொறந்துல்ல திருநா? இப்பம் தேர்முட்டியிலே என்ன வேலை பாக்காஹ?" பேச்சை மாற்றும் பொருட்டு வெள்ளையன் கேட்டு வைத்தான் - தேர் முட்டித் தகடுகளில் ஆணி அடித்துச் செப்பனிட்டுக் கொண்டிருந்த இருவரைப் பார்த்து.

"தேரோட்டம் வருசம் ஒரு நாத்தான். ஆனா மீனாச்சி தேருல்ல! காபந்து பண்ணி வக்கரீண்டா, கண்டவனும் உள்ளாற பூந்து அசிங்கம் பண்றான்ல" காரம் குறையவில்லை பேச்சிக்கு. வடையைப் போலவே.

சற்று நேரம் வியாபாரம் மௌனமாகவே தொடர்ந்தது. "அதுக்கு ரெண்டு வடை குடு ஆத்தா. இந்தா காசு." பனையன் நீட்ட வந்த காசை அலட்சியமாகப் பார்த்த பார்வையில், நீண்ட கை தயங்கி, மடங்கிப் பின் வாங்கியது.

'அது' என்ற அந்தப் பெண்ணைத் திரும்பிப் பார்த்தான். சாயம் போய்க் கணுக்கால் வரை ஏறிய புடைவை, சிவந்த கண்கள், முப்பதிலேயே ஐம்பதாகத் தளர்ந்த உடல், முகம் முழுக்க அர்த்தமில்லாத இளிப்பு.

"இந் நேரத்துக்கு என்ன குளி?"

அந்தப் பெண்ணின் தலையிலிருந்து சொட்டிய நீர் பேச்சியின் சந்தேகக் கண்களுக்குத் தப்பவில்லை.

"கொளந்தை போயிருச்சு ஆத்தா. இப்பதாம் பொதச்சிட்டு வாரோம்." இனிமேலும் அடக்க முடியாமல் பனையன் சொல்லியே விட்டான், தன் தலையிலிருந்து சொட்டும் நீரை வழித்து உதறியவாறு.

"போச்சா போக்கடிச்சாளா?"

சாட்டையடி பொத்தாம் பொதுவில் வந்து விழுந்தது. "என்ன ஆத்தா நீ! பாவம் அந்தப் பொண்ணு பறி குடுத்திட்டு நிக்கிது. இரக்கமில்லாமப் பேசுறியே."

துணிந்து கேட்ட பனையன் நன்றாக வாங்கிக் கட்டிக்கொண்டான். "பொண்ணுன்னு சொன்னாப் பேய் கூட எரங்குமே. இந்தப் பேச்சிக்காடா எரக்கமில்லே? அது பொண்ணாடா அது? எத்தனை புள்ளை உண்டாயி எத்தனை புள்ளையக் கரச்சிருக்கு? எசகேடா உண்டாயி, ஆறு மாசம் களிச்சுத் தெரிஞ்சு போயி, அப்பறமேல கரைக்கப் போயிருக்கு. டாக்டரம்மாவே திட்டி அனுப்பிடுச்சு... அந்த மவன் மேக்கொண்டு இதுக்கு என்னென்னவோ மருந்து மாயம் செஞ்சும் வயித்துப் புள்ளை அசஞ்சு குடுக்கலே. வந்து பொறந்துருச்சு. பொறந்தது பொம்புளப் புள்ளையா இருந்திருந்தா சீராட்டி வளத்திருப்பாகளோ? நானக்கி இதே தொளிலுக்கு வருமில்ல! ஆம்பிளப் புள்ளையால போச்சு, பதினஞ்சு நான் அத உசுரோட விட்டதே பெரிசு..."

சொன்னாளே தவிர நாலு வடைகளை இலையில் வைத்துப் பனையன் முன் நகர்த்தினாள். "வயித்தக் கழுவத்தானே எல்லாரும் இந்தப் பாடுபடுறோம். குடு குடு. திங்கெட்டும் அது."

பேச்சியின் வெறுப்பு தூவிய இரக்கம், கொதிக்கும் எண்ணெயாகவே தெறித்தது.

“அண்ணே ஒரு மாசமா ஊர்லயே இல்லே. சொந்த வேலையாப் பட்டணம் போய்ட்டாரு. நேத்து வந்துதான் புள்ளை பொறந்த விசயமே தெரியும். வந்து பாக்க நேரமில்ல. இன்னைக்கு வாரேன்னு சேதி சொல்லி விட்டாரு. ராத்திரியே புள்ளை பொசுக்குனு போயிருச்சே.” வெள்ளையன் சமாதானம் எடுபடவில்லை.

“ஆமாடா, சேதி தெரிஞ்சதும் வேலைய முடிச்சிட்டான். அம்புட்டுத்தானே.”

திகைத்துப் போனார்கள் இரண்டு ஆண் பிள்ளைகளும். “அண்ணே காதில பட்டா வருத்தப்பட்டுப் போவாரு ஆத்தா,” என்ற சுரத்தில்லாத எச்சரிக்கை பேச்சியின் பேச்சை நிறுத்தவில்லை.

“தெரியும்லே... வத்தி வெக்க நீங்கதான் இருக்கிகளே. கௌவி தலையைச் சிலிரச் சொல்லுவானோ அவன்? அதயுஞ் செய்வீங்கடா நீங்க, ஆம்பளச் சிங்கங்களா!”

“சும்மா சும்மா பேசாத ஆத்தா. நாங்களே நொந்து கெடக்கோம். புள்ளையப் பொதயிங்கடான்னா எங்கிட்டுக் கொண்டு பொதக்க? தத்தனேரிக்குப் போனா வெட்டியான், கொளந்தக்கி அப்பன் யாரு, ஆத்தா யாரு, சாவு சர்ட்டிபேட்டு எங்கேன்னு ஆளைப் பெரட்டியெடுக்கிறான். ஏதோ அஞ்சு பத்தைக் குடுத்து வேலைய முடிக்கலாம்னா எரநூறு கொண்டா, முந்நூறு கொண்டாங்கிறான். யார் கையில இருக்கு அம்புட்டுப் பணம்? அங்ஙண ஆருங் காணாத கம்மாக் கரையில நாங்களே குனி வெட்டி அடக்கம் பண்ணிட்டுக் கம்மாயில முங்கிட்டு வாரோம். இங்ஙண வந்தா ஆளைப் போட்டு நீ பெரட்டியெடுக்குறே. வெள்ளையன் குரலில் சூடு ஏறியது.

பேச்சி மேலே ஏதும் பேசவில்லை. வடை மாவு தீர்ந்து கொண்டிருந்தது. அந்தப் பெண் ஓரமாக அமர்ந்து வடைகளை விண்டு வாயில் போட்டுக் கொண்டிருந்தது. முகத்தில் இன்னமும் அதே அசட்டுச் சிரிப்பு.

“தவசு கெடக்காக ஓரோத்தரு, ஒரு பிள்ள பெறாக்காதாண்டு. மனசு கேக்கலே. ஆசுபத்திரி விட்டு இது போன வாரம் வந்திச்சு. இதுங்கிட்டப் பாலுமில்ல ஒரு மண்ணாங்கட்டியுமில்ல. அதான் ஓட்டல்ல பாலு வாங்கிக் குடுத்தன்ல புள்ளக்கி. இன்னிக்கு வெள்ளேன வந்து ஓட்டல் வாசல் தெளிக்கயில இங்ஙண தேர்முட்டி பக்கத்துல கூட்டங்கூடிப் போச்சு புள்ள வெறச்சுக் கெடக்குன்னு பாக்க. இந்தக் கழுதை எங்கிட்டுப் போச்சோ எவன் கூட போச்சோ”

தணலில் தண்ணீரைக் கொட்டி அணைத்தாள். வாணலி எண்ணெயைத் தூக்கில் ஊற்றினாள். வாணலியையும், அடுப்பையும் கை சுடாமல் கூடையில் வைத்து எதிரே இருந்த ஹோட்டலில் வைக்கப் புறப்பட்டாள்.

“ஆத்தா நில்லு, நான் எடுத்துத் தாரேன்” முன் வந்த பனையனை முறைத்தாள்.

“இன்னையப் போதுக்கு வந்திருவீஹ. நாளைக்கி இதச் சொமக்க எவனாவது வருவானாண்டு காத்துக் கெடக்கத் தோணும். என் சொமைய நானே சொமக்கேன்.”

எழுந்த பனையன் சூள் கொட்டியவாறு அமர்ந்தான். “அதுங்கிட்ட வம்பே வேணாம். ஆத்தா வாயும் வாய். கையும் கை. இந்த வயசில எப்பிடித் தூக்கிட்டுப் போகுது பாரு.”

வெள்ளையன் சுட்டிக்காட்டினான்.

“என்ன வயசிருக்கும் ஆத்தாவுக்கு?”

“அறுவதோ எழுவதோ ஆருக்குத் தெரியும்? பேரப் புள்ள படிச்சுப்புட்டு பாங்கில வேல பாக்குதே.”

“பின்ன ஏன் ஆத்த யாவாரத்துக்கு வருது?” பனையனுக்குப் புரியவில்லை.

“மருமக வாயால பேச்சுக் கேட்டுரக் கூடாதுல்ல” - வெள்ளையன் விளக்கினான். “நல்ல நெஞ்செரப்பு ஆத்தாவுக்கு. புருசன் குடிச்சிட்டுச் செத்தப்ப கையில ரெண்டு வயசுப் புள்ள. ஒத்தை ஆளா வளத்து ஆளாக்கியிருக்கே. அந்த ஓட்டல்லே பெருக்கி, மொளுகி, பாத்திரம் தேச்சு... எத்தனை வருசம்! இப்பத்தான அஞ்சாறு வருசமா ஓடியாடிச் செய்ய முடியலேண்டு பலகாரம் சுட வந்திருச்சு.”


பேச்சு மும்முரத்தில் பேச்சி மீண்டும் வந்ததைக்கூட இருவரும் உணரவில்லை.

“இளிச்சுக்கிட்டு நிக்கறதப் பாரு,” நொடித்தாள் அந்தப் பெண்ணைப் பார்த்து.

“படத்தை முடிச்சுக் குடுக்காம இந்த நடிகை தகராறு பண்ணுவாங்களாமே!”

“நானா ஏமாறுவேன்? முதல் நாளே கடைசி காட்சியை எடுத்து வச்சிட மாட்டேனா?”

- பர்வதவர்த்தினி



எங்களிடம் ராசிக்கல் மோதிரம் வாங்கி பயன்பெறும்
அனைவருக்கும் எங்களது வாழ்த்துக்கள்

ராசிக்கல் மோதிரம் வாங்க ராசியான கடை P.R. ஜுவல்லரி

P.R. JEWELLERY

GOLD, SILVER, DIAMOND & BIRTH STONES
102, USMAN ROAD, T. NAGAR, CHENNAI - 600 017.
PH: 434 4442, 432 7764 TUESDAY HOLIDAY

P.R. ஜுவல்லரியில் ராசிக்கல் மோதிரம் வாங்கி அணிந்து பயன்பெறுங்கள். ஒவ்வொரு ராசிக்கும் மோதிரம் ரூ. 400/-

(10.00 AM to 1.30 — 3.30 PM to 8.00 PM)

எங்கு ஜோதிடம் பார்த்தாலும் எங்களிடம் வந்து ரூ. 400/-க்கு ராசிக்கல் மோதிரம் வாங்கி பயன்பெறுங்கள். ஒரிஜினல் கல் என முழு உத்திரவாதம் தருகிறோம். புஷ்பராகம், வைரம், நவரத்தினம் ஆகிய மோதிரங்கள் வெள்ளியிலும், தங்கத்திலும் அணியலாம். மீதி அனைத்து ராசிக்கல் மோதிரங்கள் வெள்ளியில் அணிந்தால் அதிக பலன் தரும். எங்களிடம் அனைத்து ராசிக்கல் மோதிரங்கள் தங்கத்திலும், வெள்ளியிலும் அளவு 12 முதல் 28 வரை உடனடியாகக் கிடைக்கும். அளவு இல்லையென்றால் 2 நாட்களில் செய்து தருகிறோம்.

மேஷராசி, விருச்சிக ராசி 2 காரட் பவழம் வைத்து வெள்ளி மோதிரம் விலை ரூ. 400/- ரிஷபராசி, துலாம் ராசி 5 cent வைரம் வைத்து வெள்ளி மோதிரம் 2250/- மிதுன ராசி, கன்னி ராசி 20 cent மரதக பச்சை 400/- கடக ராசி, முத்து 2 CARAT வைத்து 400/- சிம்ம ராசி 20 cent மாணிக்கம் வைத்து 400/- தனுசு ராசி, மீன ராசி, புஷ்பராகம் 1 CARAT வைத்து 400/- 25 cent கனக புஷ்பராகம் வைத்து 500/- மகர ராசி, கும்ப ராசி 20 cent நீலம் வைத்து 400/- கோமேதகம் 50 cent வைத்து 400/- வைடூரியம் 20 cent வைத்து 400/- அனைவரும் அணியக்கூடியது கார்னெட் 3 CARAT வைத்து வெள்ளி மோதிரம் விலை 400/- இதை அணிவதால் கல்வி, தொழில், வேலை வாய்ப்பு, செல்வ வளம், வியாபாரம் பெருகும். நவரத்தின மோதிரம் அணிந்தால் மிகவும் நல்லது. 9 கிரகங்களின் பலன் கிடைக்கும். 5 cent வைரம் வைத்து 1 பவுன் (8 கிராம்) தங்கத்தில் 7250/- தங்கத்திலும் அனைத்து ராசிக்கல் மோதிரங்கள் பவழம், வைரம், முத்து, மாணிக்கம், மரகத பச்சை, புஷ்பராகம், நீலம் வைத்து 2 கிராம் முதல் 8 கிராம் வரை 1200 முதல் 5000–ம் வரை உடனடியாக ரெடியாகக் கிடைக்கும். தபால் மூலம் பெற ரூ. 400/- மோதிரத்திற்கும் ரூ. 50/- இன்சூர் பதிவுக் கட்டணம் சேர்த்து ரூ. 450/- அனுப்பவும். மேலும் விவரம் தேவையெனில் தபால் எழுதினால் முழு விவர பாம்லட் இலவசமாக அனுப்புகிறோம்.

குறிப்பு : திருஷ்டியைப் போக்கும் வெள்ளெருக்கு வினாயகர் 50/- முதல் 150/- வரை கிடைக்கும். தபாலில் பெற ரூ. 30/- பதிவு தபால் செலவு சேர்த்து அனுப்ப வேண்டும்.

பல வாடிக்கையாளர்கள் பணம் அனுப்பிவிட்டு முகவரி எழுதுவது இல்லை. முகவரி இல்லாமல் எங்களால் தொடர்பு கொள்ள முடியாது. முகவரி தெளிவாக எழுதவும்.

ADVT.

மெய்யாகவே அந்தப் பெண் ஓர் அசட்டு இளிப்போடுதான் நின்றது.

"ஆத்தா, அதுக்கு அனுகக் கூடத் தெரியலே. புத்தியிருந்தா இந்தப் பொளைப்புப் பொளைக்குமா? விட்டுத் தள்ளு." வெள்ளையன் சமாதானம் சொன்னான்.

"விடாமப் புடிச்சா வச்சுக்கிடப் போறோம். பொம்பளப் புள்ள இப்படிக் கண்ணு முன்னால சீபடுதே... என்ன செய்வோம்னு வருது..." பேச்சி அலுத்துக் கொண்டாள்.

"செய்யிறது என்ன? நீதான் ஒன் வீட்டுல கொண்டு வெச்சுக்கயேன்" கிழவியிடம் விளையாடிப் பார்க்கலாம் என்ற விபரீத ஆசை தோன்றி விட்டது வெள்ளையனுக்கு.

"செய்யலாம், செய்யலாம். மருமக வெளக்கு மாத்தால ரெண்டு போடு போட்டு என்னையுஞ் சேத்து வெளியில தள்ளிருவா."

"ஆத்தா இப்பவும் ஓட்டல்லே ஒஞ்சாமானெல்லாம் வச்சுக்க எடம் தாராரே ஒங்க மொதலாளி, அவருகிட்டச் சொல்லி இதுக்கு அங்கே ஒரு வேலை வாங்கித் தாயேன்" பளையனும் வம்புக்கிழுத்தான்.

"ஏலே இப்பிடிப்பட்ட பொம்பளய உன்ன விடுவாஹளா?"

திடீரென்று அந்தப் பெண் 'ஓ'வென்று கதறி அழுவதைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினர் மூவரும்.

"அண்ணேன் வாராரு. "கெககெகப்பாகச் சொல்லி சடேரென்று பின் வாங்கினான் வெள்ளையன்.

முறுக்கு மீசை, சிவந்த விழி, புலி நகடாலர் கோத்த சங்கிலி, யானை முடி கங்கணம் என்ற கோலத்தில் வந்த 'அண்ணேன்' அந்தப் பெண்ணுக்குச் சற்றுத் தொலைவிலேயே நின்றார்.

"த்த... என்ன அனுகை இது? அனுகைய நிப்பாட்டு... போனாப் போவுது. வா இங்ஙன... சொல்றேன்" என்று தேர்முட்டிக்குப் பின்புறம் அழைத்துச் சென்றார்.

அழுது கொண்டே அவர் பின்னே நாய்க்குட்டி போலத் தொடர்ந்தது அந்தப் பெண் பிள்ளை.

சற்று நேரம் மூவரும் பேச்சற்று நின்றனர். மிகுதிப் பாத்திரங்களைச் சின்னதொரு பொட்டுக் கூடையில் அடுக்கின பேச்சி தலையில் சும்மாடு கட்டிக் கூடையை ஏற்றிக்கொண்டாள்.

"பொம்பளை ஒருத்தி மானமாப் பொளைக்க மீனாச்சி பட்டணத்தில வளியில்லாமப் போச்சே!"

பதிலை எதிர்பார்க்காமல் நிமிர்ந்த நடையும், நேர்ப் பார்வையுமாகத் தெருவில் இறங்கி நடக்கலானாள் பேச்சி. ○



ஷூட்டிங் ஸ்பாட்

பிரெஞ்சு நாடகத்தில் ரிச்சா!

டைனிங்டேபிளில் பளபள பாத்திரங்களில் ஏகப்பட்ட ஐட்டங்கள். வணக்கம் சொல்லியபடி டெல்லி கணேஷ் வர, நிழல்கள் ரவி, நாற்காலியில் உட்கார்ந்தபடியே வரவேற்று, அமரச் செய்தார். சமையல்காரர் பரிமாற ஆரம்பித்தார். இட்லி எடுத்து வைத்து, பொங்கலையும் போட்டார். கட்! மடமடவென்று அத்தனை ரக சட்னி, சாம்பார் இலையில் வந்து உட்கார்ந்துகொள்ள, மறுபடி ஸ்டார்ட் சொன்னார் டைரக்டர் ராஜா.

ஷாட் முடிந்ததும், "என்ன சார் டீ.வி. சீரியல் பார்முலா தெரியாதவராக இருக்கிறீர்களே நீங்கள்? இட்லி தொடங்கி, ஒவ்வொரு ஐட்டமாக குளோஸ்அப்பில் காட்டி, மெதுவாகப் பரிமாறுவதுபோல் நேரத்தை இழுக்காமல் சட்டென்று கட் பண்ணி எடுக்கிறீர்களே?'' என்று தமாஷாய்க் கேட்க, கேள்வியை ரசித்து, இலேசான சிரிப்பையே பதிலாய்த் தந்தார் டைரக்டர்.


• ரிச்சா

இந்தக் காட்சி சன் டீ.வி.யில் ஆரம்பமாக விருக்கும் ஜாவர் சீதாராமனின் 'பணம் பெண் பாசம்' தொடருக்காக, ஏவி.எம். கார்டனில் படமாக்கப்பட்டது. நிழல்கள் ரவிக்குப் பிரதான கேரக்டர். பணம் பணம் என்று எந்நேரமும் சம்பாதிப்பதிலேயே குறியாக இருக்கும் ரோல். அவர் மனநிலை பாதிக்கப்பட்ட மனைவியாக ஜானவி நடிக்கிறார். இவர்களின் பெண்ணாக, நடிகை ரிச்சா!

டெல்லி கணேஷிடம், 'டீ.வி. சீரியல்களில் அப்பா ரோலா? கூப்பிடு டெல்லி கணேஷை என்கிறார்கள் போல இருக்கிறதே?' என்று கேட்டால் 'அதெல்லாம் இல்லை! அப்பா ரோலுக்கு ஏகப்பட்ட ஆட்கள் இருக்கிறார்கள். யார் குறைந்த சம்பளத்துக்கு ஒப்புக் கொள்கிறார்களோ அவர்களுக்குத்தான் வாய்ப்பு!' என்கிறார்.

இன்று டெல்லி கணேஷ் வெறும் நடிகர் இல்லை. செல்லம்மா என்ற டீ.வி.


• சண்முகம்


• ஜானவி

சீரியலை இயக்கிய அனுபவசாலி. விரைவில் ஏசியாநெட்டும், ஜீ.டீ.வியும் இணைந்து துவக்கவிருக்கும் தமிழ்ச் சேனலுக்காக ஒரு

சீரியல் இயக்கப் போகிறாராம்.

“டீ.வி. சீரியல்களில் உங்களுக்குப் பிரமாதமான கேரக்டர்கள் கிடைக்கிறது. சினிமாவில் உப்பு சப்பில்லாத கேரக்டர்கள்தான் தருகிறார்கள். ஏன் இந்த நிலை?” என்ற கேள்விக்கு, நிழல்கள் ரவியின் பதில்: “சினிமாவில் ஹீரோதான் பிரதானம். அப்புறம் ஹீரோயின். பாட்டு, பைட் என்று இன்ன பிறவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்துவிட்டு, கடைசியில்தான் கேரக்டர் ஆர்டிஸ்ட்கள் பற்றிய நினைப்பே வருகிறது. ஆனால் சீரியல்களில் கதைதான் ஹீரோ. கேரக்டர்களுக்கு ஏற்ப நடிக, நடிகையர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.”

நிழல்கள் ரவியின் மகனாக நடிக்கும் ரிச்சா 'உயிரோடு உயிராக' படத்தில் அஜித்துக்கு ஜோடியாக நடித்திருக்கிறார். தவிர, ஓவியம், சுழல் போன்ற சீரியல்களிலும் நடித்திருக்கிறார். அண்மையில் பிரான்ஸ் சென்று வந்திருக்கிறாராம்.

கிரிஷ் கர்நாட் எழுதிய ஒரு நாடகம் பிரெஞ்ச் மொழியில் மேடையேறியது. அதில் நடிக்கத்தான் இந்த பிரான்ஸ் பயணம். “அது ஒரு வித்தியாசமான அனுபவம்” என்கிறார்.

ப.பெ.பா தொடரில் பீலிசிவமும் நடிக்கிறார். “சாம்பசிவம், சதாசிவம், பரமசிவம் எல்லாம் தெரியும். அது என்ன பீலிசிவம்?”

“என் பெயர் சிவனப்பன். சொந்த ஊர் பீர்கடவு. அப்பா பெயர், லிங்கப்பா. எனவே 'பீலி' என் இனிஷியல். பெயரை சிவம் என சுருக்கிக் கொண்டேன்'' என்கிறார். இவர் முப்பது வருடமாக நடித்துக் கொண்டிருக்கிறார்.



• ஷூட்டிங்கில் டெல்லி கணேஷ், நிழல்கள் ரவி

ஆச்சி இன்டர்நேஷனல், சொந்தம், பெண்ணின் கதை, சித்தி என்று ஜானவி நடித்த, நடிக்கிற தொடர்களின் பட்டியல் நீளமானது. சித்தி தொடரில் இவர் யுவராணிக்கு சித்தி.

“ஜாவர் சீதாராமன் கதை அறுபதுகளில் வெளியானதாயிற்றே! அதை இன்றைய சூழ்நிலைக்கு ஏற்ப எடுப்பது சிரமமாக இல்லையா?”

“அப்பா காலத்து பெரிய வீடு இருக்கிறது. இன்று அதே கிரவுண்டில், வீட்டை இடித்துவிட்டு, ஃப்ளாட் கட்டுகிறோமில்லையா? அதைத்தான் ஸ்கிரிப்ட் ரைட்டர் கண்மணி சுப்பு செய்திருக்கிறார். சுவாரஸியம் கூடியிருக்கிறதேயொழிய குறையாது” என்கிறார் டைரக்டர் ராஜா.

“ஏவி.எம்.மில் அந்தக் காலத்தில் ஜாவர் சீதாராமனுக்கு ஒரு தனி அறை உண்டு. அவரிடம் அட்டெண்டர் ஆக இருந்தவர், அதிகம் படிக்காதவர். ஆனால் அவருடைய மனைவி, ஜாவர் சீதாராமனின் பரம ரசிகை. அவரது கதைகளை எல்லாம் பத்திரிகைகளில் படித்த பின், கிழித்து பைண்ட் பண்ணி வைத்திருந்தார். எங்களுக்கு ஜாவரின் நாவல் தேவைப்பட்டபோது, கிடைக்கவில்லை. அந்த அம்மாளின் பழைய கலெக்ஷன்களை செல்அரித்த நிலையில் இப்போது ஏவி.எம்.மில் இருக்கும் அவரது மகன் கொண்டு வந்து தர, படித்து, தொடராக்க முடிவெடுத்தோம்'' என்கிறார் தயாரிப்பாளரான ஏவி.எம். குமரனின் மகன் சண்முகம்.

ஸ்கிரிப்ட்: **கௌதம் ராம்**

கேமரா: **வெங்கடேஷ்**

கவிஞர் கொடுத்த புத்தகம்!

கலைஞர் பிறந்த நாளையொட்டி வடசென்னை தி.மு.க.வினர் கவியரங்கம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தனர். அந்த கவியரங்கத்திற்கு வந்திருந்த முக்கிய உடன்பிறப்புகளிடம் டிக்கெட் புத்தகத்துடன் ஒருவர் வசூல் வேட்டை நடத்திக் கொண்டிருந்தார். என்னவென்று விசாரித்தோம். “அந்த முக்கியக் கவிஞரைக் கூப்பிடப் போயிருந்தோம். அவர் நடத்தும் கவிதைப் பத்திரிகைக்கு ஆயுள் சந்தா சேர்க்கச் சொல்லி ரசீது புக்கை எங்கள் தலையில் கட்டி விட்டார். தலைருக்கு வேண்டிய கவிஞர் அவர். 20000 ரூபாய் வசூலிக்க வேண்டும்; இதுவரை 7000 ரூபாய்தான் வசூல்' நாங்கள் தலைவர் பிறந்தநாள் கொண்டாட்டங்களுக்கே செலவுகளுக்கு தடுமாறுகிறோம் போடும்போது(?) இந்த லொள்ளு வேற'' என்று நம்மிடம் கடுப்படித்தார் அந்த உடன்பிறப்பு.

— கௌசி

நாடெங்கும் ஏஜெண்டுகள் தேவை

தொழிற் புரட்சி, பசுமைப் புரட்சிபோல் இதோ ஒரு புரட்சி

புத்தக வெளியீட்டில் புரட்சிகரமான சாதனை புரிந்து வரும் வர்த்தமானன் பதிப்பகம் தற்போது புத்தக விற்பனையிலும். புரட்சி கரமான திட்டத்தினை வழங்குகிறது!

மருந்துக்கடை-மளிகைக்கடை-பெட்ரோல் பங்க் - வெற்றிலை சீவல் கடை கூரியர் ஏஜன்ஸி- என எந்த இடத்திலும் புத்தகம் விற்கலாம்.

புத்தகக் கடையில் தான் புத்தகம் விற்க வேண்டும் என்பதில்லை; எந்தக் கடையிலும் புத்தகம் விற்கலாம். வேறு வியாபாரம் செய்வோர் கூடப் புத்தக விற்பனையையும் சேர்த்துச் செய்யலாம்.

நாட்டில் படிக்கும் ஆர்வம் இல்லை என்பது தவறான கருத்து! எப்போதும் இல்லாத அளவுக்குப் படிக்கும் ஆர்வம் இப்போது அதிகமாக இருக்கிறது! இது எங்கள் அனுபவத்தால் கண்ட உண்மை!

குறைந்த விலையில் புத்தகங்கள் இருந்தால் தேடி வந்து வாங்குகிறார்கள்! இன்னும் புத்தக நிறுவனங்களே அவர்களை நாடிப் போனால் தெருவெல்லாம் கல்வி அறிவு பெருகும்; சிந்தனை வளரும்; உற்சாகம் உண்டாகும்; ஊக்கம் ஏற்படும்; உழைப்புத் தானாக அமையும்; நாமும் முன்னேறலாம்; நாடும் முன்னேறும்!

அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவிற்கும் போகவேண்டாம். அங்கே பெறும் அறிவை இங்கே பெறலாம். உலகில் எந்த நாடும் பெறாத ஏற்ற முடையது இந்திய அரசியல் அமைப்பு முறை! யார் வேண்டுமானாலும் எந்தத் தொழிலை வேண்டுமானாலும் செய்யலாம், நேர்மையும் நாணயமும் இருந்தால்!

நாடெங்கும் ஏஜெண்டுகள் தேவை

சிற்றூராக இருக்கலாம்;
பேரூராக இருக்கலாம்;
சிறு நகரமாக இருக்கலாம்;
பெருநகரமாக இருக்கலாம்;

எங்கள் நூல்களை விற்க, ஒவ்வொரிடத்திலும் ஏஜென்டுகள் தேவை !

தங்களைப்பற்றி விவரமாக கடிதம் மூலம் எழுதுக.

வர்த்தமானன் பதிப்பகம் - விற்பனைப் பிரிவு
ஏ. ஆர். ஆர். வளாகம், 141, வடக்கு உஸ்மான் சாலை,
தியாகராய நகர், சென்னை- 17. (பனகல் பார்க் அருகில்)

கடிதம் மூலம் மட்டுமே தொடர்பு கொள்க, நேரில் வரத்தேவையில்லை. (சென்னையில் இருப்பவர்கள் உள்பட)


வாய்ப்பும் அதிர்ஷ்டமும் தாமாக வருவதில்லை! நாம் தான் அவற்றைத் தேடிச் செல்ல வேண்டும்.

ADVT.

அமெரிக்க டீ.வி. நிகழ்ச்சிகளில் 'நம்பர் ஒன்' ஸ்தானத்தை விடாப்பிடியாகத் தக்க வைத்துக் கொண்டிருக்கும் ஒரு நிகழ்ச்சி- 'ஓப்ரா வின்ஃப்ரே ஷோ'. அரட்டை அரங்கம் பாணியிலான இந்த நிகழ்ச்சியின் தொகுப்பாளர் வின்ஃப்ரே என்ற பெண்மணி. டீ.வி. நிகழ்ச்சிகளில் உலகிலேயே அதிகம் சம்பளம் பெறும் பிரபலம். இந்த நிகழ்ச்சியின் பாதிப்புகள், விளைவுகள் பிரம்மாண்டமானவை. நூற்றுக்கு நூறு உண்மை சம்பவங்களின் அடிப்படையிலேயே அமைவதால் சில சமயம் நிகழ்ச்சியின் தாக்கம் பார்ப்பவர்களை உணர்ச்சிகளால் கட்டிப்போட்டுவிடும். சில சமயம் அழவைக்கும். சில சமயம் நெகிழ வைக்கும். சிரிக்க வைக்கும். கோபப்பட வைக்கும். இரக்கம் கொள்ள வைக்கும்... இப்படி எல்லா –'க்கும்'களும் இதற்குள் அடக்கம்.

அப்படி ஒரு நிகழ்ச்சியில் அறிமுகமான பெண்மணிதான்– 'எரின் ப்ரோக்கோவிச்'. அவரின் கதை விவாதிக்கப்பட்டு முடிந்ததும் ஆரம்பித்த கைதட்டல்கள் பல நிமிட நேரங்கள் அமெரிக்கா முழுவதையும் புரட்டிப் போட்டது. கதையின் சுருக்கம் இது:

அது 1996ம் வருடத் துவக்கம். 'எரின் ப்ரோக்கோவிச்' என்ற 34 வயதுப் பெண் தமது மூன்று குழந்தைகளுடன், வருமானமில்லாத வாழ்க்கையுடன், கஷ்ட ஜீவனம் நடத்திக் கொண்டிருந்த நேரம். எரின், மலை போல நம்பிக் கொண்டிருந்தது, சாலை ஓரக் கார் விபத்தில் தனக்கு கிடைக்கவிருந்த நஷ்ட ஈட்டுத் தொகையைத்தான். இரண்டு முறை திருமணம் செய்து கொண்டு, இரண்டு முறையும் விவாகரத்துப் பெற்று, வேலையும் இல்லாமல் க்ரெடிட் கார்டு வடிவில், டெலிபோன் கட்டண வடிவில், வீட்டு வாடகை வடிவில் தினம்தோறும் கதவு தட்டும் கடன்காரர்களைக் கண்டு வெறுத்துப் போயிருந்த நேரம் அது. தனது வக்கீல் ரொம்பவும் நம்பிக்கையோடு சொல்லியிருந்ததால் கேஸை எப்படியும் ஜெயித்து விடுவோம் என்று நஷ்ட ஈடைச் சற்று தெம்போடு எதிர்நோக்கியிருந்தாள் எரின். ஆனால், தோற்றுப் போய், போதாக் குறைக்கு, எரின் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகிப் போனது. எல்லாவற்றையும் செட்டில் செய்துவிட்டு வங்கிக் கணக்கைப் பார்த்தால் பாக்கி இருந்தது வெறும் 74 டாலர்கள்! ஆத்திரம் உச்சிக்கேற, தனது வக்கீல் எட் மார்ஸியின் அலுவலகத்திற்கு வந்து சண்டை பிடிக்கிறாள். "எனக்கு ஒரு சரியான வேலை கிடைக்கற வரைக்கும் உன்கிட்டதான் தினம் வேலைக்கு வரப் போறேன். அதுவரைக்கும் நீதான் சம்பளம் கொடுத்தாகணும்" என்று அடாவடியாக வேலைக்குச் சேர்கிறாள். எட் மார்ஸியால் மறுக்க முடியவில்லை. மூளைக்கு அதிகம் வேலையில்லாத பொறுப்புகள் அவளுக்குத் தரப்படுகின்றன. அதில் ஒரு வழக்கை கர்மசிரத்தையோடு துருவிப் பார்க்க சில புதிரான தகவல்கள் கிடைக்கின்றன. வக்கீலின் அனுமதி பெற்று அந்த விவகாரத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறாள். பத்து நாட்கள் அது விஷயமாகவே அலைந்து திரிந்து



வாழ்க்கை → வழக்



• 'எரின் ப்ரோக்கோவிச்' படத்தில் குழந்தைகளுடன் ஜூலியா ராபர்ட்ஸ்

டி.வி. → சினிமா!

தகவல்களைத் திரட்டுகிறாள். முதலில் அலட்சியப்படுத்தும் எட் மார்ஸி, வழக்கின் ஆழத்தை, அதன் போக்கை உணர்ந்து, பிரமாதமான சம்பள உயர்வு கொடுத்து எரினை முழுமூச்சாக உற்சாகப் படுத்துகிறார். வழக்கின் சாராம்சம் இதுதான்:

PG & E என்றொரு எரிவாயுக் கம்பெனி அமெரிக்காவின் முதல் 10 பெரிய நிறுவனங்களுள் ஒன்று. அதன் ஒரு கிளை உற்பத்தி ஆலை தன்னைச் சுற்றியுள்ள 10 கி.மீ. பரப்பளவுப் பகுதிகளை கழிவுகளால் நாசப்படுத்திக் வந்திருக்கிறது. ஆலையைச் சுற்றியுள்ள மக்கள் திடீர் திடீரென புற்றுநோய், உட்பட பல வியாதிகளால் தாக்கப்படுகின்றனர். சிலர் இறந்தே போகின்றனர், இதுதான் காரணமென்றுதெரியாமலேயே. ஒருவேளை விவரம் தெரிந்தோ, சந்தேகப்பட்டோ கோர்ட்டுக்குப் போனாலும், எதிர்த்து வழக்குத் தொடுத்தால் ஜெயிக்க முடியாத மாதிரி சதிவேலைகளையும் செய்திருந்தது பிஜி அன்ட் ஈ நிறுவனம்.

தனது ஆய்வு முடிவுகளின்படி நிறுவனம் இருக்கும் (பாதிக்கப்பட்ட) பகுதியில் இருந்த ஒவ்வொருவரையும் தேடித் தேடி விவரம் சேகரித்து, டாகுமெண்ட்டுகள் எல்லாவற்றையும் சேகரிக்கிறாள் எரின். விவரம் அறிந்த பிஜி அன்ட் ஈ சாம, தான, பேத, தண்ட வழிமுறைகளைக் கொண்டு எரினை எதிர்க்கிறது. வழக்கறிஞர் எட் மார்ஸியின் துணையோடு கோர்ட்டுக்குப் போகிறாள். நீண்ட விவாதத்திற்குப் பிறகு எரின் திரட்டிய தகவல்கள் ஆதாரபூர்வமானவை என்று நிருபணமாகிறது.

வழக்கின் முடிவு, பாதிக்கப்பட்டவர்களுக்கு பிஜி அன்ட் ஈ நிறுவனம் 433-மல்லியன் டாலர்கள் (இந்திய ரூபாய் மதிப்பில் சுமார் 2000 கோடி ரூபாய்கள்) நஷ்டஈடு தரவேண்டும் என்று தீர்ப்பாகிறது. அமெரிக்க வரலாற்றிலேயே ஒரு பொதுநல வழக்குக்கு ஆதரவாக இவ்வளவு பெரிய தொகை நஷ்டஈடாக வழங்கப்பட்டது அப்போதுதான்.

இன்று எரின் அமெரிக்காவின் மிகச் சிறந்த சட்ட பரிந்துரைப்பாளர்களில் ஒருவர்...

இந்தச் சம்பவம் வரிக்குவரி ERIN BROCKOVICH என்ற பெயரிலேயே திரைப்படமாக வெளிவந்து சக்கைப் போடு போடுகிறது. எரின்-பாத்திரத்தில் நடித்திருக்கும் ஜூலியா ராபர்ட்ஸ்- இந்தப் படத்தில் வாழ்ந்திருக்கிறார். (இதற்குப் பிறகு ஜூலியாவின் நிலை-ஹாலிவுட் கதாநாயகிகளில் நம்பர் -1. சம்பளம்- சுமார் 100 கோடி ரூபாய்கள் (அட! ஒரு படத்துக்குத்தாங்க!)

தமிழ் டி.வி.ஸீரியல் தயாரிப்பாளர்கள் மெகா ஸீரியல்களுக்கு இக் கதையை ஏன் யோசிக்கக் கூடாது?

— ஜீவன்

நிம்மதியின் முகவரி என்ன?

● சு. கணேசன், பனங்கோட்டூர். ❑

? 'மத்திய அரசு வழங்கிக் கொண்டிருக்கும் ஒரு லட்சத்து அறுபதாயிரம் கோடி ரூபாய் மானியத்தை ஒழித்துக் கட்டினால் நமது நாட்டில் வறுமைக் கோட்டுக்குக் கீழே உழன்று கொண்டிருக்கும் முப்பது கோடி மக்களுக்கும் மாதம் ரூ 4000 வீதம் மணி யார்டர் அனுப்பலாம்' என்று மன்மோகன் சிங் யோசனை கூறியிருப்பது பற்றி...?

! மாதம் ரூ. 4000 'கருணைத் தொகை' தந்தால் அது மட்டும் உற்பத்திக்கு உதவாத செலவினமாகாதா! மிச்சப்படும் தொகையைத் தொழில் முதலீடாக்கி உற்பத்திப் பெருக்கத்துக்கும் வேலை வாய்ப்புக்கும் அதன் மூலம் கூடுதல் வருமானத்துக்கும் வழி செய்து, வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்களை உயர்த்த வேண்டும் ஐயா!

● ஆர். வாணுமாமலைப் பெருமாள், தளக்கர்குளம்.

? இன்று தமிழைக் காக்க பாடு பட்டுக் கொண்டிருப்பவர்கள் யார் யார்?

! தொலைக்காட்சி அறிவிப்பாளர்கள்!

● எஸ். ராமலிங்கம், ஆத்தூர்.

? ஆண்களுக்கு முப்பது வயதிலும் பெண்களுக்கு 25 வயதிலும் திருமணம் செய்ய வேண்டுமென்று சட்டம் கொண்டு வந்தால் ஜனத்தொகை குறையுமில்லையா?

! இந்த மாதிரி சட்டத்தால் எல்லாம் ஜனத் தொகை குறையாது. அனைவருக்கும் கல்வி (படிப்பறிவு அல்ல!) என்ற சாதனைதான் நமது பிரச்னைகள் பலவற்றுக்கும் தீர்வு.

● எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

? இந்திய ஜனாதிபதி கே.ஆர். நாராயணனின் சீனப் பயணம் சர்வதேச அரங்கில் நமக்கு நன்மைகளைப் பெற்றுத் தருமா?

! நட்புறவு என்பது இரு வழிப் பாதை. அதில் வியாபார நோக்கு நிறையவே உண்டு. சீனாவுக்குக் கதவுகளைத் திறந்து விட்டால் இங்கு சீனப் பொருள்கள் குவியும். அந்த அளவுக்கு நமது ஏற்றுமதியும் இல்லாதுபோனால் நம் பொருளாதாரம் அடி வாங்கும். பாதுகாப்பு, வர்த்தகம் இரண்டிலுமே எச்சரிக்கையுடன் இருந்து முதலில் ஜன்னலை மட்டும் திறந்து வைக்கலாம்!

● ஜெ. ரஜினி ராம்கி, புனே.

? கலைஞரின் சாதனையில் எதைப் பெரிதாக நினைக்கிறீர்கள்?

! முதல்வரான பிறகும் கலைஞராகவே இருப்பது.

● எம். டி. ரவிகாந்த், காஞ்சிபுரம்.

? தொடர்ந்து போராட்டம் நடத்தினால் தான் முல்லைப் பெரியாறு பிரச்னையை மக்கள் மறக்க மாட்டார்கள் என்கிறாரே மூப்பனார்...?

! த.மா.காவை மறந்து விடக் கூடாதே என்கிற பதைப்புதான் நிஜமான காரணம்.

● எஸ். கதிரேசன், பேரணாம்பட்டு.

? புதுசு புதுசாக சாதிக் கட்சிகள் தோன்றுகின்றனவே – சாதி வெறி பிடித்த கட்சிகள், சங்கங்களைத் தமிழக அரசு தடைசெய்யக் கூடாதா?

! தமிழக அரசால் ஒன்றும் பண்ண முடியாது. ஏதாவது ஒரு தேசியக் கட்சி மூன்றிலிரு பகுதி பெரும்பான்மையுடன் நாடாளுமன்றத்தைக் கைப்பற்றி, சுயநலனை விட தேசநலனே முக்கியம் என்று உணர்ந்து, அரசியல் சாசனத்தில் ஆரோக்கியமான திருத்தங்களைச் செய்தால் தான் உண்டு. நடக்கிற காரியமா?

● கெ. ஆண்டிவேல்சாமி, அய்யலூர்.

? இந்திய கிரிக்கெட் அணியை இந்திய அரசியல்வாதிகளுக்கு ஒப்பிடலாமா...?



• மாற்றாத யோசனை!



• பயண பலன்!




• தொல்லை பேசி!

! மூச்! இன்னும் முழு உண்மை வரவில்லை. வந்தால் இவர்கள் முன்னால் அரசியல்வாதிகள் கடுகாய்ச் சிறுத்து விடுவார்களாம்!

● பி. ஜெயப்பிரகாஷ், பொள்ளாச்சி. ✱

? இசை – ஓசை – என்ன வேறுபாடு...?

! கலைஞர்களின் முயற்சியில் பண்பட்டு



• மறதி பயம்!

பெரிது! பெரிது!

வெளிப்படும் ஓசை தான் இசை; கலையுணர்வு இல்லாதோர் பல சமயங்களில் இசை என்று நினைத்து வெளிப்படுத்துவது ஓசை!

● எஸ். ஏசுதாஸ், சென்னை – 12.

? சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் என ஒன்று இருந்ததே அது என்னவாயிற்று?

! இப்போதும் அமோகமாக இருக்கிறது! சமீபத்தில் அங்கு வாங்கிய உபயோகமான நூல் : கழகத் தமிழ் அகராதி.

● ஜி. ஜெயராமன், கூந்தலூர்.

? அநியாயம், அக்கிரமம் – வித்தியாசம் கூறவும்.

! அநியாயம் : குஜராத் மாநில வரி விதிப்பைத் தவிர்ப்பதற்காகப் போலி நிறுவனப் பெயர்களைக் கற்பித்து வெளிமாநிலங்களுக்கு டீசல் விற்றது போல் கணக்கு காண்பித்து, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனங்கள் செய்த வரி ஏய்ப்பு.

அக்கிரமம் : இந்த ஊழலில் ஐஓசி அதிகாரிகளுக்குச் சம்பந்தமே இல்லை என அவர்கள் மறுப்பது!

● காவிரி மணாளன், கோனாபட்டு.

? தொலைபேசி ஊழியர்கள் 3,25,000 பேருக்கு இனிமேல் இலவச தொலைபேசி இணைப்புடன் 150 இலவச அழைப்புகளும் வழங்க அரசு தீர்மானித்துள்ளது பற்றி...?

! தேர்தல் சமயத்தில் அளிக்கப்படும் வாக்குறுதிகள் ஞாபகத்தில் ஏதோ யோசனை பண்ணாமல் ராம்விலாஸ் பாஸ்வான் சொல்லி (உளறி) விட்டார். அதற்கு ஆகும் செலவு எவ்வளவு என்று கணக்குப் பார்த்தால் தலை சுற்றும். அரசின் எத்தனையோ டம்பச் செலவுகளைத் தாங்கும் இந்தியக் குடிமகன் இதையும் தாங்குவான்!

● ஆர். ஷம்மு, குடந்தை.

? நிம்மதியின் முகவரியைக் கொஞ்சம் கூறுங்களேன்?

! மனசாட்சி விலாஸ், உண்மைத் தெரு, உழைப்பு காலனி, எளிமை வட்டம், மகிழ்ச்சி மாவட்டம்.

❑ ரூ. 50 பரிசு பெறுபவர் :
கு. கணேசன், 150, தரணி ஸ்கொயர்,
பணங்கோட்டூர் அஞ்சல்,
மறைமலைநகர் - 603 209.

* ரூ. 25 பரிசு பெறுபவர் :
பி. ஜெயப்பிரகாஷ், TNEB குடியிருப்பு,
சர்க்கார்பதி - 642 133
சேத்துமடை (வழி), கோவை



“அடிமை” — கொதிக்கிறார் ராஜன்

திரைப்பட விநியோகஸ்தர் சங்கம் தொடங்கிய நாள் முதல் (1982) சிந்தாமணி முருகேசன்தான் தலைவர் என்ற நிலையை மாற்றியுள்ளார் பட அதிபர் ராஜன்:

“எனது தேர்தல் வெற்றியை தீபாவளி போல் உறுப்பினர்கள் கொண்டாடுகிறார்கள்” என்றவரை அவரது அலுவலகத்தில் சந்தித்தோம். அவர் அளித்த பேட்டியில் 'சிந்தாமணி' குறித்து நமக்குக் கிடைத்த புகார்ப் பட்டியல் இது...

● பதினெட்டு வருஷமாகப் பதவியில் அட்டைபோல் ஒட்டிக் கொண்டு, மீடியம் பட்ஜெட் படங்களைத் தயாரித்து சினிமாவை வாழ வைத்த இருபது தயாரிப்பாளர்களை விரட்டி அடித்தவர் இவர்.

● தொடக்க காலத்தில் ஒழுங்காகச் செயல்பட்ட இவர், புகழ் வந்தவுடன் உறுப்பினர்களை அடிமைகளாக நடத்தினார். தன் முன்னால் உட்காரத் 'துணிந்தவர்களை' சங்கத்திலிருந்து நீக்கினார்.

● சங்கம் தொடங்கியபோது இருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை எண்ணூற்று பதிமூன்று. இப்போது இருப்பவர்கள் இருநூற்று பதினைந்து. எஞ்சிய அனைவரையும் இவர் நீக்கி விட்டார். கடந்த மாதம் மட்டும் இவர் இனியும் தலைவராக வரக்கூடாது என்று சொன்ன இருநூற்று ஒன்பது பேரை ஒரே நேரத்தில் நீக்கியுள்ளார்.

● இவரது அட்டூழியங்களைக் கண்டு பொறுக்க முடியாத கேயார், அசோக், ஆனந்தாசுரேஷ், அழகப்பன் போன்ற பட அதிபர்கள், 'விநியோகஸ்தர்கள் நலவாழ்வு சங்கம்' என புதிதாகத் தொடங்கி நடத்தினார்கள்.

● தம்மை எதிர்த்தவர்களை எல்லாம் நீக்கிவிட்ட பிறகு 1992 தேர்தலில் தலைவர் பதவிக்கு யாரையுமே போட்டியிட விடவில்லை. செயற்குழு உறுப்பினர்கள் பதவிக்குக்கூடத் தமது ஆட்களையே நிறுத்தினார். ப்ராக்ஸி வோட்டுமுறையைப் (ரகசிய வோட்டு) பயன்படுத்தி, எஞ்சியிருந்த உறுப்பினர்களிடம் கையெழுத்து வாங்கி மொத்த வோட்டுக்களைப் போட்டு விடுவதுதான் இவரது 'ஜனநாயக'த் தேர்தல் முறை. ஆனால் உயர்நீதிமன்ற உதவியுடன் இந்த முறை ப்ராக்ஸி வோட்டு முறையை ஒழித்து விட்டேன்.

● இது தவிர 1992 தேர்தலில், எதிர்த்துப் போட்டியிட்டவர்களுக்கு யாரெல்லாம் வோட்டுப் போடுகிறார்கள் என்பதைக் கவனித்துப் பழிவாங்க வோட்டுச் சீட்டின் சீரியல் எண்களை ரகசியமாகக் குறித்து வைத்துக் கொண்டு தனக்கு வோட்டுப் போடாதவர்களை சங்கத்தை விட்டே துரத்தியவர். இந்தத் தேர்தலில் நீதிமன்ற அதிகாரி முன்னிலையில் தேர்தல் நடத்த கோர்ட் உத்தரவு பெற்றதால்தான் நான் ஜெயிக்க முடிந்தது.

● இன்று சினிமா சரியில்லை, பெண்டாட்டித் தாலியை அடகு வைத்து யாரும் படம் வாங்கக் கூடாது என்று ஒவ்வொரு கூட்டத்திலும் பேசும் இவர்தான், பல வருடமாக படமே வாங்கி வியாபாரம் செய்யவில்லை என்று காரணம் கூறி 209 பேரை நீக்கியிருக்கிறார்.

● படம் ஓடினால் லாபம், விழுந்தால் நஷ்டம் என்ற நிலையில் படம் வாங்கும் விநியோகஸ்தர்கள் இறந்தால், ஒரு லட்சம் ரூபாய் பாதுகாப்பு நிதி கொடுக்கப்பட்டு

வந்ததை ரத்து செய்து விட்டார்

● வாங்கக் கூடாது என்று நிராகரித்த படங்களை வாங்கும் விநியோகஸ்தர்களுக்கு ஒரு லட்சம், எழுபத்தையாயிரம் என அபராதம் போட்டு, பலரைத் தொழிலைவிட்டே துரத்திவிட்டார்.

● அலுவலகத்தில் முக்கியமான பத்து பைல்களைக் காணவில்லை. அந்த பைல்களை மூன்று பேர் கொண்ட குழு அமைத்துத் தேடி வருகிறோம். அது கண்டுபிடிக்கப் பட்டதும் இன்னும் உண்மைகள் வெளியே வரும்.

இந்தப் பட்டியலை நீட்டிக் கொண்டே போகும், ராஜன் தரப்பிலிருந்து குற்றச்சாட்டுகள் குவிகின்றன. இறுதியாக ராஜன் அதிர்ச்சியான தகவல் ஒன்றையும் சொன்னார். "எனது உயிருக்குக் குறிவைத்திருக்கிறார்கள். யார் என்பதை நீங்களே புரிந்து கொள்ள வேண்டும். இருபத்து மூவாயிரம் தொழிலாளர்களின் குடும்பங்களைத் திருட்டு வீடியோ, விசிடியிலிருந்து காப்பாற்ற எனது உயிர் ஒரு பொருட்டே அல்ல."

சினிமாவைச் சீரமைக்க உங்கள் தரப்பில் என்ன செய்யப் போகிறீர்கள் என்றோம்.

"இனி டெக்னிஷியன்கள், இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள், தியேட்டர் உரிமையாளர்கள், விநியோகஸ்தர்கள் ஒற்றுமையாக இருப்பது ஒன்றுதான் சினிமாவுக்கு அவசியம். எனவே எல்லா தரப்பிலிருந்தும் பன்னிரண்டு பேர் கொண்ட குழு அமைத்து அதன்படி செயல்படப் போகிறோம். இனி விநியோகஸ்தர்கள் சுதந்திரமாகச் செயல்படுவார்கள். பதினெட்டு ஆண்டு அடிமை ஆட்சி இனியும் இருக்காது" என்றார் ராஜன்.

"விநியோகஸ்தர்களிடமிருந்து நிதி உதவி பெற்றால் குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்து படங்களை வெளியிட்டாக வேண்டும். காலக்கெடுவுக்குள் முடிக்காத படங்களை வாங்கக் கூடாது; இதனால் விநியோகஸ்தர்களுக்கு நஷ்டம் வரும் என்றும், குறிப்பிட்ட தேதிக்குள் பூஜைபோட்டு முடித்தப் படங்களை மட்டும் தான் வாங்க வேண்டும் என்றும் தீர்மானம் போட்டார்கள். ஆனால் கேரண்டி உள்ள பெரிய பேனர் படங்களையும், இந்த வட்டத்திற்குள் அடைத்து விட்டால் எப்படி சினிமா வாழும். அப்படி பெரிய பேனர் படங்களை வாங்கியவர்களுக்கே அபராதம் போட்டிருக்கிறார் சிந்தாமணி முருகேசன். அதற்கு உதாரணம் பட அதிபர் அனந்து" என்றார்.

அனந்துவை சந்தித்தோம்.

"மகளிர் மட்டும் படத்தில் நானும் ஒரு பார்ட்னர். ஆனால் இந்தப் படத்தை வாங்கக் கூடாது என்று சங்கத் தலைவர் சொன்னார். நானும் ஒரு பார்ட்னர், என்ன செய்யறது என்றேன். 'வாங்கிக்கோ' என்றார்.

“ஆட்சி இனி இல்லை!”

படம் ஐம்பது நாள் ஓடிய பிறகு ஏன் படத்தை வாங்கினாய் என்று கேட்டுவிட்டு திடீரென்று 1½ லட்ச ரூபாய் அபராதம் விதித்தார். இதை கமல் சாரிடம் சொன்னேன். அபராத தொகையில் எழுபத்தைந்தாயிரத்தை அவரும் பகிர்ந்து கொண்டு கட்டினார். இதுபோன்ற நியாயம் பாராத தலைமையிடமிருந்து மீரான் சாகிப் தெருவுக்கு இப்போதுதான் விடுதலை கிடைத்திருக்கிறது" என்றார்.




• அனந்து

இவற்றிற்கு சிந்தாமணி முருகேசன் பதில்தான் என்ன?

"அவர்கள் கூறும் எந்தக் குற்றச்சாட்டைப் பற்றியும் நான் கவலைப்படப் போவதில்லை. எதற்கும் நான் பதில் கூற வேண்டிய அவசியம் இப்போது இல்லை. இன்னும் ஒரு வருடம் கழித்து அவருக்குச் சரியான பதில் கொடுப்பேன்" என்று சுருக்கமாக முடித்துக் கொண்டார். பாவம் தமிழ் சினிமா!

— ஜெயந்த்

படங்கள் : வெங்கடேஷ்




மேஷம்: *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

புத்திசாலித்தனமான காரியங்கள் செய்து புகழ் பெறுவீங்க. பேச்சு சாதுர்யம் ஒரு முக்கிய விஷயத்தை சாதிச்சுக் கொடுக்கும். எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகளுக்குத் தயாரா இருங்க. சிலருக்குத் திருமண ஏற்பாடுகள் நடக்கும். வெளியூர் பயணம் இருக்கும். பெண்களுக்கு பிரமோஷன் வாய்ப்பு பிரகாசமா இருக்கு.




ரிஷபம்: *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

இந்த வாரம் அலைச்சலும் செலவும் ஏராளமா இருக்கும். உடல்நலன் சரியா இருக்காது. வேலைப்பளு அதிகமாகவும் பலன் குறைவாகவும் இருக்கும். கணவன் மனைவி உறவுல சில பிரச்னைகள் வரும். வீட்டுல அமைதி நிலைக்கணும்னா, நீங்க கொஞ்சம் விட்டுக் கொடுத்து நடந்துக்கணும். ஆபீஸ்ல மேலதிகாரிகள் பல விதமா தொந்தரவு தருவாங்க. கவனமா இருக்க வேண்டிய வாரம்.



மிதுனம்: *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

சிரமமே இல்லாம எதிலும் ஜெயிக்கலாம். இந்த வாரம் உங்க நீண்ட நாள் கனவு ஒண்ணு நனவாகும். வீடு, மனை ஏதாவது வாங்குவீங்க. நண்பர்களால ஆதாயம் உறுதி. பெண்களுக்குத் தாய் வீட்டுலேருந்து சொத்து ஏதாவது கிடைக்கலாம். உத்தியோக ரீதில பெரிய அபிவிருத்தி இருக்காதுன்னாலும் சிலருக்குப் புகழ் கூடும். குறிப்பா, கலைஞர்களுக்குப் பிரமாதமான வாரம் இது.



கடகம்: *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

வீட்டுல நடக்கப் போற ஒரு விசேஷம், உங்க வாழ்க்கைத் துணையோட இருந்த ஊடலை நீக்கிடும். நண்பர்கள் உதவுவாங்க. அறிமுகமில்லாத நபர்கள்கிட்ட கொஞ்சம் எச்சரிக்கையா இருங்க. பண இழப்பு, பெயர் கெட்டுப் போறது நடக்கலாம்! வெளியூர் பயணங்கள் வேணாம். தர்ம காரியங்கள் செய்த பிறகு தொடங்கற முக்கியப் பணிகள் பிரமாதமா ஒர்க்அவுட் ஆகும்.




சிம்மம்: *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

எதிரிகள் ஓடி ஒளியற வாரம். தொழில்ல இருந்து வந்த பிரச்னைகளெல்லாம் காணாமப்போகும். கலைத் துறையினருக்கு நல்ல புகழும் வருமானமும் கூடும். மக்களால ஆதாயம் உண்டு. ஷேர் மாதிரி முதலீடுகள் வேண்டாம். பயணத்துல எச்சரிக்கையா இருங்க. ரொம்ப நெருக்கமான உறவினர் ஒருத்தரைப் பிரிய வேண்டி வரலாம். சிலருக்கு வெளியூர் டிரான்ஸ்பர் இருக்கும். பெண்களுக்கு இது ஜாலி வாரம்.




கன்னி: *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

இந்த வாரம் உங்க காரியங்களுக்குத் தடையே வராது. மனசுல உற்சாகம் பொங்கும். ராப்பகலா உழைச்சி நல்ல பேர் அடைவீங்க.



தனுசு ராசிக்காரரான குமரி அனந்தனுக்குப் பிரச்னைகள் நிறைய வருமாம்!

ஆனா, நிர்வாகத் துறையினருக்குச் சில பிரச்னைகள் வரலாம். தொழில் துறையினருக்கு, கூட வேலை பார்க்கறவங்க, பார்ட்னர்களால ப்ராப்ளம் வரும். புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும்னாலும் எதையும் தீர யோசிச்சி செயல்படறது நல்லது.




துலாம்: *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம், 3-ம் பாதம் வரை)*

எதையும் ஒரு தடவைக்கு ரெண்டு தடவை யோசிச்சி செய்யுங்க. யாரையும் முழுக்க நம்பிடாதீங்க. குறிப்பா, அறிமுகமில்லாதவங்களோட அதிக சகவாசம் வேணாம். வீட்டுல சில பிரச்னைகள் வர்லாம். சொத்து விஷயத்துல சிக்கல்கள் வரும். கோர்ட் கேஸ்னுகூட சிலருக்கு


நடக்குமென்பார், நடக்கும்!

அலைய வேண்டி வரும். பெற்றோர் உடல் நலத்துல கவனமா இருங்க. உங்க அலுவலகம் பிரச்னைகளை நண்பர்கள்கிட்ட பேச வேணாம். கண்ட இடங்கள்ல சாப்பிடாம இருக்கறதும் நல்லது.




விருச்சிகம்: *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

மனசு உற்சாகமா இருக்குமே? சுறுசுறுப்பா ஆக வேண்டியதைப் பாருங்க. நண்பர்கள், உறவினர்கள் எல்லாருமே உங்க சப்போர்ட்டுக்கு வருவாங்க. ஆனா, வீடு வாங்கறதுக்கோ, தொழிலை மாத்திக்கறதுக்கோ இது சரியான நேரம் இல்லை. மனைவி உடல் நலத்துல கவனமா இருக்கறது அவசியம். ராத்திரி பயணம் வேணாம். சிலருக்குப் பூச்சிக்கடி அலர்ஜி மாதிரி. ஏதாவது கோளாறு வரலாம். வாரக் கடைசில ஒரு இன்ப அதிர்ச்சி உங்களுக்கு இருக்கு.




தனுசு: *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

பிரச்னைகள் நிறைய வரும் தான். ஆனா, எதையும் சமாளிக்கற உறுதியும் சாமர்த்தியமும் உங்களுக்கு இருக்கு. இந்த வாரம் மின்சார சம்பந்தப்பட்டப் பொருட்கள் விஷயத்துல எச்சரிக்கையா இருக்கணும். பொதுப் பிரச்னைகள்ல தலையிடாதீங்க. வம்பு தும்புகள் பக்கம் போக வேணாம். ஆபீஸ்ல அதிகாரிகள் பத்தி கமெண்ட் அடிக்காதீங்க. நண்பர்களே எதிரியாகி, மாட்டி விடறதுக்கு வாய்ப்பிருக்கு.




மகரம்: *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

கிரகங்கள் சாதகமா இல்லை. உங்க நடவடிக்கைகள்ல அதிக கவனம் அவசியம். புதியத் திட்டங்கள் எதுவும் இப்ப வேணாம். மனைவியோட ஊடல் வரலாம். பணப் பிரச்னை வரும். கடன் குடுத்தவங்களால தொல்லை அதிகரிக்கும். யாருக்கும் இப்ப ஜாமீன் கையெழுத்துப் போடாதீங்க. வழக்கு ஏதும் இருந்தா வாய்தா வாங்கப் பாருங்க. வீட்டு மனுஷங்கிட்ட அன்பா நடந்துக்கங்க.



கும்பம்: *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

உங்க பிரச்னைகள் வந்த சூட்டுல காணாம போயிடும். வழக்கு விவகாரங்கள் சாதகமான பலனையே தரும். கலைத் துறையினருக்கு ஆதாயமான வாரம். பெண்களால சில பிரச்னைகள் வரலாம். பயணத்துல கவனமா இருங்க. டூ வீலர் பயணம் வேணாம். கை கால்ல அடிபட்டுப்பீங்க.



மீனம்: *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

சமூக சேவைல நாட்டமுள்ள உங்களுக்கு புகழ்ப் பஞ்சமே இல்லை. இப்ப நீங்க தொட்டதெல்லாம் துலங்கற நேரம். உறவினர்களால் ஆதாயம் உண்டு. சிலருக்குத் திருமண யோகம் கூடி வரும். பணப் பிரச்னை இருக்காது. வீடு, மனை வாங்குவீங்க. பழைய பாக்கிகள் வந்து சேரும். பையன்களால சில நல்ல காரியங்கள் நடக்கும். வீட்டுப் பிரச்னைகளை வெளில பேசாம இருக்கறது நல்லது. ●

குறையொன்றுமில்லை

பகவானிடத்தில் பூரணமான பக்தி உடைய ஒரு பாகவதோத்தமர் - அவர் தப்பே பண்ணுகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள்... 'அந்தத் தப்பை நீ சொல்லாதே!' என்கிறது வேதம்! 'அப்படிச் சொன்னாயானால் அது உனக்குத்தான் வந்து சேரும். அதனாலே பாகவதோத்தமர்களிடத்திலே அபசாரப்படாதே. இன்றைக்கில்லாவிட்டாலும் ஒருநாள், தாங்கள் பண்ணிய தப்பைப் போக்கிக் கொள்ளக் கூடிய சக்தி அவர்களுக்கு உண்டு. ஆனால் நீ அபசாரப்பட்டுவிட்டாயானால் அதைப் போக்கிக் கொள்ளும் சக்தி உனக்கு இராது. நீ ஒருவேளை அவரை தூஷித்தால் என்ன ஏற்படும்...?'

சூரியனைப் பார்த்து ஒருவன் கேலி பண்ணுகிறான் - பரிகாசம் பண்ணுகிறான். அக்னியிடத்திலே போய் அது ஒட்டுமா!

ஆக, சூரியன், அக்னி முதலியவர்களை ஒருவன் ஏசினால் அது எப்படி அவர்கள் மேல் போய் ஒட்டாதோ அந்த மாதிரி, நீ ஏசினாயானால் அந்த வேத வித்துக்களுக்கு அது போய்ச் சேராது. அதனால் பாகவதோத்தமர்களிடம் அபசாரப்படாமல் இரு; அவர்களை வணங்கு என்று சொல்லித் தருகிறது வேதம்.

ஆகவே, விஷ்ணுவினுடைய சக்தி, விஷ்ணுவினுடைய பலம் எங்கே இருக்கிறது என்று கேட்டால், பாகவதோத்தமர்களிடத்திலே இருக்கிறது என்பதையும் இந்த விஷ்ணு சப்தத்திலே கவனிக்க வேண்டும்.

இன்னொரு இடத்தில் வேதம் சொல்கிறபோது, எல்லா தேவதைகளுக்கும் முன்னே யக்ஞத்திலே அமர்ந்து 'யக்ஞ பலனைக் கொடுப்பதோடு, யக்ஞ ஹவிஸை சுவீகரிக்கிறான் விஷ்ணு' என்று சொல்கிறது. முதலில் அவனுக்குத்தான் கொடுக்க வேண்டும். இதை மஹரிஷிகள் எல்லோரும் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.

ஒருவேளை இது நமக்குத் தெரியாமல் போய்விட்டாலும் சரித்திரத்தைப் பார்த்தாவது தெரிந்து கொள்ளும்படி சொன்னார்கள். ராஜசூய யாகத்தின் முதல் தாம்பூலத்தை, இதோ இருக்கிறானே விஷ்ணு வாசுதேவன், சர்வ வியாபி, எங்கும் நிறைந்தவன் அவனுக்குக் கொடுங்கள்' என்று எல்லா மஹரிஷிகளும் கொண்டாடுகிறார்கள்.

அப்படிக் கொடுக்காதே என்று தடுத்த ஒருத்தன் பட்ட பாட்டைப் பற்றியும் சொல்லியிருக்கிறது. தடுத்தவன் யார்...? சிசுபாலன்! பகவானைக் கண்டவாறு ஏச ஆரம்பித்து விட்டான் அவன்! சபையிலே அவருக்கு அக்ர தாம்பூலம் கொடுக்கக் கூடாது என்று ஏசுகிறான்.

சுதச்ரவை என்று அவன் அம்மாவுக்குப் பெயர்; தமகோஷன் அவன் அப்பா. கிருஷ்ணனுக்கு அத்தை உறவு ஆக வேண்டும் சுதச்ரவை.

சிசுபாலன் பிறக்கிறபோதே மூன்று கண், நான்கு கைகளோடு கழுதை கத்துகிற மாதிரி கத்திக் கொண்டு பிறந்தான்!

அந்த ஊரில் இருக்கிறவர்களெல்லாம் ஜோதிடர்களைக் கேட்டபோது, "இந்த மாதிரி குழந்தை ஊரில் இருந்தால் ஊரே கெட்டு அழியும்; அதனால் அதைக் கொண்டு போய் மதில்சுவருக்கு அப்பால் எறிந்து விடுங்கள்!" என்றனர்.

குழந்தையை எடுத்து வெளியே எறிகிற போது ஆகாசத்திலே அசரீரி வாக்கு கேட்கிறது!


"குழந்தையை வெளியே எறியாதீர்கள். இந்தக் குழந்தையை யார் கையிலே எடுத்துக் கொள்கிறபோது அதன் அதிகப்படியான அங்கங்கள் மறைந்து போகின்றனவோ, அவனால்தான் இக் குழந்தைக்கு முடிவு" என்றது அசரீரி.

72

"குழந்தை பிறந்ததாமே...?" என்று ஒவ்வொருத்தராகக் கேட்டு வருகிறார்கள். தாயார்க்காரி என்ன பண்ணுகிறாள்... குழந்தையைத் தூக்கி எல்லார் கையிலும் கொடுத்து விடுகிறாள் – 'பாருங்கள் பாருங்கள்' என்று...

அங்கே வாசுதேவன், கிருஷ்ணன் வந்தான். 'குழந்தை பிறந்ததா?' என்று கேட்டுக் கொண்டு அவன் வருகிற போது, குழந்தையை அவன் கையிலேயே கொடுத்து விட்டாள். அவன் குழந்தையை வாங்கிக் கொண்டவுடனே அதிகப்படியான இரண்டு கைகளும்

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்



ஒரு நேத்திரமும் மறைந்து போய் விட்டன! உடனே குழந்தையின் அப்பா பிரார்த்தனை பண்ணிக் கொண்டார் :

"அப்பா, கிருஷ்ணா! உன்னால்தான் இவனுக்கு முடிவு என்று ஏற்பட்டுப் போயிற்று. என் குழந்தையை நீதான் காப்பாற்ற வேண்டும் – அபயம் அளிக்க வேண்டும்" என்றார்.

கிருஷ்ணன் என்ன சொல்கிறான்...? "இவன் நூறு தப்பு செய்கிறவரை பொறுப்பேன். அதன் பிறகு பொறுக்கிலேன்" என்றான்.

அந்த வரைக்கும் வாய்ப்புக் கொடுத்தானே என்று சந்தோஷப்படுகிறார் தமகோஷன்.

பிற்பாடு ராஜசூய யாகம் நடக்கிறபோது, பகவானைக் கண்டவாறு ஏசுகிறான் சிசுபாலன். நிந்தா ஸ்துதி என்பார்கள். நிந்திக்கிற மாதிரி ஸ்தோத்திரம் பண்ணுவது. ஆனால் ஸ்தோத்திரம் பண்ணுவது போல் நிந்தனை செய்கிறான், ஏசுகிறான் சிசுபாலன்.

பகவான் உட்கார்ந்து எண்ணிக் கொண்டிருக்கிறான். அவன் வைய வைய இவன் எண்ணுகிறான். "1, 2, 3, 4, 5, 6..." சில வசவுகளை எண்ணாமலே கூட விட்டு விடுகிறான். இப்படி எண்ணி நூறு அடைந்த பிறகு கடைசியிலே அவனை முடித்தான் பகவான்.

இதைக் கேட்டுக் கொண்டிருக்கிற நமக்குச் சந்தேகம் வரும். நூறு தப்புகளை எண்ணிய பகவான், நடுநடுவிலே ஏன் விட்டு விட்டு எண்ணினான் என்று சந்தேகம் வரும். எண்ணிக் கொண்டே வருகிறபோது, ஏற்கெனவே சொன்ன வசவு வந்தால் அதைச் சேர்த்து எண்ண மாட்டானாம்! புதிது புதிதாக என்ன வைகிறானோ, என்ன வார்த்தை வருகிறதோ அதை மட்டும்தான் எண்ணுவானாம்!

அப்படி எண்ணித்தான் நூறு ஆன பிறகு அவனை முடித்தான். 'வைதவன் உய்ந்து போனான்' என்றார் ஆழ்வார். ஆதலால் உங்களுக்கு ஸ்தோத்திரம் பண்ணத் தெரியாவிட்டால் பகவானை வையவாவது வையுங்கள் என்று ஆகிறது! அப்படி வைத சிசுபாலனுக்குக் கூட உயர்ந்த கதி கிடைத்ததே!

சக்ராயுதத்தினாலே சிசுபாலனின் தலையைத் துண்டித்து அக்ர தாம்பூலத்தைப் பரமாத்மா பெற்றான்.

யக்ஞத்தையே தரிப்பவன் அவன். யக்ஞ சம்ரக்ஷகனான விஷ்ணு நம்மையும் ரக்ஷிப்பான் என்று வேதம் காட்டுகிறது.

வேதத்திலும் இதிகாசத்திலும் பார்த்தோமானால் விஷ்ணுவுக்கு அக்ர ஸ்தானம். யக்ஞம் வேண்டாம், சரித்திரம் வேண்டாம். இதெல்லாம் விட்டுவிட்டு வேதாந்தத்துக்குள்ளே நாம் போனாலும் 32 பிரும்ம வித்யைகளிலே ஒவ்வொரு வித்யையினாலும் உபாஸிக்க வேண்டியவன் என்று யாரைச் சொல்கிறது...? விஷ்ணுவைச் சொல்கிறது!

சம்வர்க்க வித்யை, மது வித்யை, உத்தமோத்தமமாக இருக்கும்படியான பராவித்யை, அபரா வித்யா, உயர்ந்ததான பரியங்க வித்யை, சாண்டில்ய வித்யை – இப்படிப்பட்ட பெரிய பெரிய பிரும்ம வித்யைகளிலெல்லாம் உபாஸிக்கப்பட வேண்டியவன் விஷ்ணு. உபாஸகர்களுக்கெல்லாம் பலனைக் கொடுக்கக்கூடிய உபய விபூதியையும் தன் கையிலே வைத்துக் கொண்டிருக்கிறான்.

ஆழ்வார்களின் பாசுரங்களும் அதையே சொல்கின்றன.

உயர்வு அற உயர்நலம் உடையவன்
எவன்? அவன்
மயர்வு அற மதி-நலம் அருளினன்
எவன்? அவன்
அயர்வு அறும் அமரர்கள் அதிபதி
எவன்? அவன்
துயர் அறு சுடர் – அடி தொழுது
எழுஎன் மனனே!

அருள்வாக்கு

வெளிநாட்டிலிருந்து நம் தேசத்துக்கு வந்த ரேடியோ, டெலிபோன், பஸ் முதலியவற்றுக்கெல்லாம் நம் பாஷையில் வார்த்தையில்லை. பிற்பாடு இப்போது இவற்றுக்கும் ஏதேதோ புரியாத தமிழ் வார்த்தைகளை உண்டாக்கிக் கொண்டிருக்கிறோம். ஆனாலும் அது பழக்கத்தில் சரளமாக வரமாட்டேன் என்கிறது.

வேதம், யாகம் முதலியன சிலர் சொல்கிற மாதிரி தமிழ் நாட்டின் ஆதி நாகரிகத்துக்குப் புறம்பாகப் பிற்பாடு வந்தவை என்றால், யாகம், வேதம் முதலிய பதங்களுக்குச் சரியான தமிழ் வார்த்தை இருக்க முடியாது. ஆனால் மிக மிகப் பழைய தமிழ் இலக்கியங்களிலேயே 'வேதம்' என்பது 'மறை' என்றும்,



'யாகம்' என்பது 'வேள்வி' என்றும் புகழ்ந்து பேசப்படுகின்றன. இவை மிகவும் அர்த்த புஷ்டி நிறைந்த பதங்கள் என்பதை சம்ஸ்கிருத பண்டிதர்கள், தமிழ்ப் புலவர்கள் இருவருமே ஒப்புக் கொள்வார்கள். வேட்டலிலிருந்து 'வேள்வி' வந்திருக்கிறது. எல்லா தர்மத்துக்கும் வேரான வேதம், வேரைப் போலவே வெளியே தெரியாமல், அதாவது எல்லாரிடமும் புழக்கத்துக்கு வராமல், அதை ரக்ஷிப்பதற்கான கடும் நியதிகளைப் பின்பற்றும் சிலரிடமே மறைந்து இருக்க வேண்டும் என்ற உயர்ந்த கருத்தைச் சொல்லும் வார்த்தைதான் மறை. வைதிகப் பண்பாடும், யக்ஞ அனுஷ்டானமும் தமிழ் நாட்டில் ஊறிப் போயிருந்தாலொழிய அந்த நாகரிகத்தைக் காட்ட இத்தனை அழகான சொந்த மொழி வார்த்தைகள் உண்டாகியிருக்க முடியாது. வேதத்தை எழுதி வைத்துப் படிக்காமல், தலைமுறைத் தத்துவமாக வாயால் சொல்லிக் காதால் கேட்டே வைக்க வேண்டும் என்பதால் தமிழில் 'எழுதாக் கிளவி' என்ற பெயரும் வேதத்துக்கு உள்ளது. கேள்வியாலேயே பாடம் பண்ணுவதால்தான் வேதத்துக்கு சம்ஸ்கிருதத்திலும் ''சுருதி'' என்று பேர். 'மறை' என்பதைப் போல் வேத லட்சணத்தைப் பளிச்சென்று சொல்கிற நேர்வார்த்தை ஸம்ஸ்கிருதத்திலேயே இல்லை.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

மனசைக் கூப்பிடுகிறார் ஆழ்வார்! ஏ மனஸே! நம் துயரைப் போக்கக்கூடிய ஒளிமிக்க அவன் திருவடியை நீ பற்று என்று மனஸை அழைத்துப் பேசுகிறார். எவன்? எவன்? எவன்? என்று கேட்டு 'அஸ்மை அஸ்மை அஸ்மை' என்று வேதம் சொல்கிறதே – அதைத்தான் சொல்கிறார்.

'அவன் யார்?' என்றால் 'அவனே அவனும் அவனும் அவனும்' என்று பின்னால் ஒன்பதாம் திருமொழியிலே பதிலும் சொல்கிறார்.

சர்வ வேதாந்தர்யாமியாய் இருக்கிறானே விஷ்ணு – அவன்தான் உயர்வற உயர்நலம் உடையவன் – எல்லா குணங்களுக்கும் இருப்பிடமானவன்.

மயர்வற மதிநலம் – சந்தேகமே இல்லாத, தெளிவான ஞானத்தை எனக்குக் கொடுத்தவன்.

சொல்வது சரிதானா? என்ற சந்தேகம் ஒன்று ஏற்பட்டுப் போய்விட்டால் எவ்வளவு கஷ்டம்! துளிக்கூட சந்தேகமேயில்லாத ஞானம் தருகிறான் அவன்.

அயர்வரும் அமரர்கள் அதிபதி – சமஸ்த தேவதைகளுக்கும் அதிபதி – தேவாதிராஜன் – அவன் யார் என்று கேட்டால் விஷ்ணு என்று திருவாய்மொழி ஆரம்பத்திலேயே சொல்லியிருக்கிறது.

ஸாம வேதத்தில் அக்னியை ஸ்தோத்திரம் பண்ணுகிற மந்திரம் வருகிறது. மூன்றடியினால் உலகை அளந்த எவன் ஒருவன் உண்டோ, அவன்தான் இங்கே அக்னிக்கு அந்தர்யாமியாய் இருந்து யக்ஞத்தில் பிரகாசிக்கிறான். அவனை ஸ்தோத்திரம் பண்ணுங்கள் என்கிறது ஸாம வேதம். இனிமையான ஸாம வேதத்திலேயே பகவான் எழுந்தருளியிருக்கிறான். அந்த ஸாம வேதத்தையே திருவாய்மொழியாய் நமக்கு உபகாரம் பண்ணினார் நம்மாழ்வார். அதில் விஷ்ணுவின் பிரபாவம் பரக்கப் பேசப்பட்டது.

அதே மாதிரி பெரிய திருவந்தாதி என்கிற பிரபந்தம் முழுக்க உயர்ந்த அதர்வண வேதம். 'அதர்வ' என்றால் சலிக்காதது என்று அர்த்தம். இன்றைய தினம் எத்தனையோ கண்டுபிடிப்புகள், நாகரிகமான பிரயோகம் – எல்லாவற்றுக்கும் மூலம் அதர்வண வேதம்தான். அப்படிப்பட்ட உத்தமோத்தமமான வேதத்தில் சொல்லப்பட்ட விஷயமும் விஷ்ணுவைப் பரமாய் எடுத்துச் சொல்கிறது. 'எதுவுமே இல்லாத போது, அவன் ஒருவனே இருந்து சர்வத்தையும் தோற்றுவித்தான்' என்கிறது.

அடுத்து இருக்கும்படியான திருவாசிரியம் ஏழு பாசுரங்களிலே யஜுர் வேத சாரத்தை எடுத்துக்காட்டினார். யஜுர் வேதம், 'இந்த உலகத்தை காத்து ரக்ஷிப்பவன்' என்று விஷ்ணுவை எடுத்துக் காட்டியது.

திருவிருத்தம் என்று சொல்லக்கூடிய நூறு பாசுரம் ரிக் வேத சாரம்.

ஆகையால், கவனித்துப் பார்த்தோமானால் சஹஸ்ரநாமத்தில் வரக்கூடிய விஷ்ணு என்ற இரண்டாவது திருநாமம் சமஸ்த வேத சாரமான திருநாமம்.

(தொடரும்)



இலங்கை பிரச்னை:

கலைஞர் கருத்து சரிதானா?

இலங்கை பிரச்னை தீர, செக்கோஸ்லோவாக்யா பிரிந்து செக் - ஸ்லோவாக்யா என்று தனித்தனி நாடுகள் ஆனது போல, ஈழமும் இலங்கையும் பிரிந்து போவதுதான் ஒரே வழி என்று முதல்வர் கருணாநிதி கூறியிருப்பது புதிய சர்ச்சையைக் கிளப்பியிருக்கிறது.

இது பற்றி இந்திய அயலுறவுத் துறை அதிகாரியாகவும், ஐ.நா.வில் சட்ட ஆலோசகராகவும், ஐ.நா. தூதுக் குழுக்களிலும் பணியாற்றிய எஸ்.என். சின்ஹாவிடம் கருத்துக் கேட்டோம்:

"முதல் உலகப் போருக்கு முன்பு, ஆஸ்ட்ரோ ஹங்கேரியன் குழுமத்தில் ஹங்கேரி, செக், ஸ்லோவாக்யா முதலிய நாடுகள் இருந்தன. இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு, ரஷ்யர்கள் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசமாக, சோவியத் பிளாக்கில் ஓர் அங்கமாக இவை இருந்தன. 1945ல், யுனைடெட் நேஷன்ஸ் சார்ட்டர் மெம்பராகவும் செக்கோஸ்லோவாக்யா இருந்தது.

"1991ல் சோவியத் யூனியன் பிளவுபட்டு க்ரோயேஷியா, ஸெர்பியா என்று பல தனித்தனி நாடுகள் உருவானது எல்லாருக்கும் நினைவிருக்கும்.

"1992ல் செக் நாடும், ஸ்லோவாக்யா நாடும் பிரிந்து தனித்தனியே செயல்படுவது என்று இரு நாட்டு மக்களும் விருப்பப்பட்டனர். அரசியல் வட்டாரத்திலிருந்து சிறு சலசலப்பு இதற்கு இருந்தாலும், பெரிதாக எதுவும் இருக்கவில்லை. எனவே ஐக்கிய நாடுகள் சபைக்கு, தாங்களாகவே சுமுகமாகப் பிரிந்து, தனித்தனி நாடுகளாகச் செயல்படப் போவதாக விண்ணப்பம் செய்துகொண்டன. இரு நாடுகளின் மொழிகளில் மிகச் சிறிய வித்தியாசமே இருக்கும். ஒரே நாடாக இயங்குவதில் சில மனக் கசப்புகள் எழுந்த காரணத்தாலும், தத்தம் தனித் தன்மையைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற காரணத்துக்காகவும், தாமாகப் பிரிவதாக விண்ணப்பித்துக் கொண்டார்கள்.

"1993 ஜனவரியில் செக் நாடும், ஸ்லோவாக்யா நாடும் தனித் தனியே பிரிந்து, புதிய தனித் தனிக் குடியரசுகளாக ஆட்சி நடத்தப் போவதாக ஐ.நா.வுக்குத் தெரிவித்தன. ஐ.நா பாதுகாப்புச் சபை இதற்குப் பரிந்துரை செய்தது. அதன்படி இரு நாடுகளும் சுமுகமாகப் பிரிந்து, தனித் தனிக் குடியரசுகளாயின.

"இலங்கையில் நடந்து வருவது இரு பகுதிகளுக்கு இடையேயான கடுமையான போர். இதோடு செக்-ஸ்லோவாக்யா நிலைமையை ஒப்பிட்டுப் பேசுவது சரியல்ல என்றுதான் நினைக்கிறேன்."

— எஸ்.வி.என்



ஏன்?

கடவுள் ஏன்தான் இப் படிப்பட்டவர்களை வசதி யுள்ளவர்களாய்ப் படைக் கிறாரோ? என்ன ஒரு அலட் டல்? பீற்றல்? அர்த்தராத் திரியில் குடைபிடித்தல்...?

ரச்னாவுக்கு எரிச்சல் பற்றிக் கொண்டது. "என் னமா ஷோ ஆஃப் பண்றா பாத்தியா?" பக்கத்தில் நின்று கொண்டே பயணித்த ப்ரியா வின் காதைக் கடித்தாள்.

"தினமும் இந்த மும்பை ரயில்ல தாணா விலிருந்து வி.எஸ்.டி. வரை ட்ராவல் பண்றதே ஒரு டார்ச்சர்; அதுல தொண தொணன்னு இது வேற கொசுறா? ரோதனை...?" ப்ரி யாவும் நொடித்தாள்.

இருவருக்கும் பிரச்னை யானவள், அமெரிக்கன் டைமண்டுகளில் மின்னிக் கொண்டிருந்த அந்த குஜ ராத்திப் பெண்தான்! கையிலிருந்த செல்ஃபோ னில் ஓயாத ப்ளாஷ்.. ப்ளாஷ்.. ப்ளாஷ்...! முலண்டில் ஏறினால், பைகுல்லாவில் இறங்கும் வரை நொடிக்கொருமுறை அந்த மொபைல் 'கீக்கீக்கீ' என்று கொஞ்சும்; குஜராத் தியில் வளவளத்துக் கொண் டிருப்பாள்!

"சில பேர், தாங்க ரொம்ப பிஸின்னு காட்ட, வேணும்னே மொபைல் நம்பரை கண்டவங்களுக்கும் கொடுத்து, அப்பப்ப ஃபோன் பண்ணச் சொல்வாங்க; இது மூஞ்சியைப் பாத்தா அப் பிடித்தான் தோணுது..."

"பப்ளிக் நியூசன்ஸுன்னு கேஸ் போடலாமா...?"

"ஹும்... என் நம்பரை நான் அனாவசியமா யாருக் கும் குடுக்க மாட்டேன்..."

"க்கும். எங்க வீட்ல ஃபோன் இருக்கறது பக்கத்து வீட்டுக்காரங்களுக்கே தெரி யாது."

இருவரும் மாற்றி மாற்றி அலுத் துக்கொண்டனர். இவர்கள் இடித்துக் காட்டியது போதா தென்று வானமும் இவர்களுடன் கைகோத்துக் கொண்டது. திடீரென்று இடி... மின்னல்.. மழை! மும்பையின் சரித்திரத் தில் முற்றிலும் அதிசயமான நிகழ்வு! சாதாரணமாக ஜூன் பத்து தேதிக்குத்தானே பருவ மழை துவங்கும்? காற்றும் மழையும் சுழன்று வீசியதில், தண்டவாளமெல்லாம் நீரில் அமிழ்ந்தது; ரயில் முன்னேறுவதே சிரமமா யிற்று. ஓட்டுநர் பிரயத்தனப் பட்டு ஸயானிலிருந்து கிளம்பி விட்டார்; ஆமை கூட இதைவிட வேகமாக நடக் கும் போலிருந்தது; ஸயானுக்கும் மாதுங்காவுக்குமிடையே நின்றே விட்டது!

ரச்னா பதற்றமானாள். "வீட்டுக்கும் திரும்ப முடியாம, ஆபீசுக்குப் போகாம, என்னடி இப்படி மாட்டிக்கிட்டோம்? ஆபீஸ்ல இப்ப இன்ஸ்பெக்ஷன் வேற..."

"ஐயையோ... எங்க ஆபீஸ்ல முக்கியமான ஃபைல்ஸ் இருக்கற கப்போர்ட், கம்ப்யூட்டரோட மெயின் ஸர்வர் இருக்கற ரூம். எல்லா சாவியும் என் கிட்ட மாட்டியிருக்கே..." ப்ரியா அலறினாள்.

"ஏய்.. முக்கியமான ஃபைல்ஸுக் குள்ள போகறதுக்கு 'பாஸ்வர்ட்' எங்க செக்ஷன்லயே என் ஒருத்திக் குத்தான் தெரியும்." ரச்னாவுக்கு 'திக்'கென்றது. இருவரும் கையைப் பிசைந்து கொண்டு திருதிருக்க...

"மே ஐ ஹெல்ப் யூ?" அந்த மொபைல்காரிதான் செல் ஃபோனை நீட்டினாள். "ஆபீசுல யும் வீட்லயும் இன்ஃபார்ம் பண்ணணும்னா பண்ணிக்குங்க; இங்கிருந்து ட்ரெயின் இப் போதைக்குக் கிளம்பாது" - சிநேகமாகச் சிரித்தாள்.

இவர்கள் தயங்கவும், "கமான்... டேக்.. இட்... யாருக்கு அர்ஜெண்டோ அவுங்கள் லாம் யூஸ் பண்ணிக்கங்க..." என்றாள் உரக்க!



ஜெயஸ்ரீ ராஜ்


சட்டசபைக்குத் தேர்தல் நடந்தபோது சந்திரகிரி தொகுதியில் அவருக்கு டிக்கெட் தரப்பட்டது. போட்டியிட்டு, வென்று சட்டசபைக்குப் போன இரண்டாவது வருடத்தில், தம் திறமையை நிரூபித்து, அஞ்சையாவின் மந்திரி சபையில் இடம் பெற்றார். டெல்லி காங்கிரஸ் தலைமை, ஆந்திராவில் முதலமைச்சர்களை மாற்றி னாலும், வந்த முதல்வர்கள், அந்த இளைஞருக்கு மந்திரிசபையில் இடம் தரத் தவறவில்லை.

இப்படி அனைவரும் விரும்பிய அந்த இளைஞர் இன்றைய ஆந்திர முதல்வர் சந்திர பாபு நாயுடு!

சித்தூரைச் சேர்ந்த ஒரு மத்தியதர விவ சாயக் குடும்பத்தில் பிறந்தவர் அவர். வெங்க டேஸ்வரா பல்கலைக்கழகத்தில் பொருளா தாரத்தில் எம்.ஏ. படித்து முடித்தார். பல்கலைக்கழகத்தில் அவருடைய மரியா தைக்குரியவராகவும், வழிகாட்டியாகவும் இருந்தவர் பேராசிரியர் நாராயணா. கல்லூரியில் லெக்சரர் வேலை கிடைக் கும் என்று எதிர்பார்த்த அவருக்கு ஏமாற்றம். பேராசிரியர் நாராய ணாவின் ஆலோசனைப்படி அவ ரையே வழிகாட்டியாய்க் கொண்டு, பி.ஹெச்.டி. ஆராய்ச்சிக்குப் பதிவு செய்து கொண்டார்.

ஆராய்ச்சி மாணவராக இருந்தபோதே, தமது பேராசிரியர் மூலம் சித்தூர் காங்கிரஸ் எம்.பியாக இருந்த ராஜகோபால் நாயுடுவின் அறிமுகம் கிடைத்தது. அரசியலில் புகுந்து விட்டார்.

ஆந்திர அமைச்சர் என்ற முறையில் இளைஞர் சந்திரபாபு நாயுடு, ஆந்திராவின் புகழ்பெற்ற நட்சத்திரமான என்.டி. ராம ராவைச் சந்தித்தார். முதல் சந்திப்பிலேயே என்.டி.ஆருக்கு சந்திரபாபு நாயுடுவை ரொம் பப் பிடித்து விட்டது. தமது நான்கு பெண் களுள் மூத்தவரை, சந்திரபாபுவுக்குத் திருமணம் செய்து கொடுக்க முடிவு செய்தார்.



'என்னிடம் எதையும்

சந்திரபாபு நாயுடு - என்.டி.ஆரின் மகள் புவ னேஸ்வரி திருமணம் வெகு விமரிசையாக நடைபெற்றது.

என்.டி.ஆர். தனிக்கட்சி ஆரம்பித்தவுடன், தெலுங்கு தேசத்தில் சேர்ந்து, முக்கியத்துவம் பெற்றார் நாயுடு. என்.டி.ஆரின் முதுகில் குத்தி

மறைக்க முடியாது!'

விட்டு, பாஸ்கரராவ் ஆட்சியைப் பிடித்த போது, 'ஜனநாயகம் காப்போம்' என்ற இயக்கத்தை வெற்றிகரமாக நடத்தி, என்.டி.ஆர். மறுபடி ஆட்சிக்கு வர பெரிதும் உதவினார் நாயுடு. இதை என்.டி.ஆர். நன்றிப்பெருக்குடன் குறிப்பிட்டிருக்கிறார்.

- இப்படி சந்திரபாபு நாயுடுவின் வாழ்க்கையைச் சுவைபடச் சொல்லுகிறார் அண்மையில் வெளியாகியுள்ள ஆங்கிலப் புத்தகமான 'Plain Speaking'ல் பத்திரிகையாளர் செவந்தி நைனன். டெல்லி பத்திரிகையாளரான இவர், நாயுடுவுடன் இணைந்து இப் புத்தகத்தை எழுதியிருக்கிறார்.

இப் புத்தகம் முழுக்க முழுக்க நாயுடுவின் வாழ்க்கை வரலாறு என்று சொல்லிவிட முடியாது. இன்றைய அரசியல், ஆட்சி முறை, அதில் உள்ள பல்வேறு சிரமங்கள், நாயுடுவின் கனவுகள் என்று இதர அம்சங்கள் பலவும் இதில் இடம்பெறுள்ளன.

கம்ப்யூட்டர் முதலமைச்சர் என்று பெருமையுடன் குறிப்பிடப்படும் சந்திரபாபு நாயுடு, தான் ஏன் கம்ப்யூட்டரை நம்புகிறேன் என தன்னிலை விளக்கமே கொடுத்துவிட்டார் ஓர் அத்தியாயத்தில். அதில் அவர் குறிப்பிடும் சுவையான சில விஷயங்கள்:

ஒரு முதலமைச்சருக்கு, தகவல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்த என்ன அவசியம்? அவருடைய பணி, முந்தைக்கு இப்போது வெகுவாக மாறிவிட்டது. அரசாங்கத்தின் ஒவ்வொரு பிரிவிலும் ஏராளமான மாற்றங்கள்; பிரச்னைகளிலும் பலவிதமான சிக்கல்கள். 'எல்லாம் சரியாக நடைபெறும்' என்று எந்த விஷயத்தையுமே சுலபமாக எடுத்துக் கொண்டு விட முடியாது. அரசாங்கத் துறைகள் ஒவ்வொன்றிலும் என்ன நடக்கிறது என்பதை அவர் பர்சனலாக தெரிந்து கொண்டே ஆக வேண்டும். அதிலும் வணிக வரித்துறை, போக்கு வரத்து, வாகன வரித் துறை போன்றவற்றை நுட்பமாகக் கண்காணிக்க வேண்டியது மிக அவசியம். இது குறித்த விவரங்கள் அனைத்தும், முதலமைச்சரின் விரல் நுனியில் இருந்தால் அதன் எஃபெக்டே தனிதான். இது அரசு இயந்திரத்தைச் சுறுசுறுப்பாக இயங்க வைக்கும்.

நான் நாள்தோறும் என் பர்சனல் கம்ப்யூட்டரில் 132 விதமான தகவல்களை நேரடியாகக் கண்காணிக்கிறேன். மாநிலமெங்கும் உள்ள மின் உற்பத்தி, மாநிலத்தின் பல்வேறு நீர் நிலைகள், அணைக்கட்டுகளில் உள்ள நீர் மட்டம், விவசாயிகளின் தண்ணீர்த் தேவை இவை பற்றிய விவரங்களும் அவ்வப்போது வந்து கொண்டேயிருக்கும். வருவாய் மற்றும் நிதித் துறையிலிருந்து ஆறு விதமான தகவல்கள், சிவில் சப்ளை டிபார்ட்மெண்டிலிருந்து எட்டுவிதமான தகவல்கள் எல்லாம் வந்தவண்ணம் இருக்கும்.

ஒருநாள், ராயலசீமா அனல்மின் நிலையத்தில், மின் உற்பத்தி மிகக் குறைவாக இருந்தது என் கவனத்துக்கு வந்தது. உடனடியாக, சம்பந்தப்பட்டவர்களிடம் விளக்கம் கேட்டேன். அன்று மின் உற்பத்திக்குப் பயன்படுத்தும் நிலக்கரியின் தரம் குறைவு என்பதால், மின் உற்பத்தி குறைந்து விட்டது என்று விளக்கம் தரப்பட்டது. நான் சமாதானமடையவில்லை. என் கம்ப்யூட்டரில் உள்ள தகவல்களைச் சரிபார்த்தேன். என் சந்தேகம் நியாயம்தான் என்று புரிந்தது.

வேறு ஒரு குறிப்பிட்ட நாளில் எண்பத்து நாலு சதவீத உற்பத்தி நடந்துள்ளதே. அன்றும் இதே நிலக்கரிதானே! அது எப்படி சாத்தியமானது?" என்று நான் கேட்டேன். மௌனம் தான் பதிலாய் வந்தது. முதலமைச்சரிடம் எதையும் மறைக்க முடியாது என்பதை அவர் புரிந்து கொண்டார்.

இன்னொரு சமயம், வணிக வரித் துறைக்கான மீட்டிங்கில், ஒரு குறிப்பிட்ட அதிகாரியின் ஏரியாவில் வரி வசூல் குறைவுக்கு என்ன காரணம் என்று கேட்டபோது, சம்பத்திய புயலில், தென்னை மரங்கள் விழுந்து விட்டதுதான் காரணம் என்று சொன்னார் அந்த அதிகாரி. என் கம்ப்யூட்டரில் சரிபார்த்தபோது, அந்தக் குறிப்பிட்ட ஏரியாவில், விளையும் பிரதானமான பத்து பொருட்களின் பட்டியலில் கூட தேங்காய் இடம்பெறவில்லை. எனக்கு ஒன்றும் தெரியாது என நினைத்து, பொய் சமாதானம் சொன்ன அதிகாரி வசமாக மாட்டிக் கொண்டார்.

தொகுப்பு : **மௌலி**

"உங்கம்மாகிட்டேயிருந்து லெட்டர்" என்றபடி கோமளா சுவாதியை வேகமாக உள்ளே அழைத்துச் சென்றாள்.

இன்லண்ட் லெட்டரில் சுருக்கமான கடிதம்.

"அன்புத் தோழிக்கு, நலம் - நாடலும் அதுவே. இதற்குமுன் நான் அனுப்பியிருந்த கடிதம் கிடைத்திருக்குமென்று நம்புகிறேன். புயல் நிவாரண உதவிக்காக விசாகப்பட்டினம் போயிருந்த நான், இறக்கும் தருவாயில் இருந்த ஒருவரின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக ஹைதராபாத் சென்றதை நீ அறிந்திருப்பாய். அந்தக் காரியத்தைப் பொறுப்பாக நடத்திவிட்டேன். என்ன காரணமென்றே தெரியவில்லை. மனத்தில் ஒருவிதக் குழப்பம். கனவுகள் தெளிவில்லாமல் வந்தபோதுகூட மனத்தில் காரணமற்ற அதிர்ச்சியை உண்டாக்கிச் செல்கின்றன. நான் உன்னிடம் அடிக்கடிச் சொல்வேனே, ரிஷிகேஷுக்கு முன்பொரு முறை சென்றிருந்தபோது சொல்ல முடியாத அளவுக்கு மன அமைதி கிடைத்ததென்று. சில நாட்களுக்கு அங்கு சென்று இருந்துவிட்டு வர உத்தேசித்திருக்கிறேன். கோபப்படாதே. உனக்குத்தான் தெரியுமே இது போன்ற கிறுக்குத்தனங்களை அவ்வப்போது நான் செய்வதுண்டு என்று. என்ன செய்ய? இப்படி மன அமைதி என்ற டானிக்கை எப்படியாவது உடலில் ஏற்றிக் கொண்டால் தான் மற்றவர்களுக்கு உதவவேண்டுமென்ற தன்மை வளருகிறது. ராஜ்குமாரிடம் என்னை மன்னிக்கச் சொல்லிவிடு. வழக்கம் போல் அவர் இதைப் பொருட்படுத்த மாட்டார் என்பது எனக்குத் தெரியும். நீ, ராஜ்குமார், சங்கீதா இப்படி என்னைப் புரிந்துகொண்ட இதயங்கள் இருக்கும்போது எனக்கென்ன குறை? ரிஷிகேஷில் நான் தங்குமிடத்தைக் குறிப்பிடவில்லையே என்று வருத்தப்படாதே. அங்கு நான் எங்கே தங்குவேனென்று எனக்குத் தெரியாது. தெரிந்ததும் மீண்டும் லெட்டர் போடுகிறேன். உன் கடை அமோகமாக நடந்து கொண்டிருக்கும் என்பது எனக்குத் தெரியும். அனைவரையும் கேட்டதாகச் சொல். இப்படிக்கு, சத்யா".

சுவாதிக்குமாகச் சேர்த்து அந்தக் கடிதத்தை வாய்விட்டுப் படித்த கோமளாவுக்குக் கோபமும் எரிச்சலும் அலுப்பும் சேர்ந்து வந்தன. "இங்கே ஒரு புதையல் மாதிரி நீ வந்திருக்கே. அது தெரியாமல் உங்கம்மா அமைதியைத் தேடி எங்கேயோ போயிட்டிருக்காளே! என்ன செய்ய, விதி. நீ எதுக்கும் கவலைப்படாதே சுவாதி..." என்று தொடங்கியவள் பாதியிலேயே நிறுத்தினாள். 'என்ன சொல்லி இந்தப் பெண்ணைத் தேற்ற? குதிரைக்கு முன்னால ஒரு காரட்டைக் கட்டித் தொங்க விடுவார்களாம். அதைத் தின்பதற்காக குதிரை முன்னேறும். ஆனால் அந்தக் காரட் அதற்கு அகப்படவே அகப்படாது. அந்த மாதிரியாகி விட்டது இந்தப் பெண் இவள் அம்மாவைத் தேடும் நிலை. 'இதோ வந்துவிட்டாள்' என்று சத்யாவைப் பற்றி முடிவெடுக்கும்போதெல்லாம் அவள் வருகை தள்ளிப் போகிறது.'

மெதுவாக நகரத் தொடங்கிய சுவாதியின் தோளைப் பிடித்து நிறுத்தினாள். "வருத்தத்தையெல்லாம் வச்சுக்காதே.



வெளிப்படுத்திடு".

"அதெல்லாம் இல்லே ஆன்ட்டி. தரிசனத்துக்காக மணிக்கணக்கிலே வரிசையிலே நிற்கும்போதுதான் வெங்கடாசலபதியின் மகிமை தெரியுதுன்னு சொல்வாங்க. ஸ்கூலிலே நான் படிச்ச ஒரு ஆங்கிலப் பாடல் வரி ஞாபகத்துக்கு வருது.

"சில உன்னதங்களை சந்திக்கணும்னா

அதுக்கு காத்திருந்துதான் ஆகணும்."

"ஏற்கெனவே நீ பதினெட்டு வருஷங்கள் காத்திருந்துட்டே?"

"அப்போ எங்கம்மா உயிரோடு இருப்பதே எனக்குத் தெரியாதே. நிஜமான காத்திருப்புங்கறது மெட்ராஸுக்கு வந்தப்புறம் தான்".

"இந்த சத்யா சீக்கிரம் வந்தால் பரவாயில்லை. உன்னை இங்கே இலவு காத்த கிளி மாதிரி காக்க வைத்துவிட்டு அவ பாட்டுக்கு இடம் இடமாகப் போறாளே".

அருண் சரண்யா

21



சுவாதிக்கு சுர்ரென்று கோபம் பொங்கியது. "என்ன வார்த்தை சொல்லிட்டீங்க ஆன்ட்டி. பருத்தி கனியும்னு நம்பின கிளி மாதிரி நான் ஏமாந்தா போகப் போறேன்? நெவர். என் உள்ளுணர்வு என்னை இது வரை ஏமாத்தினதே இல்லே. பறக்க முடியுமாங்கற சந்தேகம் சின்ன வயசிலேயிருந்து எனக்கு உண்டு. கூடவே 'நாம எப்படியும் பறக்கத்தான் போறோம்'னு உள்ளுணர்வு சொல்லும். இப்போ நான் பைலட்டாகிப் பறக்கதான் போறேன். அது மாதிரி நான் கமர்ஷியல் பைலட்டு லைசன்ஸ் வாங்குவதற்குள்ளாவது அம்மாவை நிச்சயம் பார்த்துடுவேன்னு என் உள்ளுணர்வு சொல்லுது".

"பைலட் லைசன்ஸிலேயே விதவிதமான பிரிவுகள் இருக்கா என்ன?"

ஆன்ட்டி பேச்சை திசைதிருப்ப முயற்சிப்பது புரிந்தது என்றாலும் பதிலளித்தாள். ப்ரைவேட் பைலட் லைசன்ஸ் வாங்கினா நாம மட்டுமே விமானம் ஓட்டலாம். அதிலே பொதுமக்களை ஏத்திக்கக் கூடாது. கமர்ஷியல் பைலட் லைசன்ஸ்னா பொதுமக்கள் செல்லும் பிரம்மாண்டமான விமானங்களை ஓட்டலாம். இதிலே எது தேவைன்னாலும் முதல்லே ஸ்டூடன்ட்ஸ் பைலட் லைசன்ஸ் வாங்கணும். அதற்கு ஆர்.ஐ.ஆர்.ஏ - தேர்வுன்னு ஒண்ணு எழுதணும். இது முழுவதும் தியரி சம்பந்தப்பட்டது".

"விமானத்தின் பாகங்களைப் பற்றி விளக்குவாங்களாக்கும்"

"பஸ்ஸில் ஏறி உட்கார்ந்ததும் தூக்கம் வருது, டாக்டர்!"

"தூங்க வேண்டியதுதானே!"

"அப்புறம் பஸ்ஸை யார் ஓட்டுறது?"

- எஸ்.மோகன்



முப்பதாயிரம் ரூபாய்க்கு ஒரு புத்தகம்!

இந்தியாவில் விரல் விட்டு எண்ணக் கூடிய சிலருக்கு மட்டுமே கிடைத்திருக்கும் சிறப்பு மந்தவெளி முத்துகிருஷ்ணனுக்குக் கிடைத்திருக்கிறது. இங்கிலாந்து கேம்பிரிட்ஜிலிருக்கும் இன்டர்நேஷனல் பயாகிராபிகல் சென்டர், வருடந்தோறும் விஞ்ஞான கண்டுபிடிப்புகளைப் பற்றிய அகராதி ஒன்றை வெளியிட்டு வருகிறது. இந்த அகராதியில் இடம் பெறுவதை விஞ்ஞானிகள் பெருமையாகக் கருதுகிறார்கள். இதன் 27வது அகராதியில் முத்துகிருஷ்ணனின் பெயர் இடம் பெற்றுள்ளது.

இந்த முத்துகிருஷ்ணன், உலகம் மற்றும்

"அது மட்டுமில்லே. விமான நிலையத்தில் கட்டுப்பாடு அறை இருக்குதில்லையா? அவங்கதான் விமானத்தில் போகும்போது உபயோகமான பல தகவல்களைச் சொல்லி எந்த சிக்கலும் இல்லாம பார்த்துக்குவாங்க. அவங்களோட எந்தெந்த சங்கேத வார்த்தைகளின் மூலமாக எப்படித் தகவல் தொடர்பு வச்சுக்கிறதென்றதையெல்லாம் சொல்லித் தருவாங்க".

"அந்தத் தேர்வைத்தான் நீ எழுதிட்டே போலிருக்கே?"

"ஆமாம். நாளைக்குதான் முதல் முதலில் ஆகாய விமானத்திலே ஏறி ஓட்டப் போறேன்".

"கூடவே பயிற்சியாளரும் இருப்பார் இல்லையா? ஒரே சமயத்திலே எவ்வளவு பேர் கத்துப்பீங்க?"

"இதற்கென்றே இரண்டு சீட்கள் மட்டுமே உள்ள விமானம் இருக்கு. அதிலேதான் பயிற்சி கொடுப்பாங்க".

"உனக்கு பயமாயில்லையா சுவாதி?"

"பயமா? உற்சாகமா இருக்கு."

"அந்தவரை சந்தோஷம். எவ்வளவு நான் இப்படிப் பயிற்சி எடுத்துக்கணும்?"

"எவ்வளவு நாள்னு கணக்கு இடையாது. அறுபது மணிநேரம் நாம சிக்கலில்லாமல் ஓட்டணும். அப்போதுதான் லைசன்ஸ்."

எத்தனை பிரம்மாண்டம். தூரத்தில் இப்படித் தென்பட்ட 'புஷ்பக்' என்ற அந்தப் பயிற்சி விமானம் அருகே வரவர,

மனிதனின் தோற்றம் குறித்தக் கால அள வீடுகளை ஆராய்ச்சி செய்யும் நிபுணர்.

''புத்தர் காலத்துக்கு முன்பே அண்ட வெளியைக் (universe)குறிக்கும் வடிவமான ஸ்ரீசக்ரா உருவாக்கப்பட்டதாக ஆராய்ச்சி கள் சொல்லுகின்றன. 5000 வருடங்களுக்கு முன்னர் கட்டப்பட்ட எகிப்தின் பிரமிடு களின் அடிப்பாகம் முக்கோணம். இந்த அடிப்பாகத்துக்கு உண்டான வரைபடம் ''ஸ்ரீசக்ரா''தான் என்பதை என் ஆராய்ச்சி கள் மூலம் நிருபித்திருந்தேன். இங்கிலாந்து பத்திரிகைகள் இந்தச் செய்தியைச் சிறப்பாக வெளியிட்டிருந்தன. உலகத்தின் போக்கை யும், மனித சமுதாயத்தின் மாற்றங்களையும் சொல்லும் குறியீடுதான் ஸ்ரீ சக்ரா. ஆதிசங் கரர் இதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்டு, பல கோயில்களில், மூலஸ்தானத் தில் இதைப் பிரதிஷ்டை செய்தார்'' என்கிறார் முத்துகிருஷ்ணன். ஆனால் இவருக்கும் ஒரு வருத்தம் இருக்கிறது. இவரது ஆராய்ச்சியைச் சொல் லும் அகராதியின் விலை மூப்பதாயிரம் ரூபாய். ''உங்கள் பெயர் அகராதியில் இடம் பெற்றிருக்கிறது. ஒரு பிரதியின் விலை மூப்பதாயிரம் ரூபாய் என்று கடிதம் போட்டிருக்கிறார்கள். என்னைப் போல சாமான்யன் இத்தனை விலை கொடுத்து வாங்க முடியுமா?'' என்று கேட்கிறார் முத்துகிருஷ்ணன்.



— கௌசி

தன்னிடம் நட்புப் புன்னகை பூப்பது போலத் தோன்றியது. காப்டன் விஷ்ணு ராம் குறிப்பிட்டது நினைவுக்கு வந்தது - 'அலுமினியப் பறவை'.

இறக்கை உள்ள பறவைதான். ஆனால் மேலும் கீழும் படபடத்துக் கொள்ளாத இறக்கைகள்.

விமானத்தில் ஏறிக்கொண்டாள்.

'நான் இப்போது சிறகடிக்கும் கிளி. தடைகளை அறுத்தெறிந்து செல்லப் போகிறேன்'

கட்டுப்பாடு அறையிலிருந்து அடை யாள எண்ணைக் கேட்க, 'விக்டர் டாங்கோ' என்று தொடங்கி அடுத்து வரும் ஐந்து சங்கேத எழுத்துக்களைக் குறிப் பிட்டாள்.

'நான் புறா. வாயில் ஆலிவ் மரக்கிளை யைச் சுமந்துகொண்டு உலகெங்கும் சமாதானம் படைக்கப் போகிறேன். ஏற்றத் தாழ்வுகளே என் சமுதாயத்தில் இருக்காது. முக்கியமாக ஆண், பெண் என்று.'

பயிற்சியாளர் உத்தரவிட்டார். ''இப்போ விமானத்தின் பிஸ்டன் என்ஜினுக்கு உயிர் கொடுக்கணும். இந்த சாவியை அந்தத் துளையில் திருகு''. கீழ்ப் படிந்தாள். என்ஜின் உயிர் பெற்றது.

'ராமாயண ஜடாயு போல் நானொரு கழுகு. நல்லதற்கு எதிராக யார் செயல் பட்டாலும் பறந்து சென்று போராடி ராவணர்களை வீழ்த்துவேன்.'

''இலசாகத் த்ராட்டில் கொடு. கண்ட் ரோல் காலம் பின்பக்கம் இருக்கு பார்த் தியா''. பயிற்சியாளர் சொல்லிக்கொண்டே போனதைச் செயல்படுத்த, விமானம் முன்னேறத் தொடங்கியது.

''வெகு வேகமாக முன்னேறுவேன். என் வருங்காலம் என்னுடையதுதான். அம்மாவை ஒரு பூப்போல் வைத்துக் காப்பது இனி என் கடமை. அம்மா, நீ என்னைச் சந்திக்கும்போது எப்படி உணர் வாய்? எந்த உணர்வு அதிகமாக இருக்கும்? கணவனை இழந்த அதிர்ச்சி பெரிதாக பாதிக்குமா? அல்லது என்னைப் பார்த்த மகிழ்வு அதையும் மீறி வருமா? இவ்வளவு வருடங்கள் இவளை விட்டுப் பிரிந்து இருந்தோமே என்கிற குற்ற உணர்வு உண்டாகுமா?'

இத்தனை சிந்தனைகளையும் மீறி சுவாதி பயிற்சியாளர் கூறுவதிலும் ஆழ்ந்த கவனம் செலுத்தினாள். எதிரே தென்பட்ட அகலமான, நீண்ட கான்க்ரீட் ரன்வே வெகு வேகமாக மறைந்து கொண்டிருந்தது. ரன்வே முடிவில் பயிற்சி யாளர் கொடுத்த உத்தரவின்படி அவள் த்ராட்டிலைப் பின்புறமாக இழுக்க, விமா னம் முன்புறம் தூக்கிக் கொண்டவாறு காற்றைக் கிழித்தபடி குறுக்குவாக்கில் மேலெழும்பியது.

பயிற்சியாளர் சுவாதியின் முகத்தைக் கொஞ்சம் வியப்புடன் கணித்துக் கொண் டிருந்தார். தன் இத்தனை வருட அனு பவத்தில் முதல் நாள் விமானப் பயிற்சியில் கொஞ்சம் கூட பயரேகை இல்லாமல் அவர் பார்க்கும் முதல் மாணவி!

(தொடர்ந்து பறக்கும்)








குல்லா போட்டுக் கொண்ட கலைஞர்!

● பிறந்த நாளன்று காலை ஐந்து மணிக்கு அண்ணா சமாதிக்கு மலர் வளையம் வைத்ததில் ஆரம்பித்து அன்றிரவு பதினோரு மணி வரை கலைஞருக்கு ஓய்வே இல்லை.

● அண்ணா அறிவாலய வளாகத்தில் உள்ள கலைஞர் திருமண மண்டபத்தில் தொண்டர்களின் வாழ்த்தைப் பெற்றார் கலைஞர். வழக்கம் போல் கலைஞர் அருகில் உண்டியல் வைக்கப்பட்டிருந்தது. முதலில் அந்த உண்டியலில் 'கழக தேர்தல் நிதி' என்று எழுதப்பட்டிருந்தது. பின்னர் 'முதலமைச்சர் நிவாரண நிதி' என்று மாற்றப்பட்டது.

● சமீப காலங்களாக அற்புதமான அலங்காரமான மேடை போட்டு கலைஞரை அசத்தி வரும் சைதை கிட்டு, இந்தமுறையும் பனகல் பார்க்கில் பிறந்த நாள் பொதுக்கூட்ட மேடையை அசத்தலாக அமைத்திருந்தார். (ஜே.பி. கிருஷ்ணா உழைப்பு) மனுநீதி சோழனின் மணி மண்டபம் மேடையாக உருமாறியிருந்தது! மண்டபத்தின் வெளியில் ஆராய்ச்சி மணியின் கயிற்றை இழுக்கும் பசு! ஸ்விட்சை அழுத்தியவுடன் அட்டைப் பசு கழுத்தை உயர்த்தி,



பாம்புத் தலையில் புறா!

ராட்சத பாம்பு ஒன்று விஷத்தைக் கக்கும் போது புறா வந்து அதை அருந்துவது போலிருக்கிறதல்லவா? அதுதான் இல்லை. டெல்லியிலுள்ள ராஷ்டிரபதிபவனில் இருக்கும் பார்க்கில் வடிவமைக்கப்பட்டிருக்கும் பாம்பு போன்ற இந்த ஊற்றிலிருந்து பீச்சியடிக் கும் நீரை... தாகம் எடுத்த புறாவொன்று வேகமாக குடிக்கிறது. அவ்வளவுதான்!

— அ. சங்கரன்

உயர்த்தி கோயில் மணியடிக்க, கூட்டம் வியந்து நோக்கியது. (மணியோசை அதிக நேரம் இழுக்கவே தலைவர்களுக்குக் கொஞ்சம் சங்கடமாகப் போனது)

● கலைஞரின் நினைவாற்றலைப் பாராட்டிப் பேசினார் 'உடன்பிறப்பு' எஸ்றா சற்குணம். கலைஞர் பிறந்த நாள் விழாவில் கலந்து கொள்ளத் தனது ரஷ்ய பயணத்தைப் பாதியில் கேன்ஸல் செய்துவிட்டு வந்ததாகச் சொன்னார் அவர். "அவருடைய நினைவாற்றலுக்கு முன்னர் யாரும் போட்டியிட முடியாது. நானும் எனது நினைவாற்றலை அதிகரிக்க அமெரிக்க மாத்திரை சாப்பிட்டேன்." நினைவாற்றல் பிரமாதமாக வந்தது. போன ஜென்மமெல்லாம்கூட ஞாபகத்திற்கு வந்தது. அரசியலில் இருந்ததுகூட நினைவிற்கு வந்தது. உடனே மாத்திரை சாப்பிடுவதை நிறுத்தி விட்டேன். காரணம் நான் ஏதாவது அரசியல் கட்சியில் இருந்தது ஞாபகம் வந்து, அந்தக் கட்சி கலைஞருக்கு உடன்பாடில்லாதக் கட்சியாக இருக்கப் போகிறதே என்பதால்தான்" என்ற எஸ்றா ரஷ்யாவிலிருந்து வாங்கி வந்த குல்லாவைப் போட்டார். "கலைஞர் அரசியலில் நிறையப் பேருக்கு குல்லா போட்டிருக்கிறார். இப்போது நான் அவருக்குக் குல்லா போடுகிறேன்."

● கலைஞரின் ஆஸ்தான நண்பர் சாவி, கலைஞரின் நகைச்சுவையைப் பற்றி ரொம்பவே சிலாகித்தார். "ஒருமுறை அண்ணா மேம்பாலம் வழியாகப் போனபோது அங்கிருக்கும் சிறிய அண்ணா சிலைக்கு மூக்கு கண்ணாடியும், கையில் புத்தகமும் இல்லாததைப் பார்த்தேன். உடனே கலைஞரிடம் சொன்னேன். அவர் "நல்லா பாத்தீங்களா... கையில் புத்தகம் இல்லையா?"" என்றார். 'ஆமாம்! என்றேன். உடனே அவர் கையில் புத்தகம் இல்லையென்றால் கண்ணாடி எதற்கு? அதனால்தான் கண்ணாடியும் இல்லை'யென்றாரே பார்க்கலாம்!" என்னுள் பீறிட்டது குபீர் சிரிப்பு.

● "பக்கத்து மாநிலத்தில் ஒரு முதலமைச்சர் இருந்தார். பர்மிட், கோட்டா, தொழிற்சாலைக்கான அனுமதி என்று யாராவது வந்தால் பணம் கறக்காமல் கையெழுத்திட மாட்டார். இதற்கு ஒரு டெக்னிக்கை அவர் கையாண்டார். அதிகாரிகளை, சம்பந்தப்பட்ட நபருக்கு ஆதரவாக கோப்பில் குறிப்பு எழுதச் சொல்லுவார். தன்னிடம் அந்தக் கோப்பு வந்ததும் 'Not approved' என்று எழுதி திருப்பியனுப்புவார். முதல்வர் சம்மதிக்கவில்லை என்ற விஷயம் சம்பந்தப்பட்ட நபருக்குப் போகும். உடனே அவர் 'கவனிப்பார்'. கோப்பு முதல்வருக்கு மீண்டும் போகும் 'Not'க்கும், approvedக்கும் இடையில் ஒரு 'e' சேர்த்து 'Note approved' என்று மாற்றி விடுவார் முதல்வர்" இப்படியெல்லாம் சம்பாதித்த முதல்வர்கள் இருந்திருக்கிறார்கள்" என்றார் வைரமுத்து.

● "எமர்ஜென்ஸி காலத்தில் காமராஜரை அம்போவென விட்டு ஓடிய தலைவர்கள்தான் இன்று காமராஜர் ஆட்சி கொண்டு வருவதாகச் சொல்கிறார்கள்" என்று த.மா.காவை ஒரு பிடி பிடித்தார் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம்.

● "கணவன் - மனைவிக்குள் மனமொடிந்து குடும்பம் நடத்த முடியாவிட்டால் விவாகரத்து செய்து கொள்ள வேண்டியதுதான் வேறு வழியில்லை. இல்லையென்றால் மனைவிக்கு வேண்டிய உரிமை கொடுங்கள்" என இலங்கைப் பிரச்னையைக் குறிப்பிட்டார் தி.மு.க தலைவர். "உட்கார்ந்திருக்கும்போது தமிழர்களாக இருப்பவர்கள் எழுந்து கலைந்து செல்லும்போது, முதலியார்கள், செட்டியார்கள் என்று கலைந்து செல்கிறீர்கள். அது கூடாது. எழுந்து செல்லும்போதும் தமிழர்களாக எழுந்து செல்லுங்கள்" என்றும் வேண்டுகோள் விடுத்தார் சமத்துவபுர நாயகர்.

● வருண பகவானும் கலைஞரிடம் மிகக் கருணையோடு இருந்தார். மெல்லிய தூறல்கள் சுகமாக விழுந்து பயமுறுத்திக் கொண்டே இருந்தாலும் மழை பலமாகப் பொய்யவில்லை. இதுவும் நல்லதாகப் போயிற்று. டஜன் பேச்சாளர்களும் சுருக்கமாகப் பேசி முடித்தனர்.

● கூட்டம் முடிந்ததும், மேடையை நோக்கி விரைந்தார்கள் தொண்டர்கள். எல்லாம் பகவைப் பார்க்கத்தான் - "சீக்கிரம் வா... மாட்டை அவிழ்த்துக்கொண்டு போய் விடப் போகிறார்கள்" என்று பேசிக் கொண்டே!

— கௌசி

படங்கள்: ராஜன்



''கல்யாணி ராகத்தையும் தோடி ராகத்தையும் மிக்ஸ் பண்ணி புதுசா ஒரு ராகம் கண்டுபிடிச்சிருக்கிறேன்... கேட்கிறீர்களா?''

''யோவ்... வீட்டு வாடகையை வேணும்னா மெதுவாக் கொடு. இப்படியெல்லாம் பயமுறுத்தாதே...!''

— எம். அசோக்ராஜா

''எதுக்கு அவரைப் போட்டு இப்படி அடிச்சீங்க? முன் விரோதமா?''

''அதெல்லாம் ஒண்ணும் கிடையாது. காணவில்லைன்னு என் மனைவி பற்றி பார்மஸிக்கு விளம்பரம் குடுத்தா, ரொம்ப சின்ஸியரா தேடிக் கண்டுபிடிச்சுக் கொண்டு வந்து சன்மானமும் கேட்கிறார்!''

— அம்பை தேவா





''சிறப்பு நீதிமன்றத்துல ஏன் திடீர், திடீர்னு 'டமால்'னு சத்தம் கேட்குது?''

''அரசு தரப்பு சாட்சிகள் பல்டி அடிக்கற சத்தம்தாங்க அது!''

— பாஸ

''கட்டுக்கடங்காமல் கூட்டம் வந்திருக்கே! என்ன விஷமம் செய்தாய் அப்பனே?''

''பெரிதாக ஒன்றுமில்லை குருவே... இன்று உங்க ஆன்மீக உரையைக் கேட்க சிம்ரன் வரப் போவதாகப் புரளியைக் கிளப்பிவிட்டேன்!''

— உ. ராஜாஜி



தவிக்கிறார்கள் தங்கவயல் தமிழர்கள்!

கோலார் தங்கச் சுரங்கத்தை மூடிவிடக் கூடாது என்றும், சுமார் இரண்டு லட்சம் தமிழர்களைத் தவிக்க விட்டு விடக் கூடாது என்றும் கர்நாடக சட்டசபையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பிஜிஎம்எல் (பாரத் கோல்ட் மைன்ஸ் லிமிடட்) தங்கச்சுரங்கத்தை மூடத்தான் வேண்டும் என்று மத்திய அரசு பிடிவாதமாக இருக்க, ஊழியர்களோ தொடர்ந்து நடத்தி லாபம் காட்ட முடியும் என்று உறுதியாக இருக்கிறார்கள். உண்மை நிலையை அறிய அங்கு விசிட் அடித்தோம்.



• அன்பழகன்



• சன்னமாலிகே


தமிழில் போஸ்டர்களும், சுவரில் பொதுக் கூட்ட அழைப்புகளுமாக, இலேசான வெயிலில் கோலார் தங்கவயல் நகரம் அமைதியாக இருக்கிறது.

தலைமை அலுவலகத்தில் நமக்கு விளக்கம் அளிக்க முன்வந்தார் முக்கிய அதிகாரிகளில் ஒருவரான எச். சன்னமாலிகே.

"இதுவரை 800 டன் தங்கத்தை இந்தச் சுரங்கங்களிலிருந்து எடுத்திருக்கிறோம். 1891 முதல் 1900 வரை கிட்டதட்ட 90,000 கிலோ தங்கம் கிடைத்து வந்தது. அதன் தரம் (கிரேடு) 47.50 இருந்தது. ஆனால் கடந்த பத்து ஆண்டுகளில், கிடைத்தத் தங்கம் மொத்தம் 5229 கிலோதான். அதன் தரமும் ஒரேயடியாகக் குறைந்து 3.14 கிரேடுக்கு வந்து விட்டது! இத்தனைத் தரம் குறைந்த, ஐயாயிரத்துச் சொச்சம் கிலோ தங்கத்தை எடுக்க, 16,65,681 டன் உலோக தாது (ore) வெட்டி எடுக்க வேண்டும்! இது எவ்வளவு விரயமான வேலை!

"ஏப்ரல் முதல் தேதியிலிருந்து எந்தச் சுரங்கத்திலும் வேலை நடைபெறுவதில்லை. ஆனால் 4000 ஊழியர்களுக்குச் சம்பளம் தருகிறோம்! எந்த மாற்றுத் திட்டத்துக்கும் ஊழியர்கள் இதுவரை சம்மதிக்கவில்லை. புதிய, திருத்தியமைக்கப்பட்ட சம்பள விகிதம்; ஊழியர்களைக் குறைக்கக் கூடாது; இப்போது இருக்கிற உரிமைகள் மீது கை வைக்கக் கூடாது என்ற மூன்று அம்சங்களை அவர்கள் வலியுறுத்துகிறார்கள்.

"ஆனால் 1987ல், மத்திய அமைச்சரவை, லாபம் தராத



* நுழைவு வாயில்



* ஸ்வர்ண பவன்



சுரங்கங்களைப் படிப் படியாக மூடி, 1994க்குள் கோலார் தங்கச் சுரங்க வேலைகளை முழுதுமாக நிறுத்திவிட வேண்டும் என்று தீர்மானித்தது. இதன் படி சாம்பியன், மைசூர் சுரங்கங்கள் மூடப்பட்டன. இப்போது நந்திதுர்க் சுரங் கத்தைச் சேர்ந்த நியூகோல் கொண்டா சுரங்கத்தை மார்ச் 31ஆம் தேதியோடு நிறுத்தி விட்டோம்.

"இந்திய அரசு எந்தவித நிதி உதவியும் அளிக்க இய லாது என்ற நிலையில்தான் 1992ல் பிஐஎஃப்ஆர் எனப் படும், நலிவுற்ற தொழிலகங் களை உயிர்ப்பிக்கும் அமைப்புக்கு, எங்கள் நிறு வனம் பரிந்துறை செய்யப் பட்டது. 1997ல் ஆபரேடிங் ஏஜென்சியாகப் பொறுப்பு ஏற்றுக் கொண்ட ஐசிஐசிஐ நிதிநிறுவனம் ஒரு புனரமைப்புத் திட்டத்தை அரசுக்கு அளித்தது. அதன்படி 200 கோடி ரூபாய் மத்திய அரசு கொடுத்து உதவ வேண்டும். ஆனால் எந்தவித நிதி முதலீடும் செய்ய மத்திய அரசு தயாரில்லை என்று தெரிவித்துவிட்டது. மாறாக, எல்லோரும் ஏற்கக்கூடிய ஒரு திட்டத்தின் கீழ், ஒரு கோ-புரமோட்டரை, ஜாயின்ட் வெஞ்ச்சர் அடிப் படை யில் பரிந்துரை செய்யு மாறு கேட்டது. இதற் கிடையில், 1994ல் அதிகப்படியாக இருப்பதாகக் கண்டறியப்பட்ட ஊழியர்களுக்கு முன்பணி ஓய்வு (வி.ஆர்.எஸ்) கொடுக்க நிறுவனம் முன் வந்தது. இதில் சுமார் 2000 ஊழியர்கள் வெளியே வந்தார்கள். ஆனால் மத்திய அரசு விரும்பிய கூட்டு நிர்வாகத் திட்ட முயற்சிகள் தோற்றன.

"பிஐஎஃப்ஆரும் ஐசிஐசிஐயும் மீண்டும் எடுத்த புனர்வாழ்வு முயற்சிகளை மத்திய அரசு ஏற்கத் தயாராயில்லை. சுரங்கத்தை மூடுவதே வழி என்றது!

"சமீபத்தில் தங்கச் சுரங்க ஆபீசர்கள் அசோசியேஷனும், ஊழியர்கள் சங்கமும் இணைந்து, பிஐஎஃப்ஆர் இடம் ஒரு புனரமைப்புத் திட்டத்தை அளித்துள்ளன. இதற்கும் சுமார் 100 கோடி ரூபாய் தேவைப்படும். இந்தக் கூட்டுறவு முயற்சியில், மூன்றில் ஒரு பங்குத் தொகையை அதிகாரிகளும், ஊழியர்களும் கொண்டு வர வேண்டும் என்கிறது பிஐஎஃப்ஆர். இப்போது அரசு எல்லா ஊழியர்களுக்கும் விஆர்எஸ் திட்டத்தை அமல்படுத்த முன் வந்து கடிதம் எழுதியுள்ளது. 310



* வெங்கடப்பா



* முனியப்பா

மட்டுமே இதை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

ஊழியர்கள் போராட்டக் குழுவின் தலைவர் கு. அன்பழகனிடம் "வி.ஆர்.எஸ். தொகை பெறுவது லாபகரமானதாக இருந்தால், ஏற்பது நல்லதுதானே?" என்று ஆரம்பித்தோம்.

"அவர்கள் அதிகபட்சமாகத் தருவது ஒன்றேகால் லட்சம்தான். ஐம்பதாயிரம் ரூபாய் அளவுக்கு ஒவ்வொருவரும் கமிட்மென்ட் வைத்திருக்கிறார்கள். ஆகவே எப்படி நிறுவனத்தை விட்டு விலகுவது?" என்று கேட்டார்.

"கோலார் தங்கச் சுரங்கத்தை இன்னும் 100 வருடங்களுக்கு நடத்த முடியும் என்று நிபுணர்கள் பலர் சொல்லியிருக்கிறார்கள். இதற்கான சான்றுகளை நான் காட்ட முடியும்.

"94ல் இங்கே வந்தது பார்லிமென்ட் சப் கமிட்டி- சுசிலா கோபாலன் எம்.பி தலைமையில். அவர்களும் 60 வருடங்களுக்கு லாபகரமாக நடத்தலாம் என்று எழுதியே வைத்திருக்கிறார்கள். டேவிபிரௌன் ஜான் எனும் ஆஸ்திரேலிய நிறுவனம்கூட இதையே சொல்லியிருக்கிறார்கள். இதை எல்லாம் அரசு ஏற்கக்கூட இல்லை!" என்று பொருமுகிறார் அன்பழகன்.

"எங்கள் அதிகாரிகளும், ஊழியர்களும் லாபகரமாக இதை நடத்த முடியும் என்று ஒரு திட்டம் அளித்தோம். புனரமைப்புக்காக ஐசிஐசிஐ கேட்பது 200 கோடி ரூபாய். நாங்கள் கேட்பதோ இருபதே கோடி ரூபாய் தான்! ஆறு வருஷத்துக்கு நாங்கள் கம்பெனியை லாபத்தில் நடத்திக் காட்டுகிறோம்! மண் மேட்டிலிருந்து 40 டன் தங்கம் எடுக்க ஐந்து கோடி ரூபாய் மட்டுமே போதும். இந்தத் திட்டத்தை அரசிடம் கொடுத்தும், கவனிக்கவில்லை, இதுவரை.

"1880லிருந்து 802 டன் தங்கம் எடுத்திருக்கிறோம். இதுவரை அதன் மதிப்பு 40,000 கோடி ரூபாய். இந்த நகரத்தை உருவாக்க விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அறுபத்து ஐந்து. 6772 தொழிலாளர்களுக்கு ஊனம் ஏற்பட்டிருக்கிறது. 19,000 பேர் நுரையீரல் நோயில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இங்கே தமிழர்கள்தான் அதிகம் என்பதால், மாநில அரசும் உதவ முன் வரவில்லை.

"ப. சிதம்பரம் மத்திய நிதி அமைச்சராக இருந்தபோது, ஏழு கோடி ரூபாய் நிதி உதவி கோரினோம். அன்று உதவியிருந்தால் இன்று கோலார் தங்கவயல் தமிழர்கள் வாழ்க்கை ஒளிமயமாக இருந்திருக்கும். ஆனால் மறுத்துவிட்டார். 80 கிலோமீட்டர் தூரத்துக்குத்தான் சுரங்கம் தோண்டியிருக்கிறோம். இன்னும் உள்ள 72 கிலோமீட்டர் தூரத்தில் எத்தனை டன் தங்கம் இருக்கிறதோ? எத்தனை வருடங்கள் எடுக்கலாம்!

"மத்திய அரசுக்கு சப்ஸிடி லோன் கணக்கில், 31 கோடி ரூபாயை தண்டனை வட்டி (Pen interest) யாகக் கட்டிவருகிறது பிஜிஎம்எல். 17 கோடி ரூபாய் மின்சார பில் கட்டுகிறோம். 9 கோடி ரூபாய் டிப்ரிஸியேஷன் தொகை. இந்த மூன்றையும் மத்திய அரசு தள்ளுபடி செய்துவிட்டால், இன்னும் லாபகரமாக நாங்கள் நடத்திக் காட்ட முடியும்.

"இந்தியாவில் இருக்கிற மத்திய, மாநில பொதுத் துறை நிறுவனங்களில் எல்லாம் அரசாங்க முதலீடு இருக்கிறது. ஆனால் கோலார் தங்கச் சுரங்கமான பிஜிஎம்எல்லில் ஒரு பைசாகூட இன்வெஸ்ட்மென்ட் இல்லை! மாநில அரசிடமிருந்து மத்திய அரசு இதை எடுத்துக் கொண்டபோது, மாநில அரசுக்கு ஈடாகக் கொடுத்த தொகை எவ்வளவு தெரியுமா? வெறும் மூன்று கோடி ரூபாய்!

"பிஜிஎம்எல் திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருகிறது. அரசியல் காரணம்தான் இந்த ஊர் அழிய வழி செய்கிறது. வேறு எதுவுமில்லை.

லாராவின் காதலர்



இவர் பெயர் கெலி டோர்ஜி. நேபாளத்தைச் சேர்ந்தவர். மாடலிங் இவரது தொழில். இவரது சிநேகிதிதான் மிஸ் யூனிவர்ஸ் கிரீடம் சூட்டப்பட்டுள்ள லாரா தத்தா. இரண்டு பேரும் ஒன்றாக பேஷன் ஷோக்களில் பங்கேற்றது உண்டு. பார்ட்டிகளுக்குப் போய் நடனமாடியது உண்டு. மிஸ்யூனிவர்ஸ் போட்டி, சைப்ரஸ் நாட்டில் நடந்தபோது, லாராவை ஊக்கப்படுத்த, லாராவின் பெற்றோருடன் இவரும் சென்றிருந்தார். லாராபற்றி இவரது காமண்ட் "லாரா புற அழகு மட்டுமில்லை அக அழகும் நிறைந்தவள்"

- எம்.



தொண்டர் 1 : செங்கல்பட்டு பொதுக் கூட்டத்தில் தலைவர் அழுதுட்டாராமே! ஏன்?

தொண்டர் 2 : ஐம்பது பேருக்கும் மேல் கூட்டம் வந்திருப்பதைப் பார்த்ததும் கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டுட்டார்... அவ்வளவுதான்!

- உ. ராஜாஜி

"97ல் சிதம்பரம், மூப்பனார், கலைஞர் ஆகியோரிடம் டில்லியில் மனு கொடுத்தோம். பிறகு மாறன், என்.டி. சண்முகம், வைகோ, டாக்டர் ராமதாஸ், செஞ்சி ராமச்சந்திரன் எல்லோரையும் பார்த்துப் பேசினோம். ஒருவர்கூட அக்கறை காண்பிக்கவில்லை. இப்போது இலங்கைத் தமிழர்களுக்கு உதவ வேண்டும் என்று கூறுகிறவர்கள் கண்களுக்கு, இந்தத் தங்கவயல் தமிழர்கள், தமிழர்களாகத் தெரியவில்லையோ, என்னவோ!"

பெங்களூரில், கர்நாடக சட்டசபை அவைத்தலைவர் எம்.வி. வெங்கடப்பாவைச் சந்தித்தோம்.

"கோலார் தங்க வயலில் இன்னும் தங்கம் இருக்கிறது என்பது உண்மை. இப்போதைக்கு உடனடியாக லாபம் எதுவும் கிடைக்காதுதான். இப்போதைக்கு மத்திய அரசு தொடர்ந்து நடத்துவது என்றுதான் முடிவு எடுத்திருக்கிறது. உடனே மூடிவிடும் உத்தேசம் எதுவும் இல்லை என்று நம்புகிறேன்" என்றார்.

வரப் போகிற பஞ்சாயத்துத் தேர்தல் சமாசாரங்களில் மூழ்கி, ஏராளமான கட்சித் தொண்டர்களிடம் பேசிக் கொண்டிருந்த கோலார் நாடாளுமன்ற உறுப்பினர் கே.எச். முனியப்பாவிடம் பேசினோம்.

"பத்துப் பேர் கொண்ட தூதுக்குழு ஒன்றைப் போன வாரம்தான் டில்லிக்கு அழைத்துப் போய், மத்திய மின்சார சுரங்கத் துறை அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலத்தைப் பார்த்தோம். கோலார் அதிமுக சட்டமன்ற உறுப்பினர் பக்தவத்சலமும் வந்திருந்தார். பிரதமரை சந்தித்துப் பேசினோம்.

"ரங்கராஜன் குமாரமங்கலம் இதற்கு ஒரு தீர்வு காணுவதாகச் சொல்லி இருக்கிறார். இதற்கிடையே பிஜிஎம்எல் ஆபீசர்களும், ஊழியர்களும் ஆறு மாதம் டயம் கேட்டிருக்கிறார்கள். எடுத்து நடத்தி, லாபமும் காண்பிக்க முடியும் என்று அவர்கள் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்கள்! என்றார் முனியப்பா.

"தங்கச் சுரங்கத்தை இழுத்து மூடும் எண்ணம் துளிகூட இல்லை! நூறு வருடங்கள் இன்னும் தங்கம் கிடைக்கும் அங்கே. நஷ்டம் வர காரணம் இருக்கிறது. அதுதான் மத்திய அரசின் கோல்டு பாலிஸி. அந்த பிரைஸ் பாலிஸிபடி, பிஜிஎம்எல் நிர்வாகம் ஒரு குறிப்பிட்ட விலைக்குத்தான் தங்கத்தை பம்பாயில் விற்க வேண்டும் என்கிறது. இதனால் நிர்வாகத்துக்குச் சுமார் 600 கோடி ரூபாய் நஷ்டமாகி இருக்கிறது.

"மத்திய அரசு 25 கோடி ரூபாய் முதலீடு செய்தாலே போதும். ஆறு மாதங்களுக்குள் கம்பெனியை லாபகரமாக நடத்த முடியும். அதற்குப் பிறகு அரசிடம் கையேந்த வேண்டியதில்லை. அடுத்த சாய்ஸ் ஜாயின்ட் வெஞ்ச்சர். கூட்டுறவு சங்கம் அமைத்து, ஜாயின்ட்வெஞ்ச்சர் பார்ட்னருடன் சேர்ந்து நிச்சயம் லாபகரமாக நடத்த முடியும். கர்நாடக அரசே இந்த நிறுவனத்தை ஏற்றுக் கொண்டு, அதன் பல துறைகளைக் கொண்டு புனர் அமைப்பு வேலைகளில் முழுமூச்சாக இறங்கினால்கூடப் போதும். பாரத் கோல்டு மைன்ஸ் லிமிடெட் மூடுவதற்கு எந்தவித நியாயமும் இல்லை. மூடவும் விட மாட்டோம்!" என்று முடித்தார்.

பின் குறிப்பு : கடைசியாகக் கிடைத்தத் தகவலின்படி, தொழில்துறையின் மத்திய நாடாளுமன்றக் குழு, பெங்களூருக்கு வந்து, கோலார் தங்கச் சுரங்கம் உட்பட பல தொழில் பிரச்னைகளை முதல்வர் எஸ்.எம்.கிருஷ்ணாவிடம் விவாதித்திருக்கிறது. தங்கச் சுரங்கத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்று, அனைத்துக் கட்சிகளின் தீர்மானத்தைச் சட்டமன்றத்தில் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி வைத்த முதலமைச்சர், சாதகமான ஒரு முடிவை எடுக்க, குழு சிபாரிசு செய்யக் கேட்டுக் கொண்டிருக்கிறாராம்.

கட்டுரை/படங்கள்: **சாருகேசி**



மாணவிகள் மனம் வைத்தால்...

குழந்தைகளுக்கான சத்துணவுக் கூடமும், பால்வாடி பள்ளியும் இணைந்த இடம். அந்தக் கட்டடத்தின் நிலைமையோ பரிதாபத்துக்குரியது. கூரையில் பாதி வானம் பார்க்கும். தரையில் பெருச்சாளிகளின் கபளீகரம். எதைப் பற்றியும் கவலைப்படாமல், அங்கே சுமார் அறுபது குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கப்படும். இந்த நிலைமை எங்கே தெரியுமா? சென்னை தேனாம்பேட்டையில், சுமார் மூவாயிரம் பேர் வசிக்கும் குடிசை மாற்று வாரிய குடியிருப்பில்தான்!

இந்த நிலைமை சில மாதங்களுக்கு முன்பு வரை! ஆனால் இன்று, பால்வாடியும் சத்துணவுக் கூடமும் புதுப்பிக்கப்பட்டு நல்ல நிலைமையில் இருக்கின்றன. இதற்குக் காரணம் மூன்று கல்லூரி மாணவிகள். ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரியின் எம்.ஏ. சமூகப்பணி மாணவிகளான ஜெயந்தி, தேவி, சிஸ்டர் ஆலிஸ் ஆகிய மூவரும்தான் அவர்கள். தங்கள் படிப்பின் ஒரு பகுதியாக ஏதாவது ஒரு குடிசைப் பகுதிக்குச் சென்று சேவை செய்ய வேண்டும் என்ற விதியின்படி, திருவி.க. குடியிருப்புக்குச் சமூகப்பணி செய்ய வந்தவர்கள்.

சென்ற வருட ஆரம்பத்தில், அவர்கள் தங்கள் பணியைத் துவக்கியபோது, அங்கிருந்த சத்துணவுக் கூடத்தின் நிலை கண்டு, அதிர்ந்து போனவர்கள், எடுத்துக் கொண்ட முயற்சியின் விளைவுதான் புது சத்துணவுக் கூடக் கட்டடம்!

வாரத்துக்கு மூன்று நாட்கள், கல்லூரிக்குச் செல்லுவதற்குப் பதிலாக அவர்கள் இந்தக் குடியிருப்புக்கு வந்து பணியாற்றினார்கள். ஒவ்வொரு குடும்பத்தையும் தனித்தனியே சந்தித்து, தனிப்பட்ட பிரச்னைகள், பொதுப் பிரச்னைகள் பற்றிக் கேட்டறிந்து, நடவடிக்கை மேற்கொண்டனர்.

"நாங்கள் மிகவும் பயனுள்ள வகையில், இக் குடியிருப்பு வாழ் மக்களுக்கு உதவ முடிந்தது என்றால் அதற்கு முக்கிய காரணம் எக்ஸ்னோரா அமைப்புதான். அவர்கள் இப் பகுதியை ஒரு முன் மாதிரி குடியிருப்பாக மாற்றத் திட்டமிட்டும் செயல்பட்டார்கள். நாங்கள் அவர்கள் உதவியுடன், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும், அரசுத் துறைகளுடனும், லயன்ஸ் கிளப் போன்றவற்றுடனும் கலந்து பேசி தீர்வு காண முடிந்தது.

"குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் பலவற்றில் படிக்கட்டுகள், தரை, கதவுகள் ஆகியவை பழுதடைந்திருந்தன. இவை சீரமைக்கப்பட்டன. தெரு விளக்குகள் அமைக்கப்பட்டன. சாலை வசதி செய்து தரப்பட்டது.

"இவை தவிர, இப்பகுதி இளைஞர்கள் முன்னேற்றத்துக்கென, வாழ்க்கையில் வெற்றி பெறுவது எப்படி? என்ற சிறப்புப் பயிற்சி முகாம் நடத்தினோம். 400க்கும் மேற்பட்டவர்கள் பயனடையும்படி ஒரு மருத்துவ முகாம் நடைபெற்றது. பெண்களுக்காக, குறைந்த செலவில் சத்தான, சுவையான உணவு தயாரிப்பது எப்படி என்ற பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. இதுபோன்ற பொதுவான உதவிகள் தவிர, ஊனமுற்றவர்களுக்கு மூன்று சக்கர வண்டிகள், ஐந்து பெண்களுக்கு தையல் மிஷின் என்று தனிப்பட்டவர்களுக்கும் உதவிகள் செய்யப்பட்டன'' என்கின்றனர் மூன்று பெண்களும்.

எக்ஸ்னோராவின் உதவிதான் இத்தனைக்கும் ஆதாரம் என்று மாணவிகள் சர்டிபிகேட் கொடுத்தாலும், "இதனை பாடதிட்டத்தின் ஓர் அங்கம் என்று கடமையாய் நினைக்காமல், விடுமுறை நாட்களிலும் வந்து பணியாற்றிய இந்த மாணவிகளின் ஈடுபாடு அபாரமானது" என்கிறார் எக்ஸ்னோரா ஒருங்கிணைப்பாளரான கோவிந்தராஜ்.

— மானஸா

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)

RPG - HMV

பெருமையுடன் வழங்கும்

PURE GOLD

(Premium Range of Sangeetha)

உங்களுக்கு மிகவும் பிடித்த அபிமான பக்தி
பாடல் தொகுப்புகளை ஒரு தொடரில்
அமைத்து, கீழ்க்கண்ட தொழில் நுட்ப
மேம்பாட்டுடன் புதுப்பித்து வழங்குகிறோம்.

- பிரபலமான என்றென்றும் இனிய பக்தி இசைத் தொகுப்புகள்
- டிஜிட்டல் முறையில் புதுப்பிக்கப்பட்டு மறுபதிவு செய்யப்பட்டவை
- 60 நிமிடத்துடன் தெவிட்டாத செவி விருந்து
- தரமான உதிரிப் பொருட்களை கொண்ட கேசட்டுகள் மற்றும் உயர்தர ஒலிநாடா
- உயர்தர பேக்கிங் மற்றும் கவர்ச்சியான தோற்றம்
- ஒட்டு மொத்தமாக பார்த்தால் சர்வதேச பொருள்தரம் கொண்ட ஒலிநாடா
- இன்றே வாங்கி, கேட்டு மகிழவும் !



எல்லா கடைகளிலும் கிடைக்கும்

RPG HMV

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 *
Registered No. TN / Chief PMG-141 / 2000 * Licensed to post without prepayment
under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka



ஃபேர்னஸ் க்ரீம்களில் உள்ள கெமிக்கல்களின் கோரத் தன்மையை அறிவீர்களா?

உங்களுக்கு தெரியாமல் இருக்கலாம். நிறைய கெமிக்கல் ஃபேர்னஸ் க்ரீம்களில் ஹைட்ரோக்வினோன், ஹைட்ரஜன் பெராக்ஸைடு மற்றும் அமோனியா ஆகியவை அடங்கியுள்ளன.

கடுமையான ஒயிட்டனிங் ஏஜென்ட்ஸ் உள்ளதால் உங்களுக்கு தற்காலிக சிகப்பழகு மட்டுமே தரும். அதோடு, உங்கள் மேனியின் இயற்கையான ஈரப்பதத்தை காணாமல் போகச் செய்து விடும். எனவே, மேனி பொலிவிழந்து, ஜீவனிழந்து காணப்படும்.

தொடர்ந்து பயன்படுத்தினால், சருமத்தில் வெடிப்புகள் ஏற்பட்டு விடும். சீக்கிரமே வயதாகி விட்டது போல, தோற்றத்தில் சில அறிகுறிகளும் தென்படும். அதுவும், நீங்கள் உணரும் முன்பே தெரிய ஆரம்பிக்கும்.

ஆகையால், நிறைய கெமிக்கல் ஃபேர்னஸ் க்ரீம்களில்,பேக்குகள் மீது உட்பொருட்களைப் பற்றிய விவரங்கள் இல்லாதிருப்பதில் ஆச்சரியமில்லை.

ஸ்பெயின் நாட்டு குங்குமப்பூவின் அற்புதம்.

இமாமி நேச்சுரலி ஃபேர் க்ரீமில் இப்பொழுது விலைமதிப்பற்ற ஸ்பெயின் நாட்டு குங்குமப்பூ அடங்கியுள்ளது. இது உலகிலேயே பரிசுத்தமான, மிக அரிதான ஒன்றாகும். அதோடு, சிகப்பழகை அதிகரிக்கும் அற்புதமான நற்குணங்களுக்காக சிறந்த பாராட்டையும் பெற்றுள்ளது.

மேலும் 11 வேறு அரிய மூலிகைகளுடன் இணைந்து, மேனியில் உள்ளுக்குள்ளேயே ஆழ்ந்து செயல்பட்டு நீடித்து நிலைத்திருக்கும் கூடுதல் சிகப்பழகை தருகிறது.

பால், வெள்ளரி மற்றும் தேங்காய்ச் சத்துக்கள் உங்கள் மேனிக்கு ஈரப்பதம் அளிக்கிறது. சந்தனம் இதமளித்து மேனியை மாசற்றதாக்குகிறது. அதிமதுரம் மேனிக்கு புதுப்பொலிவு தருகிறது. அலோ வேரா, மேனியை கறுப்பாக்கும் சூரிய கதிர்களிடமிருந்து பாதுகாக்கிறது.

எனவே, பக்க விளைவுகள் இல்லாமல் உங்களுக்கு நீடித்து நிலைத்திருக்கும் சிகப்பழகு கிடைக்கிறது.



"கெமிக்கல் ஃபேர்னஸ் க்ரீம்ஸ் உங்கள் மேனிக்கு கெடுதல் ஏற்படுத்துகின்றன. எனவேதான், நேச்சுரலி ஃபேர் போன்ற ஹெர்பல் க்ரீமை மட்டுமே நான் சிபாரிசு செய்கிறேன்."

Dr. ஹைரோ இனாமுரா, இயக்குனர், ரிசர்ச் சொஸைட்டி ஃபார் ஆயுர்வேதா, ஒஸாகா, ஜப்பான்.

இயற்கையான சிகப்பழகு
வெறும் 4 வாரங்களில்



இமாமி நேச்சுரலி ஃபேர்

ஹெர்பல் ஃபேர்னஸ் க்ரீம்



கடுமையான கெமிக்கல்ஸ் இல்லை. 100% ஹெர்பல்.

ஒவ்வொரு 50 மி.லி. பேக்குடனும் ரூ. 19/- மதிப்புள்ள இமாமி நேச்சுரலி ஃபேர் ஃபேர்னஸ் டால்க் இலவசம். ஒவ்வொரு 15 மி.லி. மற்றும் 25 மி.லி. பேக்கிலும் 50% அதிகம்.

ENTERPRISE NEXUS 3490TM

இச்சலுகை சரக்கு உள்ள வரையே. இச்சலுகை இல்லாத சரக்கும் கிடைக்கும்.